www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 | செப்ரம்பர் 2005 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 83



## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சில முக்கிய கேள்விகள்!

## கனவான்களே! பதில் கூறுங்கள்!

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முடிவாகி விட்டது. இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகளில் இருந்தும் வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் இறங்கி விட்டனர். இது ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல். முதல் தடவை ஜே.ஆர். தேர்தல் வைக்காமலே ஜனாதிபதி ஆனவர். பின்பு ஆர். பிரேமதாசாவின் மறைவுடன் டி.பி.விஜயதுங்கா ஜனாதிபதியாக நியமனம் பெற்றவர். மொத்தம் இருபத்தி ஏழு வருடங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியின் கீழ் நாடு இருந்து வந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கும் கனவான்களே! கடந்த இருபத்தேழு ஆண்டுகளில் உங்கள் ஆட்சிகளின் மூலம் இந்த நாட்டிற்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் சாதித்துக் கொடுத்தவைகள் எவை? உங்களது ஆட்சிகளில் நீங்களும் பங்குதாரர்களாகப் பதவிகள் வகித்து அதிகாரத்தை சுவைத்து வந்தவர்களே நீங்கள். நமது நாட்டையும் மக்களையும் தேசிய இனங்களையும் புதிதாக ரட்சிக்க வந்த "தேவதூதுவர்களா" நீங்கள். கடந்த கால பொய் வாக்குறுதிகளுக்கும் ஏமாற்றுக்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் நீங்களும் பங்குதாரிகளே. அமெரிக்க ஏகாதிபத்திய அரவணைப்புக்கும் பல்தேசிய கம்பனிகளின் வருகைக்கும் ஒட்டு மொத்தச் சுரண்டலுக்கும் நீங்களும் பாத்திரவாளிகளே. இந்திய பிராந்திய மேலாதிக்கத்தின் பொருளாதார அரசியல் ராணுவ ஊடுருவல்களுக்கு வழிகள் ஏற்படுத்திக் கொடுத்ததில் நீங்களும் தரகர்களேயாவர். உலக வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் உலக வர்த்தக அமைப்புக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் நாட்டை அடகு வைப்பதற்கு கையெழுத்துப் போட்ட கூட்டத்தில் நீங்களும் மகிழ்ச்சி பொங்க நின்றவர்கள். இவற்றை எல்லாம் மக்களின் கண்களில் இருந்து மறைப்பதற்கு தேசிய இனப்பிரச்சினையை கொடூர யுத்தமாக்கி தமிழ்த் தேசிய இனத்தின் மீதும் முஸ்லீம்- மலையகத் தமிழ் தேசிய இனங்கள் மீதும் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறைகளை நடாத்தி வந்த ஆட்சிகளில் அமைச்சர்களாகவும் பிரதமர்களாகவும் இருந்தவர்கள் அல்லவா நீங்கள்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## மேல் கொத்மலைத் திட்டத்தை கைவிடு! ஒரு மாத எதிர்ப்பு பிரகடனம்!!

மேல் கொத்மலைத்திட்டத்தை முற்றாக கைவிடும்படி வற்புறுத்தி அடுத்த கட்ட வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக செம்டெம்பர் மாதத்தை எதிர்ப்பு மாதமாக மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

கடந்த காலங்கள் போன்று தொழிற்சங்க அரசியல்கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் பரந்துபட்ட ஐக்கியத்துடன் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென மே. கொ. எ. ம. இயக்கம் கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கிணங்க செப்டம்பர் முதலாம் திகதி மலையகத்தில் பரவலாக பொது இடங்களிலும் வீதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அன்றைய தினம் பல இடங்களில் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பல அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகளுடன் பல தனி நபர்களையும் கொண்ட மே. கொ. எ. ம இயக்கம் ஏப்பிரல் 10 மாநாடொன்றை நடத்தியது. ஏப்பிரல் 27 திகதி பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. மே. மாதம் 15 ஆம் திகதி எதிர்ப்பு தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. யூன் மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. இத்திட்டத்திற்கு எதிராக இது வரைக்கும் 15 ற்கு மேற்பட்ட வீதி நாடகங்கள் 100 ற்கு மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்டுள்ளன. சில கவியரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் ஒரு தொகுதியாக வெளியிடப்படவுள்ளன.

இவ்வாறு மேல் கொத்மலைத்திட்ட எதிர்ப்பு என்பது பன்முகப்பட்டதாகக் காணப்படுகிறது. ஆரம்பத்தில் இத்திட்டத்தை ம.ம.மு ஆதரித்தது. இ. தொ.கா 1980 களில் ஆதரித்தது 2000 இல் எதிர்த்தது. பிறகு ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தில் இணைந்தவுடன் அதனை ஆதரிக்கிறது. இவர்களது நிலையால் மேல் கொத்மலைத்திட்டத் திற்கு எதிரான மக்களின் எதிர்ப்பு மழுங்கடிக்கப்படவில்லை.

மே.கொ.எ.ம. இயக்கம் எதிர்ப்புணர்வுகளை ஒருங்கிணைத்து செயற்பட்டு வருகிறது. மே 15 எதிர்ப்பு தினத்தையடுத்து ம. ம. மு அதனை எதிர்த்தது. அதனுடன் தொடர்புடைய ம.இ மன்றத்தின் ஆறு இளைஞர்கள் ஆகஸ்ட் 11முதல் 14 வகை உண்ணாவிரதப் போராட்டமொன்றை செய்தனர். நீர் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம்ஜந்தின் ஊடக செயலாளரினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையை அடுத்து அவ்வுண்ணாவிரதம் கைவிடப்பட்டது.



மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் கொழும்பு கோட்டை புகையிரத நிலைய முன்பாக நடத்திய மேல் கொத்மலை திட்ட எதிர்ப்பு ஆர்ப்பட்டத்தில் புதிய ஜனநாயக கட்சி கலந்து கொண்டமையை படத்தில் காணலாம்.

அவ்வறிக்கையில் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி 12ம் பக்க

## சேது சமுத்திரத் திட்டத்தை உடன் நிறுத்து!







சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறுத்துமாறு கோரி அண்மையில் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலக முன்பாக சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நடாத்திய ஆர்ப்பாட்டத்தை முதலாவது படத்திலும் மன்னார் மீனவர் சங்கங்கள் நடத்திய எதிர்ப்பு ஊர்வலத்தை இரண்டாவது படத்திலும் இந்திய மீனவர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு போராட்டத்தை மூன்றாவது படத்திலும் காணலாம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பருத்தித்துறை துறைமுகத் தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது ஏன்?

பருத்தித்துறை துறைமுகத்தில் கரையிலிருந்து கப்பல்களுக்கு பொருட்களை ஏற்றி இறக்கும் தொழிலாளர்களாக அறுபத்தி நான்கு தொழிலாளர்கள் வரை வேலை செய்து வருகின்றார்கள். இவர்கள் 1990ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகவும் நெருக்கடிகள் மிக்க காலகட்டத்திலும் பணியாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று வரை அவர்களுக்குரிய சம்பள உயர்வோ, நிரந்தர நியமனங்களோ ஏனைய உரிமைகள் சலுகைகளோ வழங்கப்படவில்லை. கரவெட்டி மேற்கின் பின் தங்கிய கிராமமான கன்பொல்லையில் இருந்தே இவர்கள் ஏற்றி இறக்கும் கடின வேலைக்குரிய தொழிலாளர்களாகப் பணி புரிந்து வருகிறார்கள். இத்தொழிலாளர்களை கொத்தடிமைத்தன முறையில் குறைந்த கூலியில் கப்பலில் பொருட்களைக் கொண்டு வரும் முதலாளிகளும் துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர்களும் நடாத்தி வருகின்றனர்.

இத் தொழிலாளர்கள் நிரந்தர நியமனம் இன்றி சமயாசமயத் தொழிலாளர்களாக வைத்தே வேலை வாங்கப்படுகின்றனர். நாட்டின் ஏனைய துறைமுகங்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிரந்தரம், சம்பள வரையறை, சம்பள உயர்வு, மற்றும் சலுகைகள் எதுவுமே இல்லாத நிலையில் இருந்து வருகின்றார்கள். கரையிலிருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் கடின வேலைகளில் அறுபத்தி நான்கு வரையான தொழிலாளர்கள் வேலை செய்யும் போது துறைமுக அதிகார சபையின் பருத்தித்துறை முகத்தில் நாற்பதிற்கு மேற்பட்டதுறை உத்தியோகத்தர்களாக ஊழியர்களாக நிரந்தரத்துடனும் சம்பள உயர்வுகளுடனும் வேலை செய்து வரும் நிலையைச் சுட்டிக்காட்டுவது அவசியம். நாம் வேண்டுவது எங்களுக்குரிய உரிமைகள் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையேயாகும்.

இத்தொழிலாளர்கள் 1990ம் ஆண்டிலிருந்து இத்துறைமுகத்தில் வேலை செய்து வருகிறார்கள். தரைப்பாதைகள் தடைப்பட்டு கப்பல்கள் மூலமாக பொருட்கள் கொண்டுவரப்பட்ட சூழல்களில் ராணுவ நெருக்கடிகளின் மத்தியிலும் பொருட்களை இறக்கி குடாநாட்டின் அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்குச் சென்றடையப் பணிபுரிந்தவர்கள். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை தொன் ஒன்றுக்கு ரூபா 80 மட்டுமே பெறுகின்றார்கள். இந்த ஒரு தொன் நிறைக்கு எண்பது ரூபா என்பதைக் கணக்கிட்டால் ஒரு தொழிலாளிக்கு ரூபா 4000 வரையான சம்பளமே கிடைக்க முடியும். கடினமான வேலை மட்டுமன்றி கப்பல்கள் வந்தால் மட்டுமே வேலை என்ற நிலை. இதனால் இத் தொழிலாளர்கள் இவ் வேலையை விடவும் முடியாது தொடர்ந்து வேலை கிடைப்பதும் இல்லை என்ற நிலையில் தான் இருந்து வருகிறார்கள்.

ஒரு தொன்னுக்கு 100 ரூபா தானும் தரும்படி கேட்டும் பயன் கிடைக்கவில்லை. சில உத்தியோகத்தர்களின் அடாவடித்தனம் இடம் பெறுகிறது. தொழிலாளர் ஒற்றுமையைப் பிரிக்கக் கூடிய முயற்சிகளிலும் பருத்தித்துறை துறைமுக அதிகார சபை உயரதிகாரிகள் ஈடுபட்டும் வருகின்றனர். கடந்த டிசம்பரில் பேரழிவை ஏற்படுத்திய சுனாமி பருத்தித்துறையையும் பதம் பார்த்துக் கொண்டது. அன்று வேலை நடந்திருப்பின் இத் தொழிலாளர்கள் கடும் பாதிப்பைப் பெற்றிருப்பார்கள். ஆனால் இத்தொழிலாளர்கள் சுனாமிக்குப் பின் வேலை இன்றி இருந்த போதும் சுனாமி நிவாரணம் என்பது துளியளவும் கிடைக்கவில்லை. இவர்கள் எவ்வளவோ முயன்றும் பெற முடியவில்லை. பாதிக்கப்படாத பலர் சுனாமி நிவாரணத்தை இன்றும் பெற்று வருகின்றார்கள். ஆனால் பாதிக்கப்பட்டு வேலை இல்லாது இருந்த இத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டது. துறைமுக அதிகாரசபை அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்களது கிராம சேவையாளர்களும் அது பற்றி எதுவுமே செய்யவில்லை. காரணம் ஒன்று தொழிலாளர்கள் என்பதும் இரண்டாவது சாதியம். இவை இரண்டும் சேர்ந்ததால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டனர்.

எனவே இத்தொழிலாளர்கள் இப்போது தமக்கான ஒரு தொழிற் சங்கத்தை உருவாக்கி ஐக்கியத்தை வலுப்படுத்தி கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். தமது நிலை பற்றி அண்மையில் துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சருக்கும் துறைமுக அதிகார சபைத் தலைவருக்கும் பருத்தித்துறை துறைமுக பொறுப்பதிகாரி ஆகியோருக்கு விரிவான கடிதம் எழுதி நிற்கும் இத் தொழிலாளர்கள் அதனைத் தொடர்ந்து தமது அடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றனர்.

நாம் எல்லாம் தமிழர் என்றும் ஒரே இனம் ஒரே மொழி என்றெல்லாம் வசனம் பேசி வருவோர் நெருக்கடிகள் பலவற்றின் மத்தியிலும் பொருட்களை கப்பலில் இருந்து இறக்கி ஏற்றிய இத் தமிழ் ஏழைத் தொழிலாளர்கள் பற்றி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் வர்க்கமும் சாதியமும் தான் என்று கூறினால் யார் தான் மறுக்க முடியும். இந்த இரண்டும் தமிழர் சமூகத்தில் எத்தனை எத்தனை ஏற்றத்தாழ்வையும் புறக்கணிப்பையும் நடைமுறையில் கொண்டுள்ளது என்பதற்கு பருத்தித்துறை துறைமுகத் தொழிலாளர்களின் அவல நிலை அப்பட்டமான சாட்சியமாகும்.

*வரதன்*
*பருத்தித்துறை*

# மலையகத்தில் சாதியம் மடிந்து விடவில்லை

மலையகத் தமிழர்கள் மத்தியில் சாதியம் என்பது இல்லை என்றும் அது மங்கி மடிந்து போன விடயம் என்றும் கூறும் கனவான்கள் இருக்கிறார்கள். ஆனால் சாதியத்தின் வெளிப்பாடுகளை அவ்வப்போது வெளிப்படையாக்கிக் காட்டும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. அவற்றின் ஊடே மலையகத்தில் சாதியத்தின் உள்ளார்ந்த அம்சங்களையும் தன்மைகளையும் கண்டு கொள்ளலாம்

உதாரணத்திற்கு அண்மைய ஒரு நிகழ்வினைக் கூற முடியும். பண்டாரவெல நாயபெத்த (பழையநாகவத்தை) தோட்டத்தில் கோவில் திருவிழா ஊடாக சாதிய முரண்பாடுகள் முனைப்படைந்துள்ளன. அங்குள்ள கோவில் திருவிழா நடைமுறைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவமாக நடத்தப்படாது பாகுபாடு காட்டப்பட்டது. கரகம் தூக்குவதற்கு அனுமதியில்லை. அன்னதானத் தயாரிப்பில் புறக்கணிப்பு. சாமியைக் காவிச் செல்லத்தடை போன்றவற்றில் அப்பட்டமான சாதியக் கண்ணோட்டமே பின்பற்றப்பட்டன.

இதனால் "தாழ்த்தப்பட்ட" மக்களும் குறிப்பாக இளைஞர்களும் இவ் "உயர் சாதி" எனப்படுவோர் நடாத்திய திருவிழாவைப் புறக்கணித்து எவ்வித பங்களிப்பையும் வழங்க வில்லை. அதே நேரத்தில் தாங்களே மற்றொரு திருவிழாவை நடாத்தும் முயற்சிகளில் இறங்கி உள்ளனர். இதனால் உயர் சாதியினரின் திருவிழா ஆகஸ்ட் மாதம் 25ம் 26ம் திகதிகளிலும் "தாழ்த்தப்பட்ட சாதியினரின்" திருவிழா செப்டம்பர் 16ம்,17ம் திகதிகளிலும் இடம் பெற உள்ளன. ஆனால் ஆலய பரிபாலன சபை உயர் சாதியினரிடம் இருப்பதால் தாழ்த்தப்பட்டோரின் திருவிழாவிற்கு உற்சவ மூர்த்தியைக் கொடுக்க மறுத்துள்ளார்கள். இதனால் பக்கத்து தோட்டத்தில் உற்சவ மூர்த்தியை வாடகைக்கு கொண்டு வந்து (காணிக்கை செலுத்தி) தாழ்த்தப்பட்ட மக்கள் திருவிழாச் செய்ய உள்ளனர். கோவில் ஆலய பரிபாலன சபை திருவிழா நடைமுறைகள் யாவுமே சாதிய அமைப்பு முறையின் இருப்பிடங்கள் தான். ஏன் கடவுள் என்பவர் கூட சாதி அடிப்படையில் தான் வடிவமைக்கப்பட்டுள்ளார். சாதிய ஏற்றத்தாழ்வு புறக்கணிப்பு நிராகரிப்பு என்பனவற்றுக்கு வெறுமனே சாதியக் கண்ணோட்டத்தில் போட்டித் திருவிழா என்பதின் ஊடாக பதிலிறுக்க முடியாது. சமத்துவ ஜனநாயக உரிமைகளுக்காக மக்களை அணிதிரட்டிப் போராடவேண்டும். அதற்கு மாற்றுச் சமூக அரசியல் சிந்தனையும் செயற்பாடும் அவசியமாகும்.

**மௌலீஸ்**
**பண்டாரவளை**

# கல்வி அமைச்சின் கண்கள் திறக்குமா?

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சேவை 1962ம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்றுடன் 43 வருடங்கள் ஓடி விட்டன. ஆனால் இதுவரை இப்பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை ஏக்கநாயக்க அறிக்கை, பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி அரசு காலத்தில் வந்த கல்வி ஆலோசகர் சேவை அறிக்கையென வெளிவந்து எதுவித பயனுமற்றுபோனது. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது பலதரப்பட்ட வேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

1.புதிய கல்விசீர்திருத்த அமுலாக்கவில் ஈடுபட்டுவருகின்றமை.
2.புதிய புத்தக எழுத்தாக்கத்தில் ஈடுபடுகின்றமை.
3.பாடசாலை மட்டக்கணிப்பீடு அமுலாக்கம்.
4.தவணைப்பரீட்சைக்கான வினாத்தாள் தயாரிப்பு.
5.செயலட்டைகள் தயாரிப்பு.
6.கல்வி நடமாடும் சேவைகள்.
7.பல்துறைச் செயலமர்வுகள் (சகல பாடத்துக்குமான)
8.அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் கல்வி செயற்பாடுகளில் இணைந்து ஈடுபடுகின்றமை
9. கணித, விஞ்ஞான, சமூகக்கல்வி, தமிழ்தினம், ஆங்கிலதினம் எனப் பல்வேறு போட்டிகளை நடாத்தி வருகின்றமை
10.பாடசாலை தரிசிப்பின்போது மாதிரி வகுப்புகள் மற்றும் ஆசிரிய கல்வி வாண்மைவிருத்தி ஆலோசனை வழங்கல்.
11.மாகாண, வலய, கோட்ட பணிப்பாளர்களின் பணிப்புரைகளை நிறைவேற்றுகின்றமை.

தேசிய கல்வி நிறுவனம், கல்வி அமைச்சு, மாகாண அமைச்சு ஆகியவற்றின் செயலமர்வுகளில் கலந்து கொள்வது. அவர்களின் திட்டத்தை கோட்ட வலய மட்டத்திற்கு கொண்டுசெல்லல்.

இவ்வாறான பல்வேறு பரிமாணங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர். எனினும் இவர்களுடைய சேவையை உணர்ந்து எமக்கென தனியான ஓர் சேவையை உருவாக்க கல்வி அமைச்சு முன்வந்தபோது பாதியில் நின்று விடுகின்றது. எனவே மேலும் தாமதிக்காது இனிவரும் புதிய கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த உத்வேகம் அளிக்கும் வகையில் இவர்களுக்குரிய சேவையை வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

*இலங்கை முழுவதும் 3000 - 3500ற்கும் இடைப்பட்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சேவையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும்

*வவுனியா மாவட்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சங்கக்கிளையின் வேண்டுகோள் கல்வி அமைச்சின் கண்ணைத் திறக்குமா?

# நாலும் நடக்கும் உலகிலே — நற்குணன்

## யானை இறந்தாலும்....

அமைச்சர் கதிர்காமரின் கொலையை எல்லோரும் நிபந்தனையின்றி வன்மையாகக் கண்டித்துள்ளனர். எனினும் அவர் மறைந்தது தன்னளவில் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்புக்கு ஒரு தடையாகுமா என்பது ஒரு சிக்கலான கேள்வி. நிச்சயமாக அவர் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்புக்கு உதவியவரல்ல. பொதுக்கட்டமைப்பைக் குழப்பவும் பங்களித்திருக்கிறார். அவரது கொலையைக் காரணங்காட்டி அமைதிப் பேச்சுவார்த்தைகளை மேலும் பின்போடவும் மறைமுகமாக போரை மும்முரமாக்கி மீண்டும் வெளிவெளியாகவே போரை முன்னெடுக்கவும் விஷமிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இக் கொலை நாட்டில் அமைதியை விரும்புகிறவர்களது செயல் அல்ல. இதனால் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் இல்லை. ஆனாலும் கவனிப்புக்குரிய விடயம் என்னவென்றால் அவர் இருந்த போதும் அவரால் அமைதிக்குப் பாதகம் அவர் இறந்த பின்பும் மேலும் பாதகம்.

## போற்றலா, தூற்றலா?

காலஞ் சென்ற பத்திரிகையாளர் சிவராம் அமெரிக்கத் தூதரகம் உட்பட்ட அமெரிக்க அரசியல் வட்டாரங்களுக்குள் மிகவும் வேண்டப்பட்டவரென்று அண்மையில் பேராசிரியர் சிவத்தம்பி சிவராமை மெச்சுகிற தோரணையில் சொல்லியிருக்கிறார். அமெரிக்க அரச நிறுவனம் மெச்சுகிற பேர்வழிகள் எல்லாம் தங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன செய்திருக்கிறார்கள் என்று அறியாதவரா பேராசிரியர்? சிவராம் ஒரு அமெரிக்க முகவர் என்று சொல்லுகிறாரா, அல்லது அமெரிக்க எசமானர்கள் மெச்சுவது ஒரு பெரிய தகுதி என்று நினைக்கிறாரா?

பேராசிரியர் என்ன நினைத்தாலும், அமெரிக்காவை அறிந்தவர்கள் எவரும் சிவராம் பற்றி அவர் சொன்ன விடயங்கள் நல்ல எண்ணத்திற் சொல்லப்பட்டனவா என்று சந்தேகப்பட நியாயம் இருக்கிறதல்லவா!

## நேபாள விடுதலைப் புலிகள்!

நேபாள மாஓ வாதிகளுக்கு விடுதலைப் புலிகள் தற்கொலைத்தாக்குதல் போர்ப்பயிற்சி கொடுப்பதாக ஒரு வதந்தி சில சர்வதேச முதலாளிய ஊடகங்களில் பரப்பப்பட்டது. உடனேயே பெருமையுடன் நமது தமிழ் நாளேடுகள் சில அச் செய்திக்கு முக்கியம் கொடுத்து வெளியிட்டன. ஏனென்றால் மாஓவாதிகள் வெற்றிப் பாதையில் போகிறார்களல்லவா.

நேபாள மாஓவாதிகள் மட்டுமல்லாமல் உலகின் மாக்ஸிய- லெனினிய கம்யூனிஸ்ற்றுக்கள் யாவருமே ஈழத் தமிழரது விடுதலைப் போரட்டத்தையும் அதன் போராட்ட நியாயத்தையும் வர்க்கரீதியான விமர்சனங்களுடன் ஆதரித்து வருவது என்பது புதிய செய்தியல்ல.

நேபாளப் போராளிகளின் தலைமைத் தோழர் ஒருவரிடம் விடுதலைப்புலிகளுடனுள்ள தொடர்புபற்றிக் கேட்கப்பட்ட போது அவர் ராணுவத் தொடர்புகள் இருப்பதை மறுத்துள்ளனர்.

செய்தி எதைப் பற்றியும் பெருமைப்பட முன்பு அச் செய்தி மெய்யா பொய்யா, அச்செய்தியை யார் ஏன் வெளியிடுகிறார்கள் என்று நாம் சிந்திக்க வேண்டாமா?

## நல்ல பகிடி தான் போங்கோ!

உலக மகா கவிஞனான பப்லோ நெருடாவுக்கும் நம்மூர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் முன்னோடி விமர்சகரான அ. ந. கந்தசாமிக்கும் தமிழ்நாட்டு சினிமா பிரமுகரான கே. சுப்பிரமணியத்துக்கும் என்ன தொடர்பு? முன்னாள் இடதுசாரிப் படைப்பாளியான என். ஜி. ஓ. இலக்கியச் செம்மல் 'முற்போக்கு கலை இலக்கியப் பேரவை'என்கிற பேர்ப்பலகை அமைப்பின் பதாகையின் கீழே மூன்று பேருக்கும் ஒரே நாளில் நினைவுக் கூட்டம் நடத்தியிருக்கிறாரே. இதுபற்றி வேண்டுமானால் அவரைக்கேளுங்கள். அவருக்கே தெரியுமோ தெரியாது.

## இன்னும் எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

ம. ம. மு. தலைவர், சந்திரசேகரன் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தை எதிர்க்கிறாரா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ம. ம. முவுக்கு நெருக்கமான மலையக இளைஞர் மன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் தெளிவாகவே மேல் கொத்மலைத் திட்டம் கைவிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டது. போகிற போக்கில் தன்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தக் கோரியும் மே. கொ. நீ. திட்டத்திற்கு எவ்வித ஆதரவும் எப்போதும் தரமாட்டாரென உறுதிமொழி கேட்டும் அவரது கட்சிக்காரர்கள் ஒரு போராட்டம் நடத்த வேண்டிய தேவை விரைவில் ஏற்படலாம்.

## மனோ கணேசா பள்ளி எழுந்தருளாயே!

மேல்கொத்மலைத் நீர்மின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற சிலரது கருத்துக்கள் வீரகேசரி 20/8 இதழில் வந்திருந்தன. சில அமைப்புக்களும் அவற்றின் பிரதிநிதிகளும் கவனமாகவே தவிர்க்கப்பட்டிருந்தார்கள்.

மனோ கணேசன் தன்னுடைய கருத்தைக் கூறும் போது சிங்களவர்களுடைய ஆதரவையும் பெற்றுப் போராட வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார். மே. கொ. நீ. தி எதிர்ப்பு இயக்கம் வேறென்ன செய்தது என்று அவர் நினைக்கிறார்? ஒரு வேளை அவர் நினைக்கும் சிங்களவர்கள் வேறு வகையான சிங்களவர்களாக இருக்கலாம். அவருக்கு நெருக்கமான யூ என். பியிலிருந்து மேல் கொத்மலைத் திட்ட எதிர்ப்புக்கு ஆதரவு பெற்றுத்தர அவரால் இயலுமா? ஒரு வேளை யூ என். பி அதிகாரத்துக்கு வந்தால் மேல் கொத்மலை திட்டத்துக்கு முற்றுப்புள்ளி இடப்படுமா?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# விவசாயிகளை ஏமாற்ற முன் வந்துள்ள ஜனாதிபதி வேட்பாளர்கள்

ஜனாதிபதித் தேர்தல் வர இருப்பதால் இரண்டு பிரதான கட்சிகளும் அண்டப் புளுகு ஆகாசப் புளுகு வெளியிட்டு வருகிறார்கள். அதில் ஒன்று தான் நாட்டின் விவசாயிகள் மீது பாசமும் பரிதாபமும் காட்டி வரும் பேச்சுகளாகும். ஐக்கிய தேசியக் கட்சியினர் தாம் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கு பெரும் நன்மைகள் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர். ஆனால் அக் கட்சி முன்பு ஆட்சி செய்த போதும் தற்போது ஆட்சியில் இருப்பவர்களும் இந்நாட்டு விவசாயிகளுக்கு எதனைச் செய்தார்கள்.

இந்நாட்டில் விவசாயத்தை மேற்கொள்வோரின் எண்ணிக்கை சனத்தொகையில் 65சத வீதமாகும். ஆனால் இவ்விவசாயிகளின் வாழ்க்கை நிலை தான் என்ன? அவர்கள் நீர் நிலம் பசளை கிருமிநாசினி சந்தைப்படுத்தல் என பல்வேறு பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கியே விவசாயத்தை மேற்கொள்கின்றனர். நாட்டின் 80வீதமானவை இன்னும் கிராமப் புறங்களாகவே உள்ளன. அங்கே விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மிகத் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

நெல் உற்பத்தி பிரதான உற்பத்தியாகும். ஆனால் பல சிரமங்கள் மத்தியில் வட்டிக்கு கடன் பட்டு நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நெல்லை கொள்வனவு செய்வதில் அரசாங்கங்கள் உரிய அக்கறை காட்டுவதில்லை. முறையான திட்ட நடைமுறைகள் கிடையாது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனியார்துறை முதலாளிகள் குறைந்த விலையில் (கிலோ 9ரூபா) நெல்லை கொள்வனவு செய்கின்றனர். ஆனால் அரிசியை 40ரூபா விற்கு மேல் சந்தையில் அதே முதலாளிகள் விற்பனை செய்கின்றனர். ஜே.வி.பியைச் சேர்ந்த ஒரு அமைச்சர் விசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல்லை 16 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படும் என அறிவித்தார். ஆனால் அது நடை முறைக்கு வரவில்லை. நெல்லை நியாயமான முறையில் விற்க முடியாத சில விவசாயிகள் பொலநறுவ மாவட்டத்தில் தற்கொலை புரிந்தனர். இந் நிலை வடக்கு கிழக்கில் உள்ள விவசாயிகள் மத்தியிலும் காணப்படுகின்றது. இந் நிலையிலேயே தற்போது ஐக்கிய தேசியக் கட்சி விவசாயிகளுக்கு வாக்குறுதி அளிக்க ஆரம்பித்து விட்டது. ஆனால் இதே கட்சி தான் 1978ல் தாராள இறக்குமதிக்கும் தனியார் மயத்திற்கும் நாட்டைத் திறந்து விட்டு இந் நாட்டு விவசாயிகளை ஒட்டாண்டிகள் ஆக்கியது. சுய சார்பு தேசிய உற்பத்திகள் அழிவுற்றன. நெல் உப உணவுகள் உற்பத்தி தரகு முதலாளிகளின் தாராள இறக்கு மதியால் நலிவுற்றன. நமது விவசாயிகள் நடுக் தெருவுக்கு துரத்தப்பட்டனர். இந்த நிலை ஐ.தே.க. ஆட்சியில் மட்டுமன்றி பொதுசன முன்னணியிலும் ஜே.வி.பி பங்கு கொண்ட பின்பும் தொடர்ந்தது.

எனவே தற்போது ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளில் விவசாயிகளைப் பாதிக்கும் தாராள இறக்குமதியைத் தடுத்து நிறுத்துவோம், உள்ளூர் உற்பத்திக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம் பசளை சந்தைப்படுத்தல் நியாயமான விலை வழங்குவோம் என வாக்குறுதி கொடுப்பார்களா? பொய் வாக்குறுதிகளை அல்லாது நேர்மையாகக் கொடுப்பார்களா? இரு தரப்பினரும் அவ்வாறு வாக்குறுதி வழங்கவே மாட்டார்கள். ஏனெனில் விவசாயக் கொள்கையைத் தீர்மானிப்பது இவர்கள் அல்லவே. உலக வங்கியே தீர்மானித்து செயல்படுத்த வழி காட்டுகிறது. இந்த உண்மையை இந்நாட்டு விவசாயிகள் உணர்ந்து மாற்றுசிந்தனைகளுக்கு வராத வரை விவசாயிகள் ஏமாற்றப்படுபவர்களாகவே இருப்பர்.

# அமுதும் நஞ்சும்

தமிழ்த் தொலைக்காட்சியில் வருகிற தொடர் நாடகங்கள் நச்சுத்தன்மையானவை என்று கடுமையாகக் கண்டித்து ஒரு கட்டுரை 2005 ஓகஸ்ட் காலச்சுவட்டில் வெளியாகியுள்ளது. அது சொல்வது சராசரி அறிவுள்ள எவருக்கும் விளங்க வேண்டிய உண்மை. என்றாலும், நச்சுத்தனமான கலை இலக்கியங்கள் உள்ளன என்பதைக் காலச்சுவடு நிறுவனம் இப்போதாவது அடையாளங்கண்டுள்ளது. பற்றி நாம் மகிழலாமா? அல்லது இக்கட்டுரை இன்னொரு தீவிர எழுத்தா? எப்படியிருந்தாலும் தொடர் நாடகங்கள் நச்சுத்தன்மையானவை என்றால், சினிமாவில் பெரும் பகுதி நச்சுத் தன்மையானது ஆகாதா? தமிழ்ப் பரவலாக வாசிக்கப்படுகிற மலிவான கிளுகிளுப்பு நாவல்களும் சிறுகதைகளும் நச்சுத் தன்மையானவை இல்லையா? இந்தப்பட்டியல் வெகு தூரத்திற்கு நீளலாம். ஆனால் இங்கே முக்கியமான நச்சுத் தன்மையை எப்படி அடையாளங்காணலாம் என்பதில் சுந்தராமசாமி வகையறாக்களுக்கும் நமக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு என்பது தான்.

எங்கள் பார்வையில் சமூகச் சீரழிவுக்குரிய சிந்தனைகளும் சமூகப் பகைமையான பலவேறு சிந்தனைகளும் நச்சுத் தன்மையானவை. அழகியற் போர்வையோ கலைத் தன்மையோ அவற்றின் நஞ்சை நீக்காது. அவர்களுக்கு ஒரு படைப்பு கலைப்பண்பு டையாதாக இருப்பது தான் முக்கியமாக இருந்தது. நச்சு இலக்கியமாகத் தெரிவதெல்லாம் அழகிலும் அறிவுத் தரத்திலும் தாழ்வாக உள்ளதாலே ஒழியச் சமூகப்பார்வையின் குறைபாட்டாலல்ல என்பதே அவர்களது வாதம்!

# தமிழரசுக் கட்சியினர் அன்றும் இன்றும்

இலங்கை போக்குவரத்து சபையை மீளவும் உருவாக்கி பொதுப் போக்குவரத்து துறையை விரிவாக்கும் சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் தமிழரசுக்கட்சியினர் (தமிழர் கூட்டமைப்பினர்) அதற்கு எதிராகவே வாக்களித்தனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் 1957ம் ஆண்டிலும் அன்றைய பஸ் முதலாளிகளின் ஆதிக்கத்தை முறியடித்து இ. போ. ச வை உருவாக்கும் சட்ட மூலத்தையும் கடுமையாக எதிர்த்து அச்சட்ட மூலத்திற்கு எதிராகவே வாக்களித்தனர். அன்றும் இன்றும் இவர்கள் பஸ் முதலாளிகள், தனியார்துறையினர் பக்கமாகவே இருந்து வந்துள்ளனர். அது மட்டுமன்றி இன்று நாட்டையும் தமிழ் மக்களையும் குறிப்பாக வடக்கு கிழக்குபிரதேசங்களையும் விழுங்கி வரும் தாராளமயம், தனியார்மயம் உலகமயமாதல் என்பன பற்றி வாயே திறக்காத மக்கள் பிரதிநிதிகளாகவே இருந்து வருகின்றனர். இதன் பிரதிபலிப்பையே பாராளுமன்றத்தில் அடிக்கடிவெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

# அடுத்த நடவடிக்கை என்ன?

மேவின் சில்வாவின் இனவாத உளறலை முன்வைத்துக் கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன் நடந்த ஆர்ப்பாட்டம் மூன்று தலைமைகளின் ஒற்றுமையை விட ஒற்றுமையீனத்தையே எடுக்காட்டியது என்றாலும் ஆர்ப்பாட்டக்காரர்களின் வாயில் பால் வார்த்துப்பிரதமர் எல்லாரையும் பச்சைப்பிள்ளைகளாக்கி விட்டாரோ தெரியவில்லை.

மேவின் சில்வா பதவி விலகவுமில்லை, மன்னிப்புக் கோரவும் இல்லை. ஆறுமுகன் ஆளும் கட்சிக்கு ஆதரவை விலக்குவாரா? அடுத்த நடவடிக்கை எது, எப்போது? மகா 'சக்தி' மறுபடியும் கடைக்கண் வைத்தால் தான் ஆகாவென்று எழும் இவர்களது ஆர்ப்பாட்டம்?

# இப்படியும் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் ஒரு திருமண விழா மண்டபம் ஒன்றிலே மிகவும் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பகல் வேளை நல்ல சனக்கூட்டமும் அதே போன்று வெய்யிலும் கொழுத்திக் கொண்டிருந்தது. மண்டபத்திற்கு வெளியே ஒரு இடத்தில் "கோக்காகோலா" ஆகியவற்றை தாகம் தீர்க்கும் பானமாக வழங்கிக் கொண்டிருந்தார்கள். பொட்டிபெட்டியாக வைத்து விநியோகித்துக் கொண்டிருந்த இரண்டு மூன்று இளைஞர்களை நடுத்தர வயது கொண்ட இருவர் அணுகி இவற்றை விட உள்ளூர் பானங்கள் எதுவும் இல்லையா? என்று கேட்டனர். இவற்றை விட வேறு எதுவும் இல்லை என்றனர் இளைஞர்கள். அப்படியானால் தண்ணீர் தரமுடியுமா என்று கேட்டனர். அந்த நடுத்தர வயதினர் இளைஞர்களோ தண்ணீர் இங்கே கிடையாது என்று கூறி விட்டு ஏன் அண்ணை தாராளமாக கோக்கும் ஸ்ப்றைற்றும் இருக்கிறதே. அவற்றைக் குடிக்காது உள்ளூர் சோடாவும் தண்ணீரும் கேட்கிறீர்களே என்று கேட்டார்கள். நாங்கள் கோக்கும் ஸ்பரைட்டும் பெப்சியும் செவினப்பும் குடிப்பதில்லை என்று பதிலுக்குக் கூறினார்கள் அவ் நடுத்தர வயதினர் இருவர் போத்தல்களைத் திறந்து விநியோகித்துக் கொண்டே அவர்கள் ஏன்? ஏன் குடிப்பதில்லை என்று கேட்டனர். அவை அமெரிக்க கொம்பனியின் நச்சுப்பானங்கள். உடல் நலத்தை நாசப்படுத்திக் கொள்ளும் இரசாயனங்கள் கொண்டவை. அத்துடன் இங்கே உறுஞ்சப்படும் ஒவ்வொரு முடறுக்கும் எமது பணத்தை அந்த அமெரிக்க ராட்சதக் கம்பனி பணம் குவியலாக்கிக் கொள்கிறது. இது நமக்குத் தேவையா? என்று அந்த இளைஞர்களுக்குக் கூறிவிட்டு அவ் இருவரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். கோக்காகோலா குடிக்காத சிலர் சேர்ந்து கல்யாண மண்டபத்திற்கு சற்றுதூர இருந்த ஒரு தேனீர்க்கடையில் சென்று தேனீர் அருந்திவிட்டு மீண்டும் கல்யாண மண்டபத்தடிக்கு மதிய போசனத்திற்காக வந்தனர். அங்கே மேசை கதிரைகளில் உணவு அருந்திக் கொண்டிருந்தவர்கள் பலருடைய கைகளிலேயும் கோக்காகோலா இருந்தது. இடையிடையே உறுஞ்சிக் கொண்டே உணவருந்தினர். நமது மக்களையும் இளம் தலைமுறையையும் அமெரிக்க ராட்சதக் கம்பனி எவ்வாறு கோக்காகோலாவின் ஊடே நச்சுப்பாணத்தை கலாச்சாரமாக்கி காசை உறந்து செல்லுகிறது. என்பதை இத் திருமண வைபவத்தில் காணமுடிந்தது ஒரு சிறு உதாரணம் மட்டுமேயாகும்.

# மலையக மக்கள் முன்னணி
## சிவலிங்கத்திற்கு ஞானோதயம்

இனவாத தேசியக் கட்சிகளின் முதுகில் உப்புக் கட்டி ஏறிக் கொண்டு பாராளுமன்றம் செல்லும் வரை மலையகத் தலைமைகளால் தமது சொந்த மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது. இவ்வாறு கூறி இருக்கிறார் மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் மு.சிவலிங்கம் மேலும் அவர் மலையகத் தமிழ் மக்கள் சார்பாக தனித்துவத்துடன் செயற்படக் கூடிய தலைமைத்துவத்தை மலையக இளைஞர்கள் உருவாக்க வேண்டும் எனவும் வேண்டு கோள் விடுத்திருக்கிறார். அப்படியாயின் திரு.சிவலிங்கத் தான் பதவி விகிக்கும் மலையக மக்கள் முன்னணிக்கும் அதன் தலைவர் சந்திரசேகரனுக்கும் சேர்த்துத்தான் அடி கொடுத்திருக்கிறாரா? இதன் மூலம் மலையக முன்னணிக்குள் இசக்குப் பிசக்கு ஏற்பட்டு விட்டதா? தேர்தல்கள் வரும் சூழலில் சிவலிங்கத்திற்கு இப்படி ஞானோதயம் ஏற்பட என்ன காரணம் எதுவானாலும் மனிவுன் கூறி வெறுமனே கூறி விட்டுச் செல்லாது உருப்படியாக ஏதாவற்றை செய்வது தான் நல்லதாகும்.

# ஊடகங்களும் ஜனாதிபதித் தேர்தலும்

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருப்பதையிட்டு பணம் பண்ணும் பல தரப்பினருக்கும் ஒரே மகிழ்ச்சியாகவே உள்ளது. ஆனால் மக்களின் பணம் ஆளும் வர்க்க அதிகார பீடத்திற்கு ஒருவரைத் தெரிவு செய்வதற்காகச் செலவிடப்பட போகிறது. அதற்கான சுமையை மக்களே சுமக்கவேண்டியுள்ளது.

அதேவேளை நாட்டின் பிரதான அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஒரே கொண்டாட்டம். காரணம் தாராளமாக தேர்தல் விளம்பரங்களை அவை பெற்றுக்கொள்ளப் போகின்றன. இரு பெரும் கட்சிகளும் அதன் வேட்பாளர்களும் விளம்பரங்களை அள்ளி இறைக்கப் போகின்றனர். இதனால் ஊடகங்களின் காட்டில் பணமழை பொழியப் போகின்றது. அதற்குத் தகுந்தாற் போல் இவ் ஊடகங்கள் தத்தம் நிலைப்பாடுகளை நிலைப்படுத்தியும் வருகின்றன. சிங்கள ஆங்கில ஊடகங்கள் மட்டுமன்றி தமிழ் ஊடகங்களும் அவ் விளம்பரங்களைப் பெற்றுக் கொள்ளும் உத்திகளை வகுத்து வருகின்றன. இருப்பினும் இவ் ஊடகங்கள் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் தத்தமது சொந்த விருப்பு வெறுப்புகளை வெளியிடவே செய்யும். ஊடகங்கள் யாவும் பக்க சார்பற்ற நடுநிலையான சுதந்திரத் தன்மை கொண்டவை என்றே கூறப்பட்டு வருகின்றன. அவை வெறும் பேச்சுக்கும் எழுத்துக்கும் மட்டுமே ஆனால் எலவே இவ் ஊடகங்கள் தமது உறுதியான பக்க சார்பை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டன. அரசாங்கக்கட்டுப்பாட்டில் உள்ள ஒலி ஒளி ஊடகங்கள் மகிந்த ராஜபக்சாவுக்கு பிரச்சாரம் தொடங்கியுள்ளன. அவ்வாறே அச்சு உடகங்களான சிங்கள ஆங்கில தமிழ் ஏரிக்கரை பத்திரிகைகளும் மகிந்தாவிற்காக எழுத ஆரம்பித்து விட்டன. அதே வேளை விஜய பத்திரிகைக் குழுவினர் தமது சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் மூலம் ரணிலுக்காக எழுதி வருகின்றனர். அத்துடன் த.மகாராஜா ஒகன்னைஸ்சேன் மூலமான ஒலி, ஒளி பரப்புச் சேவைகள் தமது ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவை பிரசாரப்படுத்தி வருகின்றன. மேலும் சில சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் இருப்பக்கத்திற்கும் நடுவில் இருப்பது போலச் செய்திகள் வெளியிட்டாலும் தமது பக்க சார்பை அவ்வப்போது வெளிப்படுத்தவே செய்கின்றன.

தமிழ்ப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் அவை இரண்டு பிரதான பேரினவாதக் கட்சி வேட்பாளர்களையும் சாடுவது போலச் சாடி வரும் அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமது உள்ளார்ந்த பக்கசார்பை ஏதோ ஒரு வகையில் வெளிப்படுத்தத் தவறவில்லை. பொதுவாகவே தமிழ் மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகளும் வர்த்தகப் பிரிவினரும் இயல்பான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாக இருந்து வருபவர்களே. அதனால் அந்த வட்டச் செல்வாக்குப் பெற்ற தமிழ் பத்திரிகைகள் நேரடியாகவும் சுற்றி வளைத்தும் ஐக்கிய தேசியக்கட்சிக்கே எழுத்துப் பிரச்சாரம் செய்து வருகின்றன. இத் தமிழ் பத்திரிகைகள் தமிழ்த் தேசியத் திற்காகவே வெளிவருவதாகத் தோற்றம் காட்டினாலும் அடிப்படையில் வர்க்க சார்பே முக்கியமான தாகும். அதனை எதிர்வரும் வாரங்களில் நன்கு அவதானிக்க முடியும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகக் கூட்டமைப்பும் எதிர்பார்ப்புக்களும்

**-அழகேசன் -**

மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கொள்ளப்படும் தொழிற்சங்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றிடையே ஐக்கியமும் புரிந்துணர்வும் ஏற்படவேண்டும் என தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. பிரதியமைச்சர் மேர்வின் சில்வா மலையகத்தமிழ் மக்களை நிந்தித்து பேசியதாக அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவரை பிரதியமைச்சர் பதவியிலிருந்து நீக்கக் கோரியும் கடந்த ஆகஸ்ட் மாதம் 8ம் ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று செய்யப்பட்டது. அதில் இ.தொ.கா, ம.ம.மு, மே.மா.ம.மு போன்றன இணைந்து செயற்பட்டன. அதனையடுத்து மலையக கட்சிகளினதும், அமைப்புகளினதும் ஐக்கியம் பற்றி பேசப்படுகிறது. இந்த கூட்டமைப்பில் இ. தொ. கா, ம.ம. மு, மே.மா.ம.மு, தொ. தே. ச, பு. ஜ. கட்சி போன்றன இடம்பெறலாம் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இது பற்றி இ.தொ.கா, ம.ம.மு, மே.மா.ம.மு, தொ.தே.சங்கம் என்பன விளக்கங்கள் எதனையும் கொடுக்கத் தயாராக இல்லை. பு. ஜ. கட்சி கருத்து தெரிவிக்கையில் மலையக கட்சிகளின் கூட்டமைப்பு பற்றி எந்தவொரு கட்சியும் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று தெரிவித்துள்ளது.

நாடெங்கும் அரசியல் வேலைகளை முன்னெடுக்கும் பு. ஜ. கட்சி மலையகத்திலும் செயற்படுகிறது. மலையகத்தமிழ் மக்களை ஒரு தனியான தேசிய இனமாகக் கொள்வதுடன் அவர்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு தனியான வேலைத்திட்டத்தை முன்வைத்துப் போராடியும் வருகின்ற அதே வேளை ஏனை கட்சிகளுடன் பொது வேலைத்திட்டத்தின் கீழ் கூட்டாக செயற்படுவதற்கான அழைப்பை தொடர்ந்து விடுத்து வருவதாகவும் பு. ஜ. கவின் மலையகப் பிரதேசச் செயலாளர் தோழர். ச. பன்னீர்செல்வம் புதிய பூமிக்கு தெரிவித்தார்.

மலையக அமைப்புகளின் கூட்டுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் மலையகத்தமிழ் தேசிய இனத்தின் தேசிய அபிலாஷைகளுக்காகவும் தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க ரீதியான உரி மைகளுக்காவும் வெகுஜனப் போராட்ட மார்க்கத்தையே அரசி யலாகக் கொண்டு புதிய- ஜனநாயக கட்சி செயற்படுகிறது.

ஏனைய அமைப்புகளுடன் கூட்டாக செயற்படுவதாயின் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படத் தயாராகவே இருக்கிறது. உத்தேசக் கூட்டமைப்பானது தேர்தல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைவதை பு.ஜ.க ஏற்றுக் கொள்ளவில்லை.

இந் நாட்டை மாறிமாறி ஆண்டுவரும் முதலாளித்துவ பேரினவாத கட்சிகளான ஐ. தே. க, சு.க என்பவற்றுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிப்பதையும் அவற்றின் அரசாங்கங்களில் பங்கெடுப்பதையும் பு. ஜ. கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை அக்கட்சிகளுக்கு அப்பால் அவற்றின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக, மலையகத்தமிழ் மக்களினதும் பெருந்தோட்டத் தொழிலாளர்களினதும் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் பாராளுமன்றத்திற்குள் மட்டுமன்றி வெளியிலும் செயற்படும் சுதந்திரமான அமைப்பாக உத்தேச கூட்டமைப்பு அமையுமெனின் அதுபற்றி பு. ஜ. கட்சியால் பரிசீலிக்க முடியும்.

ஆனால் தேர்தல் நோக்கங்களை மட்டுமே கொண்டு செயற்படுவனவாகவே மலையக தொழிற்சங்கங்களும், கட்சிகளும் இருந்து வருகின்றன. பிரதான கட்சிகளின் அரசாங்கங்களின் அங்கம் பெறுவதையும், பதவிகள் பெறுவதையும் நோக்காக கொண்டுள்ளன. இந்நோக்கங்களை கொண்ட மலையக அமைப்புகளுடன் புரட்சிகர வேலைத்திட்டத்தை கொண்டுள்ள மாக்சிச லெனினிச கட்சியான பு. ஜ. க இணைந்து செயற்படுவது சாத்தியமானதல்ல.

இரண்டு ஆளும் முதலாளித்துவ பேரினவாத கட்சிகளுக்கும் ஏனைய பேரினவாத அமைப்புகளுக்கும் மாறாக பொது வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படக்கூடிய அமைப்புக்களின் கூட்டாக மலையகக் கூட்டமைப்பு அமையுமாக இருந்தால் அது தேசிய ஜனநாயக வேலைத்திட்டமாக இருப்பினும் புதிய- ஜனநாயக கட்சி பொது இணக்கப்பாட்டுடன் செயற்படத் தயாராகவே இருக்கிறது.

தேர்தல் காலத்திற்கு முன்பு ஆட்சியாளர்களுடன் இணைந்து முன்னெடுத்த மக்கள் விரோத நடவடிக்கைகளையெல்லாம் மறைத்து மக்களிடத்தில் தங்களை சுத்தமானவர்களாகக் காட்டிக் கொள்வதற்காகவே சிலர் கூட்டமைப்பு பற்றி கதைப்பார்கள். மீண்டும் மீண்டும் வாக்கு வங்கியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் மாற்று அரசியல் சக்திகளை வளரவிடாது தடுப்பதற்காகவும் ஐக்கியம் பற்றி கதைப்பார்கள். இவற்றுக்கு ஊடகங்களும் துணைபோவதுண்டு.

தேர்தல் காலத்தில் மட்டுமல்லாது ஏனைய காலத்திலும் செல்லுபடியாகக் கூடிய மக்கள் பிரச்சினைகளை உள்ளடக்கிய மக்கள் நலன்சார்ந்த அரசியலை முன்னெடுப்பதற்கே ஐக்கியமும் கூட்டமைப்பும் அவசியமாகும் என்பதே புதிய ஜனநாயக கட்சியின் நிலைப்பாடாகும். அத்தகைய ஐக்கியத்திற்கு மலையகப் பாராளுமன்ற ஆதிக்க அரசியல் நடத்தும் கட்சிகள் முன் வந்து கொள்ளுமா என்பதே கேள்வியாகும்.

# தோட்டங்களிலிருந்து தொழிலாளர் குடும்பங்களை விரட்டியடிப்பதை நிறுத்து!

தோட்டங்களில் வேலையில்லாதிருக்கும் 35 ஆயிரம் குடும்பங்களை தோட்டங்களிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் மீண்டும் மேற்கொள்ளவிருக்கிறது. அவ்வாறு வெளியேற்றக் கூடாது என்று பெருந்தோட்ட அமைச்சினால் முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வறிவிப்பு சட்டத்தன்மை கொண்டதாக இல்லாத படியால் அப்பிரச்சினை மீண்டும் எழுந்துள்ளது.

தோட்டக்குடியிருப்புகள் என்பது 200 வருடகாலத்து பழைய லயன் அறைகளாகும். தோட்டங்கள் தொழில் செய்யாவிட்டால் அத்தகையோரை அக் குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் அதிகமாக 1970-77 காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. பின்பு சட்டரீதியாக அப்பிரச்சினைக்கு முடிவு காணப்படாவிட்டாலும் அந்நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்பு மீண்டும் வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுக்கு பலமான எதிர்ப்புகள் காட்டப்பட்டதால் பின்பு கைவிடப்பட்டன.

தற்போது மீண்டும் தோட்டக்கம்பெனிகள் தோட்டங்களில் தொழில் செய்யாதவர்கள் தோட்டக் குடியிருப்புகளிலிருந்து வெளியேற வேண்டும் என அறிவித்தல் கொடுத்துள்ளன.

தோட்டத்தொழிலாளர் குடும்பங்களுக்கு வேறு இருப்பிடங்கள், காணிகள் இல்லை. அவர்கள் காலம் காலமாக, பரம்பரை பரம்பரையாக தோட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அதுவே அவர்களின் பூமி. அதனால் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. அவர்களின் முன்னோர்கள் இந்தியாவிலிருந்து வந்த காலந்தொட்டு பல தலைமுறைகளாக அத் தோட்டங்களையே அவர்களின் நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டுள்ளனர்.

ஏனைய தொழிற்துறைகளிலுள்ள தொழிலாளர்களை போலன்றி தோட்டத் தொழிலாளர்கள் வதிவிட தொழிலாளர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்களுக்கு தொழிலில்லாது போனால் அவர்களின் குடும்பத்தினரையும் தோட்டங்களிலிருந்து வெளியேற்றுவது எவ்வகையிலும் நியாயமில்லை. அது மனித தர்மமாக இருக்கவும் மாட்டாது.

தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்ட அவர்களுக்கு ஊர், வீடு, காணி என்று எதுவுமே இல்லை. பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு உழைப்பை கொடுத்ததை விட வேறெதனையும் அவர்கள் கண்டதில்லை. அவர்களுக்கு போவதற்கு மாற்று இடமேதுமில்லை.

தோட்டக்குடியிருப்புகளிலிருந்து விரட்டுவதையன்றி தோட்டங்களில் காணிகளுடன் குடியிருப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். தோட்டங்களில் வசிக்கும் தொழிலாளர் குடும்பங்களுக்கு காணியுடன் விடமைப்புகளை நிரந்தரமாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கு போதிய காணி தோட்டங்களில் இருக்கின்றன. அவற்றை ஒதுக்கி வீடமைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அதன் மூலமே அவர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். காலத்திற்கு காலம் தோட்டத்தொழிலாளர் குடும்பங்கள் தோட்டங்களிலிருந்து விரட்டியடிக்கப்படும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

# மலையக ஆசிரியர் நியமனங்கள் சலுகையல்ல

மலையக ஆசிரியர் நியமனம் இழுபறியில் இருக்கிறது. மலையகக் கல்வியின் பின் தங்கிய நிலைமையின் அடிப்படையிலேயே மலையக தோட்டப்புற பாடசாலைகளில் இருக்கும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கோரப்பட்டிருந்தது. அதில் விண்ணப்பதாரிகள் இந்து மதத்தை அல்லது கிறிஸ்தவ மதத்தை படித்தவராக இருக்க வேண்டும் என கேட்கப்பட்டிருந்தது. இந் நிபந்தனை முஸ்லீம் மக்களின் அடிப்படை உரிமையை பாதிப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்.

அவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் இருக்கும்போதே விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை நடை பெற்றது. போட்டிப் பரீட்சை நடைபெற்றது முறையற்றது என்ற அடிப்படையில் வழக்கு முடிவதற்குள் பரீட்சை முடிவுகளை வெளியிடக்கூடாது என்று தடையுத்தரவை மேற்படி முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் கேட்டிருந்தார். அந்த தடையுத்தரவை உயர்நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

மேலோட்டமாக பார்க்கின்ற போது குறிப்பிட்ட வர்த்தமானி அறிவிப்பிலுள்ள தலைப்பை பற்றிய நிபந்தனை அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது. ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் வரலாற்றுக்காலம் முழுவதிலும் கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தின் கல்வித்தரத்தை உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ற வகையில் மலையகப்பாடசாலை ஆசிரியர் நியமனங்களில் மலையகத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது என்பது முக்கியமானதாகும்.

பேரினவாதச் சட்டங்களின் கீழும் சட்டங்களுக்குள்ளும் அடக்கப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு மேற்படி விஷேட உரிமைகளை வழங்குவது எல்லா சந்தர்ப்பங்களிலும் இலகுவான விடயமல்ல.

மலையகத்தமிழ் மக்கள் பிற்படுத்தப்பட்ட ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொண்டு அதனது உரிமைகளை நிலைநாட்ட விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது அரசியல் அமைப்பு ரீதியில் செய்யப்பட வேண்டும். இதனை மலையக அரசியல் தலைமைகள் விளங்கிக் கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ இல்லை. மலையக சமூகத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்களுக்கு கூட இதில் விளக்கம் இல்லை.

நிறுவனப்படுத்தபட்ட பேரினவாத கட்டமைப்பிற்குள் அடக்கப்பட்ட தேசிய இனத்தின் உரிமைகளை நிலை நாட்டுவது இலகுவானதல்ல. அக்கட்டமைப்பை மாற்றாமல் வர்த்தமானி அறிவித்தலில் சில வார்த்தைகளை கொண்டு மட்டும் சிக்கல்களை தீர்க்க முடியாது.

குறிப்பிட்ட மலையக ஆசிரியர் நியமனம் பற்றி வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதில் (விண்ணப்பதாரிகள் இந்து அல்லது கிறிஸ்தவ மதத்தை படித்திருக்க வேண்டுமென்பது) கவனஞ்செலுத்தி இருக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதாவது ஏனைய சமூகத்தவர்களின் அடிப்படை உரிமைகளை வெளிவெளியாக பாதிப்பதாகவன்றி முறையான மொழியையும், சொற்களையும் பாவித்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கலாம். அதில் சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகள் உரிய கவனஞ் சொலுத்தவில்லை. கவனம் செலுத்தி இருந்தால் மலையக ஆசிரியர் நியமனத்தில் ஏற்பட்டிருக்கும் இன்றைய சிக்கலை தவிர்த்திருக்கலாம்.

அடக்கப்பட்ட தேசிய இனமான மலையகத்தமிழ் மக்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் என்பது உரிமையேயன்றி சலுகையல்ல. இதனை அரசாங்கமும் மலையகத் தலைமைகளும் விளங்கிக் கொள்வது அவசியம்.

# இலங்கையின் தேயிலை வர்த்தகத்தை இந்தியா சிதைக்க முயலுகிறது

பதப்படுத்தப்பட்ட பச்சை தேயிலையை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கான தீர்வை வரியை விலக்க வேண்டும் என்று இந்திய கேட்டுள்ளது.

இலங்கைத் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடு என்பதுடன் சர்வதேச தேயிலை வர்த்தகத்திலும் முக்கிய இடத்தை வகிக்கிறது. அதனால் இந்திய தேயிலையை இலங்கைக்கு அனுப்புவதற்கான தீர்வை வரியை நீக்க வேண்டும் என்று கோருவது இலங்கையின் தேயிலை உற்பத்தியையும் வர்த்தகத்தையும் பாதிக்கும் கோரிக்கை ஆகும்.

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன் படிக்கையின் கீழ் 300 இந்திய பொருட்களுக்கு தீர்வை வரியை விலக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. அதில் ஒன்றாகவே பதப்படுத்தப்பட்ட பச்சை தேயிலையையும் உள்ளடக்கி அதனை இந்தியாவிலிருந்து இங்கு இறக்குவதற்கு தீர்வை வரியை நீக்கும்படி கேட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியா அதனது மேலாதிக்கத்தை மிகவும் வேகமாக நிலைநாட்டி வருகிறது. உணவு, உடை, பெற்றோலியம் வாகனங்கள் போன்றவற்றில் இந்தியா அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

பல வகையில் இலங்கையின் தேயிலை வர்த்தகத்தையும் பலவீனப்படுத்த இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இலங்கை தேயிலையை இந்தியா கொள்வனவு செய்து இந்திய தேயிலையாக வேறு நாடுகளுக்கு விற்றும் வருகிறது. 22 பெருந்தோட்டக் கம்பெனிகளில் அதிகமான பங்குகளை இந்தியக் கம்பனிகள் ஏற்கனவே வாங்கியுள்ளன.

இக் கம்பனிகள் நமது மலையகத் தொழிலாளர்கள் மீது சகல வழிகளாலும் சுரண்டலையே நடாத்தி வருகின்றன. சம்பள உயர் வழங்குவதில் எப்பொழுதும் மறுப்புத் தெரிவித்து இறுதியில் ஒரு சில ரூபாய்களே கொடுப்பார்கள் தொழிலளார்களின் அன்றாட வாழ்வுரிமைகளை மறுத்தும் வருகின்றன. இந்நிலையிலேயே நமது நாட்டின் தேயிலை வர்த்தகத்திற்கும் குழிபறிக்க நிற்கிறது. அதற்காகவே தற்போது இந்தியத் தேயிலையை இங்கு .இறக்குமதி செய்வதற்கான தீர்வை வரியை விலக்க வேண்டுமென இந்தியா வற்புறுத்தி வருகிறது. இது இலங்கையின் பொருளா தாரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். எங்கும் எதிலும் இந்திய ஆதிக் கத்தைத் திணிப்பதே அதன் நோக்கமாகும். இது இந்திய மேலாதிக்கத்தின் நிலைப்பாடாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று12 செப்ரம்பர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 83

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,தொலை நகல்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

# மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்ட பின்பு ஜனாதிபதி அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்தினார். அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனால் இன்னும் ஒரு மாதகாலத்திற்கு அது அமுலில் இருக்கும். இதனை பாவித்து அரச படைகளும் பொலிசாரும் அத்துமீறியும் அராஜகமாகவும் நடந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவதாகவும் சடலங்களாக கண்டெடுக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர். கொல்லப்படுகின்றனர்.

கொழும்பிலும் கொழும்பிற்கு அருகேயுள்ள பகுதிகளிலும் அரச படையினரும் பொலிசாரும் தேடுதல் நடத்துகின்றனர். தமிழர்கள் பெரும் தொகையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் படுகின்றனர். பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவசரகாலச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் சாதாரண ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் மறுக்கப்படுகின்றன. குறிப்பாக புகையிரத சாரதிகளின் வேலைநிறுத்த நடவடிக்கைக்கு அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மக்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டு வரும் மேல் கொத்மலை நீர் மின்சாரத் திட்டம் நுரைச்சோலை அனல் மின்சாரத்திட்டம் போன்றவற்றை அவசர காலச்சட்டம் அமுலில் இருக்கும் போதே ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்களின் சாதாரண எதிர்ப்பு நடவடிக்கைகளை நசுக்கிவிட அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

பிரதான நகரப்பகுதிகளிலும் பல பெருந் தோட்டப் பகுதிகளிலுள்ள வீடுகளில் வசிப்போர் பற்றிய விபரங்களை பொலிஸ் நிலையங்களில் பதிய வேண்டும் என்ற கெடுபிடி நடைமுறை மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.

யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களினால் யுத்த நிறுத்த உடன்பாடு குலைந்து போயிருக்கும் போது அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்ததன் மூலம் அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டின் பல அம்சங்களை மீறுவதற்கு அரசபடையினருக்கும் பொலிசாருக்கும் சட்டரீதியான அனுமதியை வழங்கியுள்ளது என்றே கூறவேண்டும்.

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களும் ஹெல உறுமய, ஜே.வி.பி உறுப்பினர்களும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தது மட்டுமன்றி சமாதானம் பற்றி பெரிதாக கதைத்துவரும் ஐ.தே.கட்சி உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். இ.தொ.கா உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஆதரவாக வாக்களித்த அனைவரும் சாதாரண மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதற்கும் தமிழ் மக்களை துன்புறுத்துவதற்கும் இடமளித்து சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்பட்டதை அடுத்தும் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படாத நிலையில் ஒரு மாத காலத்தின் பின்பு அது காலாவதியானது. அது அமுலில் இருந்த காலத்தில் 60க்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாகவே ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டார். பின்பு ஊடகவியலாளர் ரேலங்கி செல்வராஜனும் அவரது கணவரும் கொலை செய்யப்பட்டனர்.

கதிர்காமர் கொலையை அடுத்து அமுலுக்கு வந்த அவசரகாலச்சட்ட சூழ்நிலையில் அதிகமான தமிழ் இளைஞர்கள் நாளாந்தம் கொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் தான் ஜனாதிபதி தேர்தலுக்கான ஆயத்தங்களும் செய்யப்படுகின்றன. ஜனநாயகம் மறுக்கப்பட்டிருக்கும் போது தான் பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. விலை வாசி உயர்வால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்களுக்கும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின்படி முறையான சம்பளஉயர்வுகள் வழங்கப்பட வில்லை. தனியார் துறையினருக்கும் வழங்கப்படவில்லை.

எட்டு மாதங்களுக்கு மேலாகியும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. மீளமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

சுனாமி நிவாரண மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அரசாங்கமும் புலிகள் இயக்கமும் கையெழுத்திட்ட பொதுக்கட்டமைப்பு செயலிழந்து கிடக்கிறது. மூன்றரை வருடகாலமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. கொலைகளும் யுத்தநிறுத்த மீறல்களும் அதிகரித்து நிழல்யுத்தமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தநிலையில் மக்களின் அதிருப்தியை எதிர்கொள்வதற்காகவே அவசர காலச்சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது. அதற்கு பிரதான ஆளும் வர்க்க கட்சிகள் ஆதரவளித்துள்ளன.

இச்சட்டத்திற்கு மக்களின் எதிர்ப்பு இருந்தபோதும் அது அரசியல் நிகழ்ச்சி நிரலாக்கப்பட்டு அவசரகாலச்சட்டத்தை வாபஸ் பெறும்படி வற்புறுத்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும்.

இந்நிலை மேலும் தொடரக் கூடாது. அவசர காலச் சட்டத்தை வாபஸ் பெறச் செய்யும் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் அவசியம் என்பதை நாம் வற்புறுத்துகின்றோம்.

-ஆசிரியர் குழு-

# ஏகாதிபத்திய உலகமயமாதலும் சமூக பண்பாட்டுச் சீரழிவுகளும்

மூன்றாம் உலக நாடுகள் எனப்படும் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் கடந்த நூற்றாண்டின் நடுக் கூறுகளிலே தாம் நடாத்தி வந்த கொலனிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களின் விளைவாக அரசியல் சுதந்திரத்தை கையேற்றுக் கொண்டன. அதன் மூலம் தமக்குரிய தேசிய பொருளாதாரத்தை சுய சார்பு நிலை நின்று முன்னெடுத்ததுடன் தாம் பெற்றுக் கொண்ட அரசியல் சுதந்திரத்தை நிலவுடமை வழிவந்த முதலாளித்துவ மேட்டுக்குடி வர்க்க அடிப்படையில் வரையறைகளுக்கு உட்பட்ட அரசியல் சீர்திருத்த முறைமைகளாகவும் முன்னெடுத்தன. இத்தகைய வர்க்க சக்திகளிடையே இரண்டு விதப் போக்குகள் காணப்பட்டன. ஒரு பிரிவினர் சுதந்திரம் என்பதற்குப் பின்பும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு முற்றிலும் அடிபணிந்து அவர்களது நேரடி முகவர்களாக செயல்பட்டனர். மற்றொரு பிரிவினர் குறிப்பிட்டளவு தூரத்திற்கு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அல்லது தூர வைத்து தமது தேசிய தனித்துவத்தை நிலை நிறுத்த முனைந்து அதற்குரிய அரசியல் நிலைப்பாட்டை முன்னெடுத்தனர். இவ் விரண்டாவது போக்கிற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டில் அன்றைய சோவியத் யூனியன் உள்ளிட்ட சோஷலிச நாடுகள் தம்மால் முடிந்தளவிற்கு உதவி கள் ஒத்துழைப்புகள் புரிந்தும் வந்தன.

இவ்வாறான ஒரு பொருளாதார அரசியல் சூழலிலேயே சமூகப் பண்பாட்டு அம்சங்கள் தமக்குரிய தனித்துவங்களுடன் கொலனிய ஏகாதிபத்திய பின்பற்றல்களில் இருந்து விலகி தேசிய குணாம்சங்களுடன் வளர்ச்சி பெற்றன. மொழியும் கலை இலக்கியங்களும் பாரம்பரிய பண்பாட்டம் சங்களும் நடைஉடை பாவனைகளும் தமக்குரிய தேசிய நிலைகளின் ஊடே மீட்கப்பட்டன. இலவசக் கல்வியும் தாய் மொழிக் கல்வியும் முன் நிறுத்தப்பட்டன. நிலவுடமை வழிவந்ததாயினும் அவற்றின் ஊடே கலை இலக்கிய பண்பாட்டுத் தொடர்ச்சியின் பாரம்பரிய அம்சங்கள் வெளிக் கொணரப்பட்டு சமூக வாழ்வியலுடன் இணைக்கப்பட்டன. மனிதரை மனிதர் மதிக்கவும் ஏற்றத்தாழ்வுகளை அடையாளம் காணவும் சமூக நீதியை வற்புறுத்தவும். சமூக செயற்பாட்டிற்கு கூட்டிணைந்து செயற்படவும் மனச்சாட்சி மிகுந்த தார்மீகப் பண்புகள் வளரவேண்டும் என்ற பரந்த முற்போக்கு சிந்தனைகளைப் பரப்பவும் கூடிய ஒரு ஜனநாயகத் தளம் உருவாக்கம் பெற்றது. அத்தகைய தளத்திற்கு சோஷலிச அமைப்பு முறையினது நடைமுறை அனுபவங்கள் ஆதாரங்களாக அமைந்தன. முற்றுமுழுதான சமூக மாற்றம் ஏற்படாத நிலையில் ஓரளவுக்குத்தானும் சமூக உணர்வும் சமூக அக்கறைகளும் வளர ஆரம்பித்தன.

மேற் குறிப்பிட்ட அம்சங்களை இலங்கையும் கொண்டிருந்தது. தேசிய பொருளாதாரம் என்ற வகையில் ஒரு விவசாய நாடு என்ற அடிப்படையில் விவசாய உற்பத்திகள் விரிவாக்கம் பெற்றன. அத்துடன் கைத்தொழில் துறையில் வளர்ச்சிகள் புகுத்தப்பட்டன. தேசிய மயக் கொள்கைகளின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கான அடித்தளங்களும் சுய உற்பத்தி சுய சார்புக் கொள்கைகள் பின் பற்றப்பட்டன. இன ஒடுக்கு முறைக்கான புறக்கணிப்புகள் பாகுபாடுகள் நிராகரிப்புகள் புகுத்தப்பட்டு வளர்க்கப்பட்ட அதேவேளை சுய சார்பு உற்பத்திப் பொருளாதாரம் என்பது ஊக்குவிக்கப்பட்டது. யாவற்றுக்கும் முற்று முழுதாக வெளி நாடுகளிடமிருந்து எதிர்பார்த்து கையேந்தும் நிலை பெருமளவிற்கு குறைக்கப்பட்டது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் சொந்த வளங்களை விருத்தி செய் யும் சுய உற்பத்தியும் விவசாய கைத்தொழில் முயற்சிகளும் கணிசமான அளவுக்கு வளர்ச்சி கண்டதை எவரும் மறுக்க முடியாது. இந்நிலை எழுபதுகளின் பிற்பகுதி வரை இருந்து வந்தது.

ஆனால் 1977ல் இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின் நாட்டின் பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாட்டு அம்சங்கள் யாவும் தலை கீழ் மாற்றங்களை நோக்கி ஏகாதிபத்திய முதலாளித்துவ பாதைக்கு திசை திருப்பப்பட்டன. தேசிய பொருளாதாரமும் சுயசார்பும் இல்லா தொழிக்கப்படுவதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டன.

**வெகுஜனன்**

அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்டதன் வாயிலாக தாராளமயம் தனியார் மயம் ஏகாதிபத்திய உலகமயம் கேள்வி நியாயமின்றி புகுந்து கொண்டன. அவற்றை மறைப்பதற்கு பேரினவாத யுத்தம் திரையாகத் திணிக்கப்பட்டது. இவற்றுக்கு சாதகமாக உலகச் சூழலும் மாறியது. சோவியத் யூனியனது சிதைவும் சோஷலிசத்திற்கான தற்காலிகப் பின்னடைவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலின் விரிவாக்கத்திற்கு வசதிகளை வழங்கியது. அத்துடன் தகவல் தொழில் நுட்பத்தின் வரவும் வளர்ச்சியும் தாராளமயம் தனியார் மயம் உலக மயமாதலுக்கு மேலும் கவர்ச்சிகரமான வலுவைச் சேர்த்தது. இத்தகைய போக்குகளை நடைமுறைப்படுத்தி வழிநடத்திய அரசியலுடனேயே 80 பதுகளிற்குள் இலங்கை புகுந்து கொண்டது.

> **சமூகச் சீரழிவுகளுக்கு ஆன்மீக அறிவுரைகள் பயன்தர மாட்டாது. உலக மயமாதலை எதிர்த்து வீழ்த்த வேண்டும்.**

பொருளாதார முறைமையும் சமூக பண்பாட்டு அம்சங்களும் மாறுதல்களுக்கும் கருத்தியல் சிந்தனைப் போக்குகளுக்கும் உள்ளாகிறன. அதன் மூலம் மறுகொலனித்துவம் இலங்கைக்குள் புகுத்தப்பட்டது. அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான நவ கொலனித்துவத்தை ஒரு அமைப்பு முறையாக நிலை நிறுத்திக் கொண்டது.

ஒரு ஆரோக்கியமான சமூகச் சூழல் மக்களுக்கும் நாட்டிற்கும் சார்பான வளர்முகமாக மாறிச் செல்வதை ஏகாதிபத்தியம் அனுமதிக்க மாட்டாது. எனவே மக்களின் சமூக பண்பாட்டு அம்சங்களை திட்டமிட்டே பல முனைகளில் சீரழிக்கப்பட்டது. பொதுவாகவே மக்கள் மத்தியில் நுகர்வுப் பண்பாட்டை வளர்த்தது. எத்தகைய வழிமுறைகளைப் பயன்படுத்தியாவது பணத்தைச் சேர்ப்பது அதற்காக எதையும் செய்து கொள்வது என்ற மனிதப் பேராசைப் பயனத்தை அறிமுகப்படுத்தி வைத்தது. மனிதர்களுக்கிடையே அப்பட்டமான பண உறவைத் தவிர வேறு எவ்வித ஒட்டுமில்லை உறவும் இல்லை என்ற முதலாளித்துவ தனிநபர் லாபச் சிந்தனையை வழியே வைத்தது. இதன் மூலம் சுயநலமும் பணப் பேராசையும் மனிதர்களை பிடித்தாட்டும் பிசாசுகளாகின. இவற்றின் வழியே பயணம் செய்யும் புதிய தலைமுறையினரை ஏகாதிபத்தியம் உருவாக்கி வளர்க்கிறது. அதற்கு முற்றிலும் ஊக்கமும் ஆக்கமும் தரக் கூடிய புலம் பெயர்ந்த நமது சமூகத்தினரையும் பயன்படுத்திக் கொண்டது.

இன்று நமது சமூகச் சூழலிலே யாவும் மேற்கு மயமாகி வருகின்றன. அழகு சாதனப் பொருட்கள் முதற் கொண்டு ஆடை அணிகலன்கள் யாவும் நவநாகரீகம் என்ற பெயரில் மக்கள் மத்தியில் பரவி வருகின்றன. இவற்றுக்கான விற்பனைப் பெருக்கத்திற்கு ஒலி ஒளி பத்திரிகை ஊடகங்கள் யாவும் பாரிய விளம்பரங்களைச் செய்கின்றன. உணவுப் பழக்கம் கூட பொதிசெய்யப்பட்ட விரைவுணவாக மாற்றம் பெற்று வருகின்றன. நமது பாரம்பரிய தானிய-தாவர உணவுகள் ஓரங்கட்டப்பட்ட நிலையில் உள்ளன. நமது பாரம்பரியத்தில் இருந்து வந்த உணவுப் பண்பாடு ஏகாதிபத்திய நுகர்வுப் பண்பாட்டால் சாகடிக்கப்பட்டே வருகின்றன. இதன் மூலம் பலவகை நோய்கள் பரவும் சமூகச் சூழல் உருவாகி வருகிறது.

நமது கலை இலக்கியத்துறை அந்நிய நச்சுக் கலை இலக்கியத்தால் நாசப்படுத்தப்பட்டு வருகின்றது. அரைகுறை ஆடைகளும் ஆபாசங்களும் பாலியல் வக்கிரங்களும் கவர்ச்சி காட்டும் காட்சிகளும் சினிமா சஞ்சிகைகள் பத்திரிகைகள் வாயிலாகப் பரப்பப்படுகின்றன. தொலைக் காட்சி வானொலிகள் மூலம் மக்களின் குறிப்பாக இளந்தலைமுறையினரின் சிந்தனைகளைத்திசை திருப்பி நாசகாரப் பாதையில் வழிநடக்க வைக்கின்றன. இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும். கேடுகெட்ட பெரிய திரை சின்னத்திரை படங்கள் நாடகங்கள் இன்று நகரங்களில் மட்டுமன்றி பின்தங்கிய குக்கிராமங்கள் வரை கொண்டு செல்லப்படுகின்றன.

நகரங்களில் மேற்குலகக்குப்பைகள் பொழுது போக்குக்கு என கொட்டப்படுகின்றனஇவற்றின் விளைவாக இளைஞர் யுவதிகள் மட்டுமன்றி சிறுவர் சிறுமிகள் கூட பிஞ்சில் வெம்பி வழிதவறி விழுபவர்களாகி வருகின்றனர். போதைப் பொருள் பாவனை பாடசாலைகளில் இருந்தே ஆரம்பமாகும் அவல நிலையைக் காணகிறோம். பாலியல் வல்லுறவுகள் கொலைகள் வழிப்பறிகள் நாளாந்தம் விரிவடைந்து வருகின்றன. போதைப் பொருட்கள் கடத்தல் விநியோகம் என்பனவற்றுக்கான பாதாள உலகக் குழுக்களிடையேயான கொலைகள் நாளாந்தம் பெருகிவருகின்றன.

இவ்வாறு பலவகைச் சமூகப் பண்பாட்டுச் சீரழிவுகள் பல்கிப் பெருகிய வண்ணம் உள்ளன. பழமைவாதிகள் ஆன்மீக வாதிகள் இவை பற்றி ஆதங்கம் தெரிவித்து அறிவுரைகள் வழங்கி வருகின்றனர். ஆனால் இத்தகைய சமூக பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள பொருளாதார அரசியல் சமூகச் சூழல் பற்றியோ அவற்றை நம்மீது திணித்து நிற்கும் ஏகாதிபத்திய தாராளமயம் தனியார் மயம் உலக மயமாதல் பற்றியோ அதிகமான அறிவுஜீவிகளோ கல்வியாளர்களோ பேசாதவர்களாகவே இருந்து வருகின்றார்கள். ஏனெனில் மெத்தப்படித்த சிலர் உலகமயமாதலால் நன்மை உண்டு என உளறுகின்றனர்.

ஏகாதிபத்திய உலக மயமாதலை எதிர்த்து பரந்த மக்கள் எழுச்சி எழுந்து அதனை முறியடிக்கும் போதே அழிவுகளைத் தந்து கொண்டிருக்கும் சமூக பண்பாட்டுச் சீரழிவுகளை முடிவுக்கு கொண்டுவர முடியும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# நாட்டிற்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் பயனற்ற ஜனாதிபதி தேர்தல்

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நவம்பர் 22 ஆம் திகதிக்குள் நடத்தப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அடுத்த வருடமே தனது பதவிக் காலம் முடிவடைவதாக ஜனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் கூறிவந்தார். அதனை எதிர்த்து ஹெல உறுமய உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான மனுவொன்றை தாக்கல் செய் திருந்தது. அதற்கு தீர்ப்பளிக்கும் போதே இவ்வருடம் நவம்பர் 22 ஆம் திகதிக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது.

பிரதான முதலாளித்துவ பேரினவாத கட்சிகளான ஐ. தே. கட்சியும், சு.கட்சியும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. ஏனைய கட்சிகள் எந்த அபேட்சகருக்கு ஆதரவளிப்பது என்பது பற்றி கருத்துக்களை வெளியிட்டும் வருகின்றன.

சு. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்சவை சிறிய ஆனால் பல அமைப்புகளின் தலைவர்கள் தரிசனம் செய்து அவருக்கு ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். அவரை ஆதரிப்பவர்கள் அவர்களுக்கு ஆகக்குறைந்த இணக்கப்பாடு கொண்டவர்கள் என்று கூறமுடியாது. மலையக அமைப்புகள், முஸ்லீம் அமைப்புகள் ஹெலஉறுமய, ஜே. வி. பி, ஜனநாயக இடதுசாரி முன்னணி என அவருக்கு ஆதரவு தெரிவித்து வரும் அமைப்புகளை ஏதாவது ஒரு வட்டத்திற்குள் அடக்கவே முடியாது. அந்தளவிற்கு பலருக்கும் ‘ஆம்’ சொல்லி எதிலுமே திடமில்லாதவராகவே மஹிந்தராஜபக்ச காணப்படுகிறார்.

ஐ.தே.கட்சியின் அபேட்சகர் ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியை நாட்டிற்கு சமாதானத்தை நிலைநாட்டப்போவதாகவும், நாட்டை அபிவிருத்தி செய்யப் போவதாகவும் பிரச்சாரம் செய்து வருகிறார். சமாதான பேச்சுவார்த்தைளை வெளிநாட்டில் நடத்த முடியாது எனவும், உள்நாட்டிலேயே நடத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா கூறிவந்தார். அவ்வாறெனில் கிளிநொச்சியில் நடத்தலாம் என்று த. வி. பு. இயக்கம் கூற ஓமந்தையில் நடத்தலாம் என்று சந்திரிகாவின் அரசாங்கங்கம் கூறுகிறது. ஜனாதிபதி தேர்தல் இன்னும் ஓரிரு மாதத்தில் நடைபெறவிருப்பதால் பேச்சுவார்த்தையை நடத்தப் போவதாகக் கூறுவதை எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ள முடியும்?

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தால் அவரை ஆதரிக்கும் சிங்கள பௌத்த தீவிரவாதிகளை மீறியும், அவரின் சொந்த நிலைப்பாட்டை மீறியும் சுமுகமான பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை அவரால் ஏற்படுத்த முடியாது. ரணில் ஜனாதிபதியானால் பேச்சுவார்த்தையை அவர் விட்ட இடத்திலிருந்து தொடங்கப் போவதில்லை. அதாவது வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த வேண்டும் என்ற இணக்கப்பாட்டையே அவர் முன்பு தெரிவித்திருந்தார். ஆனால் அந்த முயற்சியிலிருந்து அவர் பேச்சுவார்த்தையை தொடங்கப்போவதில்லை.

இரண்டு கட்சிகளும் தீர்வு காணவேண்டும் என்று முன்வருவதாக கூறும் போதெல்லாம் அது நடைமுறை சாத்தியமாகப் போவதில்லை என்பதை மனதில் இருத்திக் கொண்டே அவ்வாறு அறிவிப்பதாகவே படுகிறது. சில விடயங்களை முன்னெடுக்க பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பாண்மை தேவை. தற்போதைய 1978 அரசியல் யாப்பின் கீழான விகிதாசார தேர்தல் முன்றையின்படி எந்தவொரு தனிக்கட்சிக்கோ, கூட்டணிக்கோ மூன்றில் இரண்டு பெரும்பாண்மை பலம் பாராளுமன்றத்தில் கிடைக்கப் போவதில்லை. அதனால் ஒரு கட்சி ஒரு முடிவெடுத்தால் இன்னொரு கட்சி அதனை முறியடிக்கும் நிலைப்பாட்டையே கொண்டிருக்கும்.

இதனால் ஜனாதிபதி வேட்பாளர்களில் எவரும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதாக கூறினாலும் அங்விருகட்சிகளிடையே பொது இணக்கப்பாடு ஏற்படாதவிடத்து அவர்கள் அளிக்கும் வாக்குறுதிகளால் எவ்வித பயனும் ஏற்படப்போவ தில்லை.

**நமது விஷேட அரசியல் விமர்சகர்**

நாட்டின் பொருளாதார நிலையில் தனியார்மயமும், பன்னாட்டு கம்பெனிகளின் சுரண்டலும் ஏகாதிபத்திய உலகமயமாதலும் இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எந்த வேட்பாளர் வெற்றி பெற்றாலும் அவை முன்னெடுக்கப்படும். அதனால் இந்நாட்டின் சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகளுக்கும் ஒடுக்கப்படும் தேசியஇன மக்களுக்கும் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

மக்களுக்கும் சூழலுக்கும் நாட்டிற்கும் பேரழிவை ஏற்படுத்தப்போகிற மேல்கொத்மலை நீர்மின் திட்டம், நுரைச்சோலை அனல் மின் திட்டம் போன்றவற்றை முன்னெடுக்க வேண்டும் என்பதே இரண்டு வேட்பாளர்களின் நிலைப்பாடாகும். இலவசக் கல்வியை பறிக்கும் ‘கல்வி மறுசீரமைப்பு’ என்ற நிகழ்ச்சி நிரலையே முன்னெடுப்பார்கள். இந்தியாவின் சேதுகால்வாய்த்திட்டத்திற்கு ஆதரவளிப்பார்கள். இந்நிலையில் எவர் ஜனாதிபதியாக வந்தாலென்ன? வராவிட்டாலென்ன? விளைவுகள் ஒன்றே.

இலங்கையின் அனைத்து மக்களின் நலன்களுக்கு ஏற்றதென 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பையோ ஜனாதிபதி ஆட்சி முறையையோ நியாயப்படுத்த முடியாது. அவற்றை கட்டிக் காப்பதையே வேலைத்திட்டமாக கொண்டுள்ள ரணிலுக்கோ, மஹிந்தவிற்கோ வாக்களித்து பயன் என்ன?

ஆக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 1978 அரசியல் யாப்பையும், ஜனாதிபதி முறையையும் தோற்கடிப்பதையே மக்களின் அக்கறையாக இருக்கவேண்டும். அதனை அடிப்படையாக கொண்ட அரசியல் நிகழ்ச்சியை முன்னுக்கு தள்ளுவதே மக்களின் நலன்சார்ந்த அரசியலாகும்.

எனவே எவருமே ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கும் அரசியல் நெருக்கடிச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இதனை தேர்தலில் எந்தவொரு அபேட்சகருக்கும் வாக்களிக்காமல் இருப்பதன் மூலம் செய்ய முடியும். போராடி வருகின்ற தமிழ் மக்களுக்கும் சரி, ஏனைய மக்களுக்கும் சரி, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் இலங்கையின் முதலாளித்துவ, பேரினவாத அரச கட்டமைப்பு எதிரானதே ஆகும்.

அக்கட்டமைப்பின் தலைவரை தேர்ந்தெடுக்க ஜனநாயகத்தின் பெயரால் மக்கள் பங்களிப்பு செய்யத்தேவை இல்லை. அக்கட்டமைப்பின் தலைவரை தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலையொன்றை ஏற்படுத்த முடியுமாயின் இவ்வரசியல் (1978) யாப்பும் ஜனாதிபதி முறையும் அசைய முடியாத முட்டுச் சந்தியில் விடப்படும். அரசியல் யாப்பில் சிக்கல் தோன்றும். அது பேரினவாத முதலாளித்துவ சக்திகளுக்கு தோல்வி ஆகும். அதை செய்வதற்கு முற்றாகவே தேர்தலை நிராகரிக்கலாம். ஆனால் அவ்வாறான பொதுக் கருத்துக்கு வருவதற்கு இடதுசாரிக் கட்சிகளோ தேசிய இனக் கட்சிகளோ தயாராக இல்லை. அரசியல் யாப்பின் படி அளிக்கப்படும் செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேலான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளரே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். அளிக்கப்படும் செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேல் எவருக்குமே கிடைக்காமல் இருக்கும் நிலையை ஏற்படுத்தும் வகையில் தேர்தலை பயன்படுத்த முடியுமா என்று பார்க்கலாம்?

அதற்கு இரண்டு பெரிய கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் எதிரான வேலைத்திட்டத்தின் கீழ் அடக்கப்படும் தேசிய இனங்களினதும் இடதுசாரி சக்திகளினதும் சார்பில் பொது வேட்பாளரொருவரை நிறுத்தி அவருக்கு கூடுதலான வாக்குகளை அளித்து எவருக்குமே அரைவாசிக்கு மேலான வாக்குகள் கிடைக்காத ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்த முடியும். அதன்மூலம் இலங்கையின் பேரினவாத முதலாளித்துவக் கட்டமைப்பின் தலைமை தேர்ந்தெடுப்பதை தடுத்து அக்கட்டமைப்பை சிக்கலுக்குள் தள்ளி தோல்வியடையச் செய்யலாம். அதன் பின்னர் மக்கள் போராட்டங்களை வளர்த்துச் சென்று எல்லா மக்களினதும் ஆகக்குறைந்த அபிலாஷைகளையும் ஒன்றிணைக்கக்கூடிய ஒரு புதிய அரசகட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடலாம். எனவே எதிர்வரும் தேர்தலில் இரண்டு வேட்பாளர்களில் ஒருவரை வெல்ல வைக்கும் அதே பழைய பணியிலான அரசியலை நிராகரித்து விட்டு, பொய் வாக்குறுதிகளுக்கு மயங்காமல், நீண்டகால நோக்கில் சிந்தித்து செயற்படுவது அவசியம். அடக்கப்படும் தமிழ், முஸ்லீம் மலையகத் தமிழ் தேசிய இனங்களின் உரிமைகளை அதனை வழங்குவதற்கு தடையாக இருக்கும் அரசிலமைப்பையும் ஜனாதிபதி முறையையும் தோற்கடிப்பதற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒரு சந்தர்ப்பமாக கொள்ளலாமா என்று சிந்திப்பது அவசியம்.

# தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு அழிவுகள் தரும் மூன்று திட்டங்கள்!

இலங்கை முழுவதற்கு பொதுவாகவும் தமிழ் முஸ்லீம் மலையக தமிழ் தேசிய இனங்களுக்கு குறிப்பாகவும் அழிவுகளைக் கொண்டு வரக்கூடிய மூன்று திட்டங்கள் காணப்படுகின்றன. மலையகத்தில் தலவாக்கெல்லை பிரதேசத்தில் மேல்கொத்மலை நீர்மின் திட்டம் யப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது. புத்தளம் நுரைச் சோலையில் சீன அரசாங்க உதவியால் அனல் மின்சார உற்பத்தி நிலையம் நிறுவப்பட உள்ளது. வடபுலத்திற்கு அண்மித்ததாக இந்திய அரசினால் சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இம் மூன்று திட்டங்களும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் பாரிய அழிவுகளைப் பல முனைகளிலும் கொண்டு வரப்போகின்றன. ஆனால் இம் மூன்று திட்டங்கள் பற்றியும் அரசாங்கமும் ஆளும் வர்க்க கட்சிகளும் மக்கள் விரோத நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன.

மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தை அரசாங்கம் ஒரு அபிவிருத்தித் திட்டம் என்றே கூறி வருகிறது. ஆனால் இதனை எவ்வகையிலும் மின் அபிவிருத்தித் திட்டம் எனக் கொள்ள முடியாது. இயற்கையானதும் அழகு வாய்ந்தவைகளுமான ஆறு நீர் வீழ்ச்சிகளை சிதைத்தே அணைக்கட்டின் மூலமான நீர்தேக்கம் உருவாக்கப்படவுள்ளது. இதனால் இயற்கையின் சம நிலை பாதிக்கப்பட்டு இப் பிரதேச சூழல் அழிவுகளையே சந்திக்கப் போகின்றன. அப்பிரதேச மக்கள் ஐந்நூறு குடும்பங்கள் வரை வெளியேற்றப்பட உள்ளன. நில அதிர்வுகள் மண் சரிவுகள் அப்பிரதேசத்தில் இடம் பெறும் அபாயங்களைத் தோற்றுவிக்கும். இன விகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் பேரினவாத உள்நோக்கங்கள் நிறைவேற்றப்படும். ராணுவ பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படும். மலையகத் தமிழ் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். இத்தனைக்கும் மத்தியில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு 150 மேகவாட்ஸ் மாத்திரமேயாகும். அதுவும் அப்பிரதேசத்தில் உருவாக்கப்படும் யப்பானிய தொழிற்சாலைகளுக்கே பயன்படுத்தப்படும். இத் திட்டம் இவ் வருடத்திலேயே ஆரம்பிக்கப்பட உள்ளது.

இவ்வாறு மலையக மக்களுக்கும் அவர்களது பிரதேசத்திற்கும் அழிவுகளைக் கொண்டுவரும் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பியக்கத்தை பதினேழு அமைப்புகள் இணைந்து முன்னெடுத்து வருகின்றன. அதே வேளை மலையக அரசியல் தொழிற்சங்க ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும் சில பிற்போக்கு சக்திகள் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது ஆளும் தரப்பினருக்கு வெவ்வேறு நிலைகளில் இருந்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அத்துடன் மக்களின் எதிர்ப்பியக்கத்தை சீர்குலைக்கவும் முற்படுகின்றனர்.

அடுத்து புத்தளம் நுரைச்சோலையில் அனல் மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்க சீன அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நிலக்கரியை எரிப்பதன் மூலம் மின் சாரத்தை உருவாக்கும் இத்திட்டம் மூன்று கட்டங்களில் விரிவுபடுத்தப் பட உள்ளது. ஆரம்பத்தில் 300 மேக வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். அது 900 மேகவாட் வரை விஸ்தரிக்கப்படுமாம். இதனால் இலங்கையில் டீசல் எண்ணெய் மூலம் உற்பத்தியாகும் மின்சாரச் செலவைக் குறைக்க முடியுமாம். அடுத்த ஒக்ரோபர் மாதத்தில் இதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் பட உள்ளன. இத்திட்டத்தால் மின்சாரக் கட்டணம் 2010ம் ஆண்டில் 13 வீதத்தாலும், 2011ல் 22 வீதத்தாலும், 2012ல் 32 வீதத்தாலும் குறையும் என்று கணக்குக் காட்டப்படுகிறது. இது நுரைச் சோலை நிலக்கரி அனல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு ஏமாற்றுப் பிரசாரம் மட்டுமேயாகும்.

ஆனால் இத் திட்டம் ஏற்கனவே முன் வைக்கப்பட்டு அப்பிரதேச மக்களினதும் அரசியல் சமூக சூழல் அக்கறையாளர்களாலும் கடும் எதிர்ப்பைப் பெற்ற ஒரு திட்டமாகும். இத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் நுரைச் சோலையும் அதனையொட்டிய பிரதேசங்களும் கடுமையான பாதிப்பு களை சந்திக்க வேண்டியே வரும். நிலம் நீர் காற்று மரம் செடிகள் கடல் போன்றன மாசடைந்து மனிதப் பாவனைக்குவாத நிலைமை ஏற்படும். மக்களது சுகாதாரம் பாதிக்கப்பட்டு புற்றுநோய், கசாநோய் மற்றும் தோல் வியாதிகள் ஏற்படும் அபாயம் உருவாகும். மண்வளம் பாதிக்கப்பட்டு விவசாயம் பாழடையும். இத்தனை பாதிப்புகள் மத்தியிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இத்திட்டத்தை நிறை வேற்ற முன்பு யூஎன்.பி.யும் பின் பொது சன முன்னணியும் முயன்று வந்துள்ளன. ஆனால் இதில் வேடிக்கை யாதெனில் எதிர்க்கட்சியில் இருக்கும் போது இத்திட்டத்திற்கு எதிர்ப்பு போல நடிப்பார்கள். அல்லது மௌனமாக இருப்பார்கள். பதவிக்கு வந்ததும் அதனை நடைமுறைப்படுத்த முன் நிற்பார்கள்.

மூன்றாவது திட்டம் தான் இலங்கையின் வடபுலத்திற்கும் தென்னிந்தியாவின் கீழ்ப் பகுதிக்குமிடையிலான ஆழம் குறைந்த கடற்பரப்பில் வெட்டப்பட்டு வரும் சேது சமுத்திரக் கால்வாய் திட்டமாகும். இத்திட்டத்தை இந்திய அரசு மேலாதிக்க திமிர்த்தனத்துடன் இலங்கை அரசுடன் எவ்வித கலந்து பேசலும் இன்றி நடைமுறைப்படுத்து வருகின்றது. இதனால் இலங்கையின் துறைமுகங்கள் வருவாய் இழப்பைப் பெற இருக்கும்

அதே வேளை அதனையும் விட வடபுலம் கடும் நில நீர் சூழல் பாதிப்புகளைப் பெறப் போகின்றது. புத்தளம் முதல் முல்லைத்தீவு வரையான கடற்பரப்பும் கரைப் பிரதேசங் களும் பாதிப்படையும். பவளப்பாறைகள் அழிக்கப்படுவாதல் மீன் இனங்கள் அருகிவரும் அயாயத்தை காண முடியும். கடல் நீரோட்டச் சமநிலை மாற்றம் ஏற்பட்டு வடபுலத்துத் தீவுகள் அழிவு நோக்கித் தள்ளப்படும். நிலத்தடி நன்னீர் குறைந்து உவர் நீர் மேற் கிளம்பும். ராணுவப் பாதுகாப்பு என்ற பெயரில் வடக்கு கிழக்கும் முழு இலங்கையும் கண்காணிக்கப்பட்டு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும்.

நானூறு கடல் மைல்களையும் முப்பத்தாறு மணி நேரத்தையும் சேது கால்வாய்த் திட்டம் சுருக்கி தமது பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் திட்டம் என்றே இந்திய அரசு கூறுகிறது. ஆனால் அவற்றுக்கும் அப்பால் இந்திய பிராந்திய மேலாதிக்கத்திற்கான ராணுவ பாதுகாப்பு உள்நோக்கங்களே உட்கிடையானவையாகும்.

எனவே மேற் கூறிய மூன்று திட்டங்களும் அடிப்படையில் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களுக்கும் அவர்களது பிரதேசங்களுக்கும் நன்மைகள் எதனையும் கொண்டு வரப்போவதில்லை. கடும் பாதிப்புகளையும் அழிவுகளையும் கொண்டு வரப்போகின்றன. இவற்றை முன் உணர்ந்து ஏற்கனவே முன்னெடுக்கப்படும் மக்கள் எதிர்ப்பியங்களுக்கு மேலும் வலுவூட்டி உறுதியுடன் முன்னெடுக்க வேண்டும். ஆனால் குறுகிய அரசியல் நோக்கிலும் பாராளுமன்றப் பதவி மோகத்திலும் ஆளும் வர்க்க சக்திகளின் தயவுக்காவும் மண்டியிட்டு நிற்போர் மேற்படி மூன்று திட்டங்களினால் விளையப் போகும் அபாயங்களைப் பற்றி அக்கறை கொள்ளதவர்களாகவே இருந்து வருகின்றனர். இத்தகை சக்திகளை மக்கள் உரியவாறு அடையாளம் கண்டு கொள்வது அவசியமாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



முதலாளிய சனநாயகம் முதலாளிய சமுதாய அமைப்பைப் பேணுவதைத் தன் அடிப்படை நோக்கமாகக் கொண்டது. எனவே முதலாளிய அமைப்பின் கீழ் கிடைக்கக் கூடிய சனநாயக உரிமைகளைக் கொண்டு முதலாளிய ஆட்சிமுறையை எவரும் மாற்றி அமைக்க முயன்றால் முதலாளி வர்க்கம் சும்மா இருக்குமா? சனநாயகக் கட்சிகள் என்ற பேரில் இயங்குகின்ற முதலாளியக் கட்சிகள் மூலம் மாற்றத்தைத் தடுத்து நிறுத்த இயலாத போது, வேறு கருவிகள் மூலம் தடுத்து நிறுத்த அது தயங்காது. மூன்றாமுலக நாடுகளில் அது மிகவும் குரூரமான முறைகளிற் செயற்படுவதற்குக் காரணம் மூன்றாமுலகின் முதலாளிய வர்க்கத்திற்குப் பின்னாலிருந்து இயங்குவது அந்நிய ஏகபோக முதலாளியம். அதை நாம் ஏகாதிபத்தியம் என்று அடையாளப்படுத்துகிறோம்.

# சமூகமும் சனநாயகமும்

## அரசியல் வரலாற்று விசாரணை (04)

பேராசிரியர் சி.சிவசேகரம்

## முதலாளியமும் சனநாயக மறுப்பும்

மூன்றாமுலகின் சனநாயக ஆட்சி எதுவும் மக்களின் நன்மை கருதி எடுக்கும் எந்த நடவடிக்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்கட்கு மாறானது என்றால் அந்த ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ன செய்யவும் கூசாது என்பதைக் கடந்த அறுபது ஆண்டுகளாக உலகம் கண்டுள்ளது. எனவே மூன்றாமுலகின் எந்த முதலாளிய சனநாயகமும் நிலையான ஆட்சியைக் கொண்டிருப்பதானால் அது முதலாளிய ஆட்சியாக இருந்தால் மட்டும் போதாது. அது ஏகாதிபத்தியத்தின் ஆணையை மீறாமல் நடந்து கொள்ளவும் வேண்டும்.

மூன்றாமுலகில் முழுமையான சனநாயகம் இயலாமலிருப்பதற்கு

**பல கட்சி ஆட்சி முறை பாராளுமன்றம் தேர்தல்கள் பெரும்பான்மை அரசாங்கம் எதிர்கட்சி என்பனவற்றையே முதலாளித்துவ வாதிகள் சனநாயகம் என்று வாதிக்கிறார்கள். இதன் மூலம் உண்மையான அரச அதிகாரம் எங்கே இருக்கிறது என்ற கேள்வி தவிர்க்கப்படுகிறது.**

அடிப்படையான காரணம் ஏகாதிபத்தியமே. மூன்றாமுலக நாடெதிலும் சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஆட்சி மக்கள் நலனைக்காக்க வேண்டுமென்றால் ஏகாதிபத்தியத்தையும் உள் நாட்டில் அதன் முகவர்களாகச் செயற்படுகிறவர்களையும் எதிர்த்துச் செயற்பட வேண்டும். உள்ளூர், அயல் முதலாளி வர்க்கத்தினரது ஆதிக்கத்திலுள்ள ஊடகங்கள் மட்டுமன்றி இன்று என். ஜி. ஓக்கள் போன்ற அமைப்புக்களும் சில வலதுசாரித் தொழிற்சங்க அமைப்புக்களுங் கூட முதலாளிய நலன்கட்காக இயங்குகின்றன. அவற்றின் குழிபறிப்பு வேலைகளை முதலாளிய சனநாயகச் சட்ட வரையறைகட்குட்பட்டு முறியடிக்க இயலாதபடி முதலாளிய அரச இயந்திரமும் அதன் நீதி நிருவாக முறையும் கவனித்துக் கொள்ளுகின்றன. அதையும் மீறி ஒரு அரசாங்கம் தன் மக்கள் சார்பாக ஏகாதிபத்தியத்தை எதிர்க்குமானால் இராணுவச் சதி மூலமோ நேரடியான ஆக்கிரமிப்பின் மூலமோ அந்த ஆட்சியைக் கவிழ்க்க ஏகாதிபத்தியம் தயங்காது. இதை அண்மையில் வெசுவேலாவில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஹியூகோ சாவெஸ் ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் முகவர்களும் மேற்கொண்ட முயற்சிகளிலிருந்து அறிவோம். எனினும் சிலே, நிக்ராஹுவா போன்ற நாடுகளில் அமெரிக்கா பெற்ற வெற்றியை வெனிசுவேலாவிற் பெற முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒன்று பொதுவாகவே தென் அமெரிக்காவில் அமெரிக்காவுக்கு எதிரான வெகுசன உணர்வு வலுப்பெற்று வருவதும் அமெரிக்க ஆதரவு ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பு வலுத்து வருவதுமாகும். இன்னொன்று, சாவெஸ் ஆட்சி தொழிலாளரதும் பிற ஒடுக்கப்பட்ட மக்களதும் நேரடியான பங்குபற்றுதலுடன் சதிகாரர்களை எதிர்த்து நிற்பதாகும். இவற்றை விட, வெனிசுவேலாவின் எண்ணெய் வளம் வெனசுவேலா ஆட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதும் சாவெஸ் அரசாங்கத்தின் கைகளை வலுப்படுத்துகிறது.

பொதுவாக, ஒரு முதலாளிய அரசாங்கம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க வேண்டி நேரும் போது அந்த எதிர்ப்புத் தன்னை அதிகாரத்திலிருந்து கவிழ்ந்துவிடாமல் கவனித்துக் கொள்ளும் தேவை இருக்கிறது. ஏகாதிபத்தியம் தன்னுடைய லாபத்தில் கைவைப்பதை அது வெறுத்தாலும், நாட்டின் உழைக்கும் மக்களின் கைக்கு அதிகாரம் போவதை அது விரும்புவதற்கு இடமில்லை. எனவே அது உழைக்கும் மக்களின் ஆதரவைச் சில சமூக சீர்திருத்த. நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ள முயல்கிறது. அதற்கப்பால் அவர்களது செல்வாக்கு விரிவதை அது விரும்பாது. பாராளுமன்ற இடதுசாரிகள் போன்றவர்களுடனும் தொழிற்சங்கவாதிகளுடனும் தன் வசதிக்கேற்றபடி பேரங்களைச் செய்து தன்னுடைய இருப்பை உறுதி செய்கிறது. என்றாலும் ஏகாதிபத்தியத்தை அதனால் வெல்ல இயலாத விதமாக உலகப் பொருளாதாரம் ஏகாதிபத்தியவாதிகளது கைகளில் சிறைப்பட்டுள்ளதால் அது முடிவில் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்கிறது. அதன் விளைவாக அயல் வற்புறுத்தலின் கீழ் முன்னர் நடைமுறைப்படுத்திய சீர்திருத்தங்களை எல்லாம் ஒவ்வொன்றாக இல்லாமற் செய்கிறது. அத்துடன் சனநாயகத்துடன் சேர்த்துக் கருதப்படும் தொழிற்சங்க உரிமைகள் முதலாகப் பலவேறு சமூக அரசியல் உரிமைகட்கும் குழிபறிக்கிறது.

எனவே சனநாயக உரிமைகளைப் பேணுவதற்காகவும் பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெறுவதற்காகவும் மக்கள் போராட வேண்டி நேருகிறது. முதலாளிய சனநாயகத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட உரிமைகளை ஆளும் வர்க்கம் முதலாளிய சனநாயகத்தை விகாரப்படுத்தியோ வரையறைப்படுத்தியோ பறித்து விடுகிற நிலையில் அந்த உரிமைகளை மீட்டெடுக்கும் போராட்டம் திரும்பவும் முதலாளிய சனநாயகத்தை நிலை நிறுத்துவதுடன் நின்றுவிட முடியுமா? அப்படி நிற்குமானால் அந்த உரிமைகளைப் பறித்தெடுத்த முதலாளி வர்க்கமும் அதன் எசமான வர்க்கமான ஏகாதிபத்தியவாதிகளும் மீண்டும் அவற்றைப் பறித்தெடுக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எனவே சனநாயக உரிமைகளை மீட்டெடுக்கும் போராட்டம் அடிப்படையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரானதும் அதன் கூட்டாளிகளான உள்ளூர்த் தரகு முதலாளிகட்கும் எதிரானதுமாகும். தேசிய முதலாளி வர்க்கம் என்பது அடையாளமிழந்து பலவீனப்பட்டு வருகிறது. ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்தே தம் நிலைப்பைப் பேண முடியும் என்று அதன் பெரும் பகுதியினர் கருதுகின்றனர். ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் தேசிய முதலாளியம் எதிரியல்ல. எனினும் அதனால் எந்த விதமான பயனுள்ள தலைமைத்துவத்தையும் வழங்க இயலாது. எனவே சனநாயக உரிமைகட்கான போராட்டத்தின் தலைமைச் சக்திகளான ஒடுக்கப்பட்ட மக்களே தாம் போராடி வெல்லவுள்ள சனநாயகத்தின் தன்மையைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

சோவியத் யூனியன் நிறுவப்பட்டபோது அங்கே சோஷலிச சனநாயகத்தை நிறுவுவதே புரட்சியின் நோக்கமாயிருந்தது. அதை முழுமைப்படுத்துவதில் பலவேறு இடையூறுகள் இருந்தன. எனினும் மேலை நாட்டுப் பிரசாரங்கள் சித்தரிக்கிற விதமான ஒரு சர்வாதிகார அடக்குமுறை ஆட்சி இருக்கவில்லை. இரண்டாம் உலகப்போரின்முடிவில் ஃபாஸிஸத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிறுவப்பட்ட சனநாயகத்தை மக்கள் சனநாயகம் என்று அழைத்தனர். ஆனாற் சீனாவில் புதிய சனநாயகம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. பேர்களில் இருந்த இந்த விதமான வேறுபாடுகள் புரட்சியின் நோக்கத்திலும் சனநாயகத்தின் தன்மையிலும் இருந்த அடிப்படை வேறுபாடுகளைக் குறித்தன.

சனநாயகம் என்றால் பல கட்சி அரசியல், பாராளுமன்றத் தேர்தல், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ளவர்களது அரசாங்கம் என்ற விதமான ஒரு படிமத்தை உருவாக்கிக் கொண்டு, அப்படிப்பட்ட அமைப்பு இல்லாத அரசாங்கம் சனநாயக அரசாங்காங்கமல்ல என்று முதலாளியச் சனநாயகவாதிகள் வாதிக்கிறார்கள். இது முதலாளிய அதிகார அடுக்கின் ஒரு அலகா இயங்கும் பாராளுமன்றத்தை முழுமையான அரசியல் அதிகாரமாயும் பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் மக்களால் அரசாங்கங்களை மாற்றியமைக்க இயலுமாதலால் அதைச் சனநாயகம் என்றும் மயங்க வழி செய்கிறது. உண்மையான அரச அதிகாரம் எங்கேயிருக்கிறது என்ற கேள்வி தவிர்க்கப்படுகிறது.

மாக்ஸியவாதிகள் முன்வைக்கும் சனநாயகக் கோட்பாடுகள் மக்களின் நேரடியான அதிகாரத்துக்கு முதன்மை வழங்குகின்றன. சமுதாயம் எத்தகைய வளர்ச்சி நிலையில் உள்ளது என்பதைக் கருத்திற் கொண்டே அரசும் ஆட்சிமுறையும் பற்றிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

சோஷலிஸமும் சனநாயகமும் பகையானவை என்பதற்கு மாறாக எந்தவொரு நாட்டிலும் சோஷலிஸ நடைமுறை வெற்றிபெறச் சனநாயகம் அத்தியாவசியமானது. சோஷலிஸத்தைச் சனநாயகத்துடன் இணைப்பதற்குத் தடையான புறக் காரணிகள் போக சுரண்டற் சமுதாயத்தினின்று வழிவழி வந்த சிந்தனைகள் கம்யூனிஸ்ற் கட்சிகளுள்ளும் தொழிலாளி

**மூன்றாம் உலகின் எந்தவொரு முதலாளிய ஜனநாயகமும் நிலையான ஆட்சி கொண்டிருக்க வேண்டுமானால் ஏகாதிபத்திய ஆணையை மீறாமல் நடந்து கொள்ள வேண்டும். அப்படி மீறினால் அமெரிக்க ஏகாதிபத்தியம் எதனைச் செய்யவும் பின் நிற்கமாட்டாது.**

வர்க்கத்தினுள்ளும் வேரோடியிருப்பது முக்கியமான ஒரு பிரச்சனையாகும். எனவே சோஷலிஸமோ சனநாயகமோ அடிப்படையான ஒரு சமூக மாற்றத்தையடுத்து உடனடியாகவும் நிரந்தரமாகவும் நிலை கொள்ளுவதில்லை. சோஷலிஸத்தையும் சனநாயகத்தையும் முன்னோக்கி உந்துவதானால் இடையறாத போராட்டம் தேவை. அது சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு தளத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும். சனநாயகத்தை வலுப்படுத்தாமல் ஏகாதிபத்திய எதிரிகளிடமிருந்து சோஷலிஸத்தைக் காப்பாற்ற இயலாது என்பதனாலேயே மக்கள் சனநாயகம், புதிய சனநாயகம் போன்ற கருத்தாக்கங்கள் சமூக நடைமுறையின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்பட்டு மேலும் ஆழப்படுத்தப்பட வேண்டும். இதனாற் கடந்த காலத்தின் தவறுகளை சோஷலிஸ விடுதலை இயக்கங்கள் தவிர்க்க இயலுமாகும்.

## இந்திய மேலாதிக்கத்தின் விரிவாக்கமே சேது சமுத்திரக் கால்வாய் திட்டம்

இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்கள் இந்தியாவை இப் பிராந்தியத்தில் பெரு வல்லரசாக்கும் அடிப்படையிலேயே தமது பொருளதார அரசியல் ராணுவத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வந்துள்ளனர். தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி ஆசியா முழுவதற்கும் தலைமை தாங்கும் வல்லரசு ஆதிக்க போக்கே அவர்களது அடிப்படையாகும். அதுவே அகன்ற பாரதக் கொள்கையின் அர்த்தமுமாகும்.

1955ல் அன்றைய பாரதப் பிரதமராக இருந்த ஹவகர்லால் நேரு ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகையில் “இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகள் வெறும் கலாச்சார அரசுகளாக இருந்தால் பொதுமானது” என்று கூறியதன் மூலம் இந்திய பிராந்திய மேலாதிக்க எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதன் வழியிலேயே இந்தியா 2020ம் ஆண்டில் பெரு வல்லரசாகத் திகழப்போகிறது என்று கூறப்படுகிறது. இத்தகைய வெளிப்பாடுகள் அடங்கிய திட்டமே இந்திய பிராந்திய மேலாதிக்கமாகும். இதன் அடிப்படையிலேயே சேது சமுத்திரக்கால்வாய் வெட்டும் திட்டத்தை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டம் இலங்கையில் குறிப்பாக வடக்கில் கடுமையான பொருளாதார சூழல் பாதிப்புகளை கடலிலும் தரையிலும் ஏற்படுத்தப் போகின்றன. இவை பற்றிய தகவல்களைத் சமூக அக்கறை மிக்க ஆய்வாளர்கள் ஆதர பூர்வமாகத் தருகிறார்கள். ஆனால் சில கல்வியாளர்கள ஆய்வாளர்கள் இந்திய மேலாதிக்கத்திற்கு சாமரை வீசி வருகிறார்கள்.

இக் கால்வாய் நடைமுறைக்கு வருவதால் மன்னார் முதல் முல்லைத்தீவு வரை வாழும் கரையோர மக்கள் பல்வேறு வகையான சமூகப் பாதிப்புகளைப் பெறுவர். தொழில் இழந்து தமது பாரம்பரிய இடங்களில் வாழமுடியாது இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய அவலநிலைக்கும் மக்கள் உள்ளாவர்.

### யாழ். கருத்தரங்கில் கருத்துரை

சேது சமுத்திரக் கால்வாய் மூலம் ராணுவ வல்லாதிக்கக் கண்காணிப்பு அதிகரிக்கப்படும். அதனால் எமது கடற்பரப்பில் மீனவர்கள் தொழில் செய்யமுடியாத நிலை தோன்றும். அதே வேளை இந்திய ஆளும் வர்க்கம் தமிழ் மக்கள் முன்னெடுக்கும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை கட்டுப்படுத்தவோ அன்றி நசுக்கவோ இக் கால்வாயை ராணுவ ரீதியில் பயன்படுத்துவர் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அத்துடன் முழு இலங்கையையும் ராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி தனது காலடியில் வைத்திருப்பதற்கு இக்கால்வாய் பயன்படும் ஒன்றாகும். அது மட்டுமன்றி சீன, பாகிஸ்தான் நாடுகளின் கடல் ஆதிக்க விரிவாக்கத்தை மிஞ்சிய நிலைக்கு தமது கடல் ஆதிக்கத்தை விரிவாக்கவும் சேது கால்வாய் பங்களிப்பை வழங்கப் போகின்றது.

எனவே சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் என்பது இந்திய பிராந்தி மேலாதிக்கத்தின் விரிவாக்கமேயாகும். இதனை மக்களுக்கு விளங்க வைப்பதும் அதனை எதிர்ப்பதும் அவசியமானதாகும். ஆனால் தேசிய இனவிடுதலைப் போராட்டச் சூழலில் இச் சேது சமுத்திரத் திட்டத்தால் ஏற்படும் பாதக விளைவுகள் பற்றி அக்கறை காட்டப்படாத நிலை கவலைக்குரியதாகும். மேல் கொத்மலைத் திட்டம், நுரை சோலை அனல் மின் திட்டம் ஆகியவற்றுக்கு எதிராகக் காட்டப்படும் மக்கள் எதிர்ப்பு அளவுக்கு வட புலத்தில் முன்னெடுக்கப்படவில்லை. இந்நிலை மாற்றப் படவேண்டும்.

இவ்வாறு கடந்த 15. 08. 2005 அன்று யாழ்- திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் “சேது சமுத்திரக் கால்வாய் திட்டமும் அதன் பாதிப்புகளும்” என்னும் தலைப்பில் நடாத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சி. கா. செந்திவேல் கூறினார். யாழ்- பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர். கே. ரி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சூழலியலாளர். திரு.ரி.திருக்குமரன் இத்திட்டதால் ஏற்படப் போகும். சூழலியல் பாதிப்புகளை ஆழமாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தார். நன்றியுரையை சமூக விஞ்ஞான படிப்பு வட்ட நிர்வாகி திரு.வேல்தஞ்சன் வழங்கினார்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தண்ணீர் என்பது உயிரின் ஆதாரம்!

தண்ணீர் என்பது உயிரின் ஆதாரம். மண்ணின் உயிர்த்துளி. உயிரின வாழ்க்கைச் சூழலின் அடிப்படை. தண்ணீர் எந்த முதலாளித்துவக் கொம்பனாலும் உற்பத்தி செய்யப்பட்டதல்ல. உற்பத்தி செய்யவும் முடியாது. அது இயற்கையின் கொடை. புவி ஈர்ப்பு விசைதான் அதை விநியோகம் செய்கிறது. புல் பூண்டுகள் முதல் மனிதன் ஈறான எல்லா உயிரினங்களுக்கும் இந்த மண்ணுக்கும் சேர்த்துத்தான் இயற்கை தண்ணீரை வழங்குகிறது.

உயிரின் தோற்றத்திற்கும் உலகின் எல்லா வளங்களுக்கும் மூலம் தண்ணீர். மனித உடலின் பெரும்பகுதி தண்ணீர். தண்ணீர் இல்லையேல் உணவு உற்பத்தி இல்லை. உயிரில்லை. மண்ணும் காற்றும்கூட தண்ணீரின்றேல் வறண்டு போய்விடும். எல்லா இயற்கை வளங்களுக்கும் மனித வளத்திற்கும் தாய் வளம் தண்ணீர். 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக் காதே' என்ற முது மொழியின் பொருள் இதுதான்.

பூமியைத் தவிர பிற கோள்கள் எதிலும் உயிரினம் இல்லை. புல் பூண்டு கூட இல்லை. காரணம், அங்கெல்லாம் தண்ணீ ரில்லை. நீரின்றி அமையாது உலகு! இயற்கையின் விதிப்படியே தண்ணீர் என்பது எல்லா உயிரினங்களுக்கும் இந்த மண் ணுக்கும் உரித்தான பொதுச் சொத்து. அது எந்தவொரு தேசத்தின் தனிச்சொத்துமல்ல. உலகின் பொதுச்சொத்து. தற்போது வாழும் தலைமுறைக்கு மட்டுமல்ல, வரவிருக்கும் தலைமுறைக்கும் அதன்மீது உரிமை உண்டு.

அத்தகைய தண்ணீரை ஒரு சில முதலாளிகளின் லாபத்திற் காகத் தனிஉரிமையாக்குவதும் காசுக்கு விற்கும் கடைச்சரக் காகக் கருதுவதும் மாற்றுவதும். அநீதி! சமூக விரோத மக்கள் விரோதக் கொடுஞ் செயல்.

### தண்ணீர் வியாபாரம்: ஒரு பயங்கரவாதம்!

ஆனால் அத்தகைய அநீதிதான் இன்று கோலோச்சுகிறது. தாகம் தீர்க்கும் தண்ணீர் லாபம் பார்க்கும் சரக்காக விற்பனை செய்யப்படுகிறது. 'காசுள்ளவனுக்குத்தான் தண்ணீர்' என்ற கயமை கடைகளில் சரம்சரமாகத் தொங்குகிறது. போத்தல்க ளாக அணிவகுத்து நின்று பணம் காசில்லாத ஏழைகளை எள்ளி நகையாடுகிறது.

நம்மில் பலர் பாக்கெட் தண்ணீருக்குப் பழகி விட்டனர். பாலை விட அதிக விலை விற்கும் பாட்டில் தண்ணீரை வாங்கிக் குடிக்கவும் பலர் பழகிவிட்டார்கள். மற்ற நுகர் பொருட்கள் விலை கொடுத்து வாங்குவதைப் போல கேன் கேனாகத் தண்ணீரை விலை கொடுத்து வாங்குவதை சகஜமாகக் கருதுகிறார்கள். தண்ணீர்ப் பஞ்சம் தலை விரித்தாடும் இந்தக் காலத்தில் இது கட்டாயம் தேவையான தென்றும் தவிர்க்க முடியாததென்றும் கருதுகிறார்கள்.

"குழாய்த் தண்ணியும் லாரித் தண்ணியும் பிடிப்பதற்காகக் கால் கடுக்கக் காத்து நிற்க வேண்டும். பிறகு அதைக் கொண்டு வந்து காய்ச்சிக் குடிக்க வேண்டும். இந்தத் துன் பத்துக்கு கேன் தண்ணியையே காசுகொடுத்து வாங்கிவிட லாம். வேறென்ன செய்வது?" என்று நடுத்தரவர்க்கத்தினர் இதை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். தரமான நல்ல குடிநீரை ஓசியிலா தரமுடியும்? காசு கொடுத்துதான் வாங்க வேண்டும் என்று தண்ணீர் வியாபாரிகளுக்கு வக்காலத்து வாங்குகிறது பணத்திமிர் கொண்ட வர்க்கம்.

தண்ணீர் வியாபாரத்தை அனுமதிப்பதும் அதற்காக பொதுச் சொத்தான நீர்வளங்களையும் நீராதாரங்களையும் தனியார் கொள்ளைக்குத் திறந்து விடுவதும் பேரழிவுக்கு வழிவகுக்கும் என்று எச்சரிக்கிறோம். நமது நீராதாரங்களை மீட்டெடுக்க முடியாத அளவிற்கு நாசமாக்கி மண்ணையும் நஞ்சாக்கி எல் லாத் தாவரங்களையும் உயிரினங்களையும் ஒழித்துக்கட்டும் பயங்கரவாதம் தான் தண்ணீர் வியாபாரம் என்று குற்றம் சாட்டுகிறோம்.

### தண்ணீர்: இன்னொரு பண்டமல்ல!

ஏனென்றால், உலகின் நீர் ஆதாரம் வரம்புக்குட்பட்டது. கடல்நீர் போக குடிநீருக்கும் விவசாயத்திற்கும் மனிதர் பயன்படுத் தத்தக்க நீரின் அளவு மொத்த உலக நீர் ஆதாரத்தில் 2.5 சதவீதம்தான். துருவப் பகுதிகளில் உறைந்திருக்கும் பனிக்க ட்டிகளைக் கழித்து விட்டால், நமக்குக் கிடைக்கும் நன்னீரின் அளவு 0.3 சதவீதம் மட்டும்தான். இடத்திற்கு இடம் மழையின் அளவு மாறினாலும் மொத்தத்தில் உலகளவில் பெய்யும் மழை ஏறத்தாழ ஒரே அளவாகவே இருந்து வருகிறது. எனவே நம க்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு உயராது. உயர்த்தவும் முடியாது. ஏனென்றால், அது இயற்கையின் கொடை. அது வரம்புக்குட்பட்டது.

அரிசியோ, துணியோ விற்றுத் தீர்ந்துவிட்டால் அவற்றை நாம் உற்பத்தி செய்து கொள்ளலாம். உற்பத்தியின் அளவையும் உயர்த்தலாம். ஆனால் தண்ணீரை அவ்வாறு உற்பத்தி செய்ய முடியாது. அளவையும் கூட்ட முடியாது.

தண்ணீருக்கு மாற்று இல்லை. அரிசி இல்லையென்றால் கோதுமை உண்ணலாம். சில நாட்கள் பட்டினியும் கிடக்கலாம். சைக்கிள் இல்லையென்றால் நடந்தும் செல்லலாம். ஆனால், தண்ணீர் இல்லையென்றால் உயிர்வாழ முடியாது. தண்ணீ ருக்கு எவ்வித மாற்றுப் பொருளும் இல்லை.

தண்ணீரில்லையென்றால் புல், பூண்டு, மரம், பச்சை இல்லை. புழு, பூச்சி, ஊர்வன, நடப்பன, பறப்பன- எதுவும் இல்லை. மனி தனும் இல்லை. உணவு உற்பத்தி நின்று மண்ணே புழுதிக் காடாய் பாலைவனமாய் மாறிவிடும். ஈரப்பதம் வறண்டு காற்றே அனல் காற்றாகும். தண்ணீரில்லையேல் ஏதுமில்லை.

எனவேதான் தண்ணீரை எல்லா நுகர் பொருட்களையும் போன்ற இன்னொரு நுகர் பொருளாகக் கருதக்கூடாது என்கிறோம். தண்ணீரின் அருமையையும் மதிப்பையும் புரிந்தவர் கள் அதனை விற்பனைப் பண்டமாக்கும் கொடுமையை அனுமதிக்கக்கூடாது என்கிறோம்.

## உயிரின அழிவுக்குத் தண்ணீர் வியாபாரம்!

### தண்ணீர்க் கொள்ளையர்கள்

சென்னையில் மட்டும் சுமார் 600-க்கும் மேற்பட்ட தண்ணீர் வியாபாரிகள்-முதலாளிகள் இரவு பகலாக நிலத்தடி நீரை உறிஞ்சுகிறார்கள். சென்னை- தாம்பரம் வட்டாரத்தில் 20 கிராமங்களிலிருந்து மட்டும் 20,000 லாரிகள் அன்றாடம் தண்ணீர் கொண்டு செல்கின்றன என்று கூறுகிறது, சென்னை வளர்ச்சி ஆய்வுக்கழகம் (MIDS) என்ற அரசுசார் நிறுவனத்தின் ஆய்வு. திருவள்ளூர் பகுதியைச் சேர்ந்த நான்கு கிராமங்களிலிருந்து மட்டும் அன்றாடம் 1000 லாரிகள் தண்ணீரைக் கொண்டு செல்வதாகவும், பாலாற்றின் கரை ப்பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 4கோடி லிட்டர் தண்ணீர் உறிஞ்சப்படுவதாகவும் கூறுகிறது இந்த ஆய்வு.

தண்ணீர் வியாபாரிகளில் பலர் ஓட்டுக் கட்சித் தலைவர்கள். இவர்கள் நகரங்கள் பெருநகரங்களைச் சுற்றியுள்ள நல்ல தண்ணீர் கிடைக்கும் இடங்கள், ஊற்றுக்கள் ஆகியவைகளை விலைக்கு வாங்கி அங்கே ஆழ் துளைக் கிணறுகள் அமைத்து தண்ணீர் எடுத்து வந்து புட்டிகளில் அடைத்து பெரும் இலாப த்திற்கு விற்கின்றனர். பல ஆயிரக்கணக்கான லாரிகளில் அன்றாடம் கோடிக்கணக்கான லீட்டர் தண்ணீர் உறிஞ்சப்பட்டு விற்கப்படுகின்றது.

யார் எவ்வளவு தண்ணீர் எடுக்கலாம் என்ன விலைக்கு விற் கலாம் என்ற ஒழுங்குமுறை எதுவுமில்லை. போட்டா போட் டிதான் நிலவுகிறது. ஒரு நாளைக்கு அதிகபட்சம் எவ்வளவு தண்ணீர் எடுக்க முடியுமோ அவ்வளவு தண்ணீர் எடுத்து அவ்வளவையும் நல்ல விலைக்கு விற்று கூடிய விரைவில் பெரும் பணக்காரர்களாக ஆகிவிட வேண்டுமென்பதுதான் ஒவ்வொரு தண்ணீர் முதலாளியின் ஆசையாக- வெறியாக இருக்கின்றது. நகர்ப்புறங்களில் உள்ள பெரும் பெரும் நட்சத்திர தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றின் கழிவறைகளுக்குக் கூட நல்ல குடிநீர் லாரி லாரியாய் வந்து இறங்குகிறது.

### இந்திய ஆட்சியினர் தண்ணீரைத் தனியார் மயமாக்கி உள்நாட்டு வெளிநாட்டு கொள்ளையர்களுக்கு துணைநிற்கின்றனர்

நகரங்களில் அதிகரித்து வரும் மக்கள் கூட்டம் தண்ணீருக் காகத் தவிப்பது அதிகரிக்க அதிகரிக்க தண்ணீர் முதலாளி களின் லாப வெறி அதிகரிக்கிறது. சல்லடைக் கண்ணாகப் பூமியைத் துளைத்தெடுக்கிறார்கள். இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது. அதை ஈடுகட்ட ஆழ்துளைக் கிணற்றின் ஆழத்தைக் கூட்டுகிறார்கள். அதுவும் வறண்டுவிட இன்னும் ஆழப்படுத்துகிறார்கள்.

இந்தப் பகல் கொள்ளக்காரர்களின் லாபவெறிக்கு இணையாக பம்பு செட்டுகளில் குதிரைத்திறன் 500-750 என அதிகரிக்கிறது. குழாய்க் கிணறுகளின் விட்டம் அதிகரிக்கிறது. வெறிகொண்டு உறிஞ்சும் இந்த எந்திரங்களின் மூர்க்கத்தனத்தில் பூமி ஒரு குழந்தையைப் போலத் துடிக்கிறது. சுற்று வட்டார விவசாயிக ளின் வீடுகள் நடுங்குகின்றன. மரங்களும் செடி கொடிகளும் வாடித் துவண்டு கருகுகின்றன. வழக்கமாக நீர் அருந்திய குளம் குட்டைகள் வறண்டு போனதால் போகுமிடம் தெரியாமல் பிரமை பிடித்தாற்போல் அலைகின்றன கால்நடைகள்.

நீர்வளம் கொழித்த கேரளத்தின் பிளாச்சிமட கிராமத்தை இரண்டே ஆண்டுகளில் சுடுகாட்டுப் போட்டலாக மாற்றியதே கொக்காகோலா நிறுவனம் அது இப்படித்தான்!

### நிலத்தடி நீர் அழிந்தால்?

குழாய்க் கிணற்றின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க தண்ணீரின் தன்மை மாறுகிறது. அத்தனை ஆழத்தில் கிடைக்கும் நீர், உப்பும் வேதிப் பொருட்களும் நிறைந்த கடின நீராகி விடுகிறது. தண்ணீர்த் திருடர்கள், 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைகள்' போல அடுத்த இடம் தேடிப்பறந்துவிடுகிறார்கள்.

அந்த வட்டாரத்து மக்கள் எங்கே ஓடுவது? சுற்று வட்டாரம் முழுவதும் நிலத்தடி நீர் உப்புநீராக, கடின நீராக மாறி விடுகிறது. சென்னை போன்ற கடலோரப் பகுதிகளில் கடற்கரையிலேயே நல்ல தண்ணீர்க் கிணறுகள் அருந்திய காலமும் உண்டு. இன்றோ கடலோரப் பகுதி முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் கடல் மட்டத்தைக் காட்டிலும் கீழே போய்விட்டதால் மக்களின் குடிநீர்க் கிணறுகள் உவர் நீர்க் கிணறுகளாகிவிட்டன.

வேறு வழியில்லாத இடங்களில் இத்தகைய தண்ணீரைத்தான் மக்கள் குடிக்கிறார்கள் சமைக்கிறார்கள். அளவுக்கு அதிக மான வேதிப் பொருட்கள். அத்தண்ணீரில் கலந்திருப்பதால் பல்நோய், குடற்புண், ஈரல்நோய், தோல் நோயென வகை வகையான நோய்களுக்கு மக்கள் இரையாகிறார்கள். ஒரு வட்டாரம் முழுவதும் குறிப்பிட்ட ஒருவகை நோயால் மக்கள் பாதிக்கப்படுவது அதிகமாகிக் கொண்டே வருகிறது.

தமிழ்நாட்டின் 72சதவீத நிலத்தடி நீர் குடிக்க லாயக்கற்றது என்றும் 21 மாவட்டங்களில் நிலத்தடி நீர் அபாய எல்லைக்குச் சென்று விட்டதாகவும் பொதுப்பணித்துறையே அறிவித்துள்ளது. ஆனால் தண்ணீர்க் கொள்ளையோ அதிகரித்துக் கொண்டே போகிறது.

இந்நிலை நீடித்தால் ஏரி, குளம் அனைத்தும் வறண்டு நாடே பாலைவனமாகும். உணவு உற்பத்தி நின்றுவிடும். கால்நடைகள் மடிந்துவிடும் அல்லது அடிமாட்டுக்கு விற்கப்பட்டே அழிந்து விடும். பனைமரமும் பட்டுப்போக வெப்பக் காற்று வீசும் மண் டலமாக நாடே மாறிவிடும்.

லாபவெறி பிடித்த தண்ணீர் முதலாளிகள் எண்ணிக்கையில் சில ஆயிரம் மட்டும்தான். விவசாயிகளோ பல கோடிபேர். நீர்வளம் கொழிக்கும் பகுதிகளில் அவர்களும் தான் தண்ணீர் எடுத்தார்கள். முப்போகம் சாகுபடியும் செய்தார்கள். அதனால் நீர்வளம் அழியவில்லை. ஏனென்றால், அவர்கள் பாசனத்திற் குத்தான் தண்ணீர் எடுத்தார்கள்- பணத்திற்கு விற்பதற்காக அல்ல. விவசாயி எடுத்த தண்ணீர் ஒரு துளி கூட வெளியே சென்றதில்லை. அவ்வளவையும் மண்ணில் பாய்ச்சினார்கள். ஆவியானது போக அனைத்தும் நிலத்தடி நீராகச் சேமிக் கப்பட்டது. இதனால் பருவமழை தவறிய காலங்களிலும் கூட நிலத்தடி நீர்வறண்டு விடவில்லை.

தண்ணீர்க் கொள்ளையர்களோ மழைநீரை மண் உறிஞ்சும் அளவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான நிலத்தடி நீரை உறிஞ்சுகிறார்கள். இயற்கையின் அற்புதங்களான நீர்த்தாங்கி கள் (aquifers), மேற்பரப்பு நீரை உறிஞ்சி நிலத்தடியில் சேமித்து வைத்திருக்கின்றன. நீர்த்தாங்கிகள் சேமித்து வைத்திருக்கும் அந்த நீரையும் சப்பி எடுத்து விடுகிறார்கள், தண்ணீர் கொள் ளயர்கள். நூற்றாண்டுகளாய் இயற்கை சேமித்து வைத்திரு க்கும் நீர்வளத்தை நீயா, நானா என்று போட்டி போட்டுச் சூறையாடுகிறார்கள்.

இவர்களுடைய பணத்தாகத்திற்கு இயற்கையாலும் ஈடுகொடு க்க முடிவதில்லை. வெள்ளமாய் மழை பெய்தாலும் நிலத்தடி நீர்மட்டம் உயருவதேயில்லை. இனி பிளாச்சிமட கிராமமே மூழ்குமளவுக்கு மழை பெய்தாலும், கொக்காகோலவால் பலநூறடி ஆழத்திற்கு வீழ்த்தப்பட்ட நீர்மட்டம் அவ்வளவு லேசில் மேலெடுழும்ப முடியாது. சென்ற ஆண்டு கோடைக் காலத்தில் வழக்கத்தை விட 5மடங்கு அதிகமான அளவுக்கு சென்னை நகரில் மழை பெய்த போதிலும் நிலத்தடி நீரின் மட்டம் கால் அங்குலம் கூட உயரவில்லை என்கிறது நிலத்தடி நீர் ஆய்வுக் கழகம். மண்ணின் உறிஞ்சும் திறன் இயற்கை விதியை விஞ் சுவதில்லை. லாபவெறி பிடித்த முதலாளிகளோ, தாங்கள் தோற்றுவிக்கும் இயற்கைப் பேரழிவு குறித்துச் சிறிதும் அஞ்சுவதில்லை.

எனவேதான் சொல்கிறோம். தண்ணீர் வியாபாரம் என்பதை இன்னொரு நுகர்பொருள் வியாபாரம் என்று கருததீர்கள். அது உலகின் எல்லா வளங்களையும் உயிர்களையும் அழி க்கும். உயிரின வாழ்க்கைச் சூழலில் சமநிலையைச் சீர்கு லைக்கும். இதனால் சுனாமி போன்ற திடீர்ப் பேரழிவுகளும் தோன்றக்கூடும். எனவேதான், தண்ணீர் வியாபாரமென்பது பேரழிவு ஆயுதங்களை விற்பதற்குச் சமமானது. இது மனித குலத்துக்கு எதிரான பயங்கரவாதம் என்று கூறுகிறோம்.

எண்ணெயை விஞ்சும் பணம் தண்ணீரில்!

நமது நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் அதிகரித்து வருகின்றது. எனவே தண்ணீரை விற்றால் கொள்ளைலாபம் நிச்சயம் என்று ஏகாதிபத்திய பன்னாட்டுக் கம்பெனிகள் அண்மைக் காலமாக தண்ணீர் வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இன்று உலக மக்கள் தொகையில் 5% பேர் மட்டும்தான் பன்னாட்டுக் கம் பெனிகளிடம் தண்ணீர் வாங்குகின்றனர். இந்த வர்த்தகத்தின் மதிப்பென்ன தெரியுமா? இன்று நடக்கும் உலக எண்ணெய் வர்த்தகத்தின் மதிப்பில்50 சதவீதம். எனவேதான் சென்ற நூற்றாண்டில் இக்கம்பெனிகளின் இலாப வேட்டைக்கான பெரும் ஆதாரமாக எரி எண்ணெய் இருந்ததைப் போல, 21-ம் நூற்றாண்டில் தண்ணீர் இருக்கும் என உலக முதலாளிகள் கணக்கு போடுகின்றனர். எனவே தண்ணீர் ஆதாரங்களைக் கைப்பற்றுவது- அதற்கான சந்தைகளைக் கைப்பற்றுவது ஆகியவற்றிற்கான போட்டியும் முரண்பாடும் தீவிரமடைந்து தண்ணீருக்காகவே யுத்தங்கள் வெடிக்கலாம் என்றும் வல்லு னர்கள் எச்சரிக்கின்றனர்.

உலகத்திற்கே பேராபத்து உண்டாக்கக்கூடிய இந்தத் தண்ணீர் வியாபாரம் நமது பண்பாட்டிற்கும் மரபிற்கும் எதிரானதாகும். நமது நாட்டில் அரசாங்கங்களும் ஊர்ப் பஞ்சாயத்துக்களும் மக்களுக்கும் ஏன், ஆடு மாடுகளுக்கும் கூட குடிநீர்த் தொட்டி கட்டி தண்ணீரைத் தானமாக வழங்கி வந்துள்ளன. பாசன த்திற்காக அணைகள் கட்டுவது, ஏரி, குளங்கள், கால்வாய்கள் வெட்டுவது அவற்றை மராமத்து செய்வது என்பது அரசர்க ளின் முக்கிய கடமையாக இருந்திருக்கிறது. தண்ணீரைத் தாயாக மதித்துப் பாதுகாத்து வருவதுதான் நமது பண்பாடு!

### இலங்கையில் தண்ணீரைத் தனியார் மயமாக்குவதற்கு உலக வங்கியின் ஆலோசனையுடன் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது

தண்ணீரைச் சமூகச் சொத்தாக மதிப்பது மரபு. அதை எல்லா உயிரினங்களின் தாகம் தீர்க்க இலவசமாக வழங்குவதும் நம் பண்பாடு. தண்ணீரை வாங்கவும் விற்கவுமான பண்டமாக மாற்றியிருப்பதன் மூலம் நமது மரபையும் பண்பாட்டையுமே கேவலப்படுத்துகிறது தண்ணீர்வியாபாரம்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கதிர்காமர் யாருக்குச் சேவை செய்தார்?

சிங்களப் பேரினவாதிகள் கதிர்காமரைப் பலவாறாகப் புழுகிறார்கள். அவர் கொல்லப்படாதிருந்தாலும் அவரைப் பேரினவாதிகள் பெரிதும் மெச்சியிருப்பார்கள். எல்லா விதமான புகழுரைகளிலும் அவரை சேர் பொன்னம்பலம் ராமநாதனுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டவையே பெரிதும் பொருத்தமானவை என்பேன்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்களப் பேரினவாதம் எழுச்சி பெறத்தொடங்கியது. இலங்கையின் சகல தேசிய சிறுபான்மையினரையும் அடக்கி ஒடுக்கி அதிகாரம் செய்யும் நோக்கம் இலை மறை காயாகவே தென்பட்டாலும் வெகுவிரைவிலையே சிங்களப் பேரினவாதம் சிங்கள பௌத்த பேரினவாதமாக வெளிவெளியாகவே இயங்கத் தொடங்கி விட்டது. இதையெல்லாம் அறியஇயலாத அப்பாவியல்ல ராமாநாதன். முஸ்லீம் வணிகர்களை இலக்கு வைத்துச் சிங்கள முதலாளிகளின் தூண்டுதலால் முன்னெடுக்கப்பட்ட சிங்கள- முஸ்லிம் கலவரம் எனப்படும் பேரினவாத வெறியாட்டத்தில் தீவிர பங்களித்த சிங்களக் குண்டர் படைகளின் எசமானர்கள் சிலர் குற்றச் செயல்கட்காகத் தண்டிக்கப்பட்டனர். அவர்கள் மீதான தண்டனை வழமையான சட்டத்தின் கீழ், தீவைப்பு உட்பட்ட சமூக விரோதச் செயல்கட்கான தண்டனை தான். எனினும் அவர்கட்காக மனம் இரங்கிப் போர்க்கால அபாயங்களையும் பொருட்படுத்தாமல் இங்கிலாந்துக்குப்போய் வாதாடி அரச மன்னிப்பைப் பெற்று வந்த கருணாமூர்த்தியல்லவா அவர்.

தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை வேண்டாமென்று டொனமூர் கமிஷனின் முன்பு வாதாடியதும் அவரது கருணையின் இன்னொரு பக்கம். இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக அவருடைய அரசியலை ஊடுருவிச் சென்றவை இரண்டு விசுவாசங்கள். ஒன்று அவர் சார்ந்த மேட்டுக்குடி வர்க்கத்தின் விசுவாசம். மற்றது அவர்களுடைய எசமானனான பிரித்தானிய கொலனிய ஆட்சியாளர்களிடமான விசுவாசம். அவற்றுக்கிடையே முரண்பாடு இல்லாமல், இலங்கையில் பிரித்தானிய முடியாட்சி மேலும் தொலையிலையில்லாமல் நீடிப்பதற்கான வழியை அவர் தனது எசமானர்கட்கு எடுத்துரைத்தார். சிங்களப் பேரினவாதிகளும் அதன் படியே பிரித்தானிய ஆட்சியாளர்கட்குத் தொடர்ந்தும் விசுவாசமாக இருந்து வந்தார்கள்.

காலப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் வேகமாகப் பரவி எழுந்தது. என்றாலும் வெகு விரைவிலேயே பழைய கொலனித்துவத்தின் இடத்தில் புதிய



கொலனித்துவம் ஒன்று வந்து சேர்ந்தது. தேசியவாதமும் தேசப்பற்றும் வர்க்க நலன்களின் முன் தோற்றுப் போயின. சிங்களப் பேரினவாதம் தன்னுடைய நலன்களைப் பேணுவதற்கு ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கவும் பணிந்து போகவும் முற்பட்டது. எனவே நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமைக்கு ஆப்பு வைப்பது அதற்குத் தேவையானது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலை இயலுமாக்கத் தேசிய இனப்பிரச்னை, தேசிய இன ஒடுக்குமுறை என்ற வடிவெடுத்துப் போராக வளர்த்தெடுக்கப்பட்டது.

யூஎன்.பியே முதலில் இந்தப் பணியைப் பொறுப்பெடுத்த போதும், ஸ்ரீ.ல.சு.கட்சியும் அதன் கூட்டாளிகளும் அதே பாதையிலேயே தமது பொருளாதாரக் கொள்கையும் சர்வதேச வணிக அரசியல் உறவுகளையும் வழிநடத்துகின்றனர். இப்படிப்பட்ட ஒரு சூழலில் நாட்டின் பொருளாதாரம் தடுமாற்றமடைகிறது. தீர்க்க இயலாத தேசிய இனப்பிரச்சனை, இந்த நாட்டில் முதலிடுகிற பேரில் நாட்டின் எல்லா வளங்களையும் வற்றச் சுரண்டுவதற்குக் காத்திருக்கும் அயல் மூலதனத்துக்குத் தடையாக நிற்கின்றது. போர் மூலம் உருவாக் கப்பட்ட உலகமயமாதற் சூழல் தன் முழுப்பயனையும் அடைவதற்குத் தடையாக இருந்ததும் அதே போர தான். என்பது வினோதந்தான்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் உண்மையான தேசிய இன விடுதலை இலக்கிற் போய் சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு தீர்வைக் காண்பதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பும் பிராந்திய மேலாதிக்க எதிர்ப்பும் இன்றியமையாதவை. தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் சுயாதீனமான அந்நிய ஆதிக்க எதிர்ப்பின் கூர்மையை மழுங்கடிக்க வேண்டிய தேவை ஏகாதிபத்தியத்திற்கு இருந்தது. எனவே தான் பயங்கரவாத எதிர்ப்பு என்கிற விதமான காரணங்களை முன்னிறுத்தி விடுதலைப் புலிகளைப் பலவாறான நிர்ப்பந்தங்கட்குள்ளாக்க முற்படுகின்றனர். அதில் ஓரளவு வெற்றியும் காணுகின்றனர். தந்திரோபாயமாகவோ வேறு நோக்கிலோ உலகமயமாக்கலுக்கு உடன்பாடாகவே விடுதலைப் புலிகளின் தலைமை உறுப்பினர்கள் பேசியிருப்பது அதன் விளைவாகவே.

விடுதலைப் புலிகள் மீது பிரித்தானிய ஆட்சியாளர்கள் தடை விதிப்பதில் கதிர்காமர் பங்களித்துள்ளார். பிற நாடுகளிலும் விடுதலைப் புலிகட்கு எதிரான கடும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதிலும் அவர் முன்னின்று உழைத்திருக்கிறார். எறாலும் கதிர்காமர் சொல்லித்தான் ஏகாதிபத்திய நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தனர் என்பதை


தொடர்ச்சி 12ம் பக்கம்

# அமெரிக்க இந்திய ஆட்சிகளின் ராணுவ-அணுசக்தி ஒப்பந்தங்கள்

பிரதமர் மன்மோகன் சிங், அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா செல்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக, இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே இராணுவ ஒப்பந்தமொன்று கையெழுத்தானது. அவர் அமெரிக்கா சென்றிருந்த பொழுது, அணு சக்தி ஒத்துழைப்பு குறித்த மற்றொரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியாவிற்கும் அமெரி க்காவிற்கும் இடையே எத்தனையோ ஒப்பந்தங்கள் போடப்பட்டிருந்தாலும், அவற்றையெல்லாம் விட, தற்பொழுது கையெழுத்தாகியுள்ள இவ்விரு ஒப்பந்தங்களை வரலாறுத் திருப்பம் என்றும் குறிப்பாக அணு சக்தி குறித்த ஒப்பந்தம் இந்தியாவை வல்லரசாக்க உதவும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அமெரிக்க ஆதரவாளர்கள் உற்சாகம் பீறிடக் குறிப்பிடுகிறார்கள்.

இராணுவ ஒப்பந்தத்தின்படி அமெரிக்கா மற்றும் இந்தியாவின் நலன்களுக்கு ஏற்ற விதத்தில் இரு நாட்டுப் படைகளும் கூட்டாக இணைந்து உலகின் எந்த பகுதியில் வேண்டுமானாலும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும். இரண்டாவதாக, ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து தற் காத்துக் கொள்ளும் திட்டத்தில் இரு நாடுகளும் ஒத்துழைக்கும். மூன்றாவதாக தரை, கடல், வான வழியாகபேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க, இரு நாட்டுப் படைகளும் கூட்டு நடவடிக் கைகளில் ஈடுபடும். நான்காவதாக, இரு நாடுகளும் இணைந்து ஆயுதம் மற்றும் இராணுவத் தளவாட உற்பத்தியில் ஈடுபடும்.

அணு சக்தி தொடர்பாக போடபட்டுள்ள ஒப்பந்தத்தின்படி சமூகப் பயன்



பாட்டுக்காக (மின்சாரம் உற்பத்தி செய்வது) இயக்கப்படும் அணு உலைகள் இராணுவப் பயன்பாட்டுக்காக (அணுகுண்டு தயாரிப்பது) இயக்கப்படும் அணு உலைகள் இராண்டாகப் பிரிக்க வேண்டும். சமூகப் பயன்பாட்டுக்காக இயக்கப்படும் அணு உலைகளை சர்வதேச அணு சக்தி கழகத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும். புதிதாக அணுகுண்டுச் சோதனைகள் நடத்தக் கூடாது அணு ஆயுத நாடுகள் உருவாக்கியுள்ள அணுகுண்டு தயாரிப்பதற்குப்பயன்படும் வேதிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் சட்டத்திற்கு கட்டுப்பட்டு இந்தியா நடக்க வேண்டும். அணு ஆயுத நாடுகள் போட்டுள்ள ஏவுகணை சோதனை கட்டுப்பாடு குறித்த சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு இந்தியா நடக்க வேண்டும்.

இந்த இரண்டு ஒப்பந்தங்களையும் சாதாரண வர்த்தக ஒப்பந்தம் போல பார்க்க முடியாது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடைக்கண் பார்வைக்காக இந்தியா "இது தான் எங்களது அணு கொள்ளை" "இது தான் எங்களது இராணுவக் கொள்கை" என்று கூறி வந்ததை தடாலடியாக மாற்றிக் கொண்டு விட்டது. சொல்லப் போனால் அமெரிக்காவின் மேலாதிக்க வெறிக்கு இந்தியாவைப்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## பயணிகள் பாதுகாப்புக்கு பாதையில் இறங்க வேண்டும்!

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிரான குற்றப் பணத்தின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளமை ஒரு நல்ல விடயம். தண்டனை அதிகரித்தல் என்பது குற்றத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு வகை சாதனம்.

குற்றப்பணம் அதிகரிப்பு என்பது இந்த நாட்டில் உள்ள அனைத்து வாகன சாரதிகளுக்கும் பொது மக்களுக்கும் பொதுவானது. ஆனால் அதற்கு எதிராக போர்க்கொடி உயர்த்துபவர்கள் ஒரு சாரார் மட்டுமே. அவர்கள் தான் தனியார் போக்குவரத்து வாகன உரிமையாளர்களின் சங்கம் அல்லது அதன் தலைமை.

இவர்கள் மட்டும் ஏன் இதனை எதிர்க்க வேண்டும்? அதாவது குற்றம் செய்வது அல்லது சட்டத்தை மீறுதல் என்பது இவர்களின் பிறப்புரிமை அல்லது ஜனநாயக உரிமை என்கிறார்கள்.

அப்படியானால் இவர்கள் வீதிப்போக்குவரத்துச் சட்டத்தை மீறும் போது அதனால் பாதிக்கப்படும் அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கை எந்த ஜனநாயகத்துள் அடங்கும் என்பது ஒரு சாதாரண மனிதனின் கேள்வி.

இந்த பஸ் உரிமையாளர்கள் தமது சட்ட மீறல் உரிமைக்கான போராட்டத்தின் ஒரு அங்கமாக தமது சேவையைப் பகிஷ்கரிக்கின்றனர். இவர்களால் எத்தனை நாளைக்கு சேவையை நடாத்தாமல் இருக்க முடியும் என்பது பின்னால் எழுகின்ற கேள்வி. இலங்கையில் 'ஊழல்' என்பதற்கு உதாரணமாக காட்டக் கூடிய ஒரே ஒரு பொருள் இந்த தனியார் போக்குவரத்துச் சேவைதான்.

மனித உரிமைகளுக்கு மாறாக பஸ்களில் பிரயாணிகளை ஏற்றி அடைப்பது, சில்லறை இல்லை என்ற பெயரில் அநியாயமாக பணம் மேலதிகமாக அறவிடுவது, உரிய சட்ட ரீதியான பயணச் சீட்டை வழங்காது விடுவது. அன்றாட போக்கு வரத்து சேகரிப்பில் ஒரு பகுதியை நடத்துனர் முழுங்க, ஓட்டுனர் முழுங்க மீதியே பஸ் உரிமையாளரிடம் போய்ச் சேருகிறது.

றூட்பெமிற் எனப்படும் வாகனம் ஓட்டுவதற்கான போக்குவரவுப் பாதை அனுமதி எடுக்க லஞ்சம், ரேண் பிடிக்க லஞ்சம், வழிமறுக்கும் பொலீசுக்கு தண்டப்பணம், வாகனத்தின் கொள்வனவுக் கொடுப்பனவு, வாகனத்தின் திருத்தச் செலவு காசு முழுங்கிய நடத்துனருக்கும், ஓட்டுனருக்கும் சம்பளம், எரிபொருள் செலவு, தன் குடும்ப சீவியம், அரசியல் வாதிகளுக்கு உபகாரம், ....என்று வாகன உரிமையாளர் படி அளக்க வேண்டும்.

தனியார் போக்குவரத்து வாகன உரிமையாளர்களின் சங்கம் தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டதையிட்டு கவலை கொள்கிறது. அதை விடுத்து தமது ஓட்டுனர் தம் லீலைகளைக் கட்டுப்படுத்தி அந்த தண்டப்பணமும் இல்லாமற் செய்ய முயலலாம் தானே! முழங்கால் புண்ணுக்கு முதுகிலே மருந்து போட முயற்சிக்கின்றனர்.

இது நியாயம் எனில் ஆட்டோ சாரதிகள் சங்கம், இதர தனியார் மோட்டார் வாகனங்களின் உரிமையாளர்கள் எல்லோரும் அல்லவா பகிஷ்கரிப்பில் இயங்க வேண்டும்.

அன்றாடம் தமது கடமைகள் நிமித்தம் பயணிக்கும் அப்பாவிப் பயணிகளை பலியெடுக்கும் இந்த பஸ்காரர்களின் எல்லை மீறல்களைக் கட்டுப்படுத்த பஸ் பயணிகள் சங்கங்கள் உடனடியாக வீதியில் இறங்க வேண்டும்.

## பேதமை தரும் ஊடகங்கள்

அறியாமை இருள் நீங்கப் பாடுபட்ட பெரியார்கள் அநேகம் உளர். விஞ்ஞான அறிவியல், ஆய்வுகளின் வளர்சி ஒருபுறம், பகுத்தறிவுவாத சிந்தனைகளின் வளர்ச்சி மறுபுறமுமாக நம் மக்களை மூடநம்பிக்கைகளில் இருந்து வெளியே தூக்கி விட முயற்சி செய்து வருகின்றன.

அந்த விஞ்ஞான, அறிவியல் வளர்ச்சியின் ஓர் உச்சக் கட்டமாகவே தொலைக்காட்சி, கம்பியூட்டர் என்பன இன்று கோலோச்சுகின்றன. இந்த தொலைத் தொடர்பு சாதனங்களின் ஊடாகவே மீண்டும் மூடநம்பிக்கைகள் திணிக்கப்படுவதே இன்று நமக்குப் பெரும் சவலாக உள்ள விடயமாகும்.

கடந்த 30/07/2005 சனி இரவு- சக்தி தொலைக்காட்சியில் "ராஜ ராஜேஸ்வரி" மெ(ா)(க்)கா தொடர் நாடகம் பார்த்தவர்களுக்குத் தெரியும் ஒரு அறுவை சிகிச்சை- மருத்துவ நிபுணரின் மனைவிக்கு சின்னமுத்து (அம்மாள் வருத்தம்) திடீரென ஏற்பட்டு விடுகிறது. அவர் வேறொரு சாதாரண வைத்தியரை நாடுகிறார்.

வந்த வைத்தியர்- நிபுணருக்கு ஆலோசனை கூறிவிட்டுச் செல்கிறார் இப்படி! 'அம்மாள் வருத்தமென்றால் உடலில் அம்மன் இறங்கியது போல. எனவே அருகிலிருந்து பாரமரியங்கள்' என்று

இந்த நிபுணரோ ஏதோ 'சிறப்' வகை மருந்தை நோயாளிக்கு கொடுக்க முனைகிறார். அப்போது அந்த வீட்டில் இருக்கும் அம்மன் அவதாரமாகிய சிறுமி அதைத் தடுத்து நிறுத்துகிறார். (இவர்தான் அம்மன் நோயை திடீரென ஏற்படுத்தியவர்) அந்த மருத்துவ நிபுணருக்கு சாஸ்திர- பராமரிப்பு ஆலோசனையும் வழங்குகிறார். குளிர்ப்பு, ஈரத்துணி, மஞ்சள் ஈரத்துணி, வேப்பம் இலை, திருமுறை ஓதல், விபூதி எல்லாம் வருகிறது. மருத்துவ நிபுணரும் அதன்படி செய்கிறார். பரவாயில்லை.

பிரச்சனை இதுதான். சின்னமுத்து என்பது ஒருவகை வைரஸினால் காற்று தொடுகை மூலம் பரவும் ஒரு தொற்றுநோய் என்று கண்டு பிடித்து பல தசாப்தங்கள் ஆகின்றன. இன்று அதற்கு தடுப்பு மருந்துக்கள், நீர்ப்பீடணங்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டும் ஆயிற்று.

இந்த நோய் அறிகுறிகள் தென்பட்டு உக்கிர நிலை அடைய குறைந்தது 3 நாட்களாவது செல்லும். அதை விட நோய் ஏற்பட்டவருக்கு இயற்கையான நீர்ப்பீடனம் ஏற்பட்டு மீண்டும் இலகுவில் சின்னமுத்து ஏற்படும் சந்தர்ப்பமும் குறைகிறது.

இவ்வளவும் இருக்கையில் இரண்டு மருத்துவர்கள் இந்த நாடகத்தில் மந்தையராகக் காட்டப்படுகின்றனர். கடவுள் பற்றிய நம்பிக்கை, ஆன்மிக சுகம் என்பன மருத்துவத் துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் தான். ஆனால் அவை மூடநம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்தியாவில் மதசார்பான பூசல்கள், மதமாற்றங்கள், மதச்சண்டைகள் என்பன சாதாரணமானவை. இந்து மதத்தைக்காக்க முனைகிறோம் என்ற போர்வையில் வீட்டுக்கு வீடு, படுக்கை அறைகளுள் நுழையும் தொலைக்காட்சி மெகா தொடர்களின் ஊடாக இத்தகைய யதார்த்த முரணான காட்சிகளை செருகிவிடுவது என்பது கேலிக்கு உரியதாகும். இந்து மதத்தின் வீழ்ச்சிக்கும் அதுவே காரணம் ஆவதை இந்து மத பிரச்சாரகர்கள் உணர்ந்து கொள்ளவதில்லை.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# ஏகாதிபத்திய பரப்புரைகளை எதிர்த்து தென்அமெரிக்காவில் ஒளிபரப்பு நிலையம்

சர்வதேச ஊடகம் என்பது எப்போதும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய, மற்றும் பழமைவாத பிற்போக்கு கருத்துக்களை மக்கள் மீது திணிப்பதாக இருந்து வந்துள்ளது. அதை உடைத் தெறியவும் உலகில் மக்கள் நலன் சார்ந்த ஊடகத்துறையை வளர்த்து ஏகாதிபத்திய எதிர்ப்பை முன் எடுக்கும் நோக்கில் யூலை மாதக் கடைசியில் வெனிசூலா ஜனாதிபதி கியூகோ சாவெஸ் தலைநகர் கராகஸில் ஒரு புதிய தொலைக்காட்சி அலை வரிசையை ஆரம்பித்துவைத்துள்ளார். இந்த அலை வரிசைக்கு ரெலிசர் (ரெலிசவுத்) TELESUR TELESOUTH எனப்பெயரிடப்பட்டுள்ளது.

மேற்கத்திய மின்னியல் ஊடகங்களின் ஏகபோகத்திற்கு சவால்விடும் வகையில் வெனிசுலா, உறுகுவே, ஆர்ஜன்ரீனா, கியூபா ஆகிய தென் அமெரிக்க நாடுகளே இந்த புதிய தொலைக்காட்சி நிலையத்தை இயங்கவைத்துள்ளன. அமெரிக்க ஐரோப்பிய ஊடகங்கள் மூலம் பரப்புரை செய்யப்படும் பண்பாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பதற்காகவே இந்தப்புதிய தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெனிசூலா அரசாங்கத்திற்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள “மின்னியல் யுத்தப் பிரசாரத்திற்கு” இந்தப் புதிய தொலைக்காட்சி ஒளிபரப்பு பெருத்த அடியைக் கொடுக்குமென வெனிசூலா ஜனாதிபதி சாவெஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



வெனிசூலாவிற்கு எதிராக தொலைக்காட்சிப் பிரச்சாரங்களை மேற்கொள்ளும் வகையில் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை தீர்மானம் இயற்றியுள்ளது. இந்தத் தீர்மானத்தை அமெரிக்க செனட் சபையும் அங்கீகரித்தல் கியூபாவுக்கு எதிராக தரங்கெட்ட பிரச்சாரம் மேற்கொள்ளும் வானொலி மா.ட்டி தொலைக் காட்சியினை ஒத்த பிரச்சாரங்கள் மேற்கொள்வது போன்று வெனிசூலாவுக்கு எதிராகவும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். மாறிமாறி ஆட்சிக்கு வந்த அமெரிக்க நிர்வாகம் கோடிக் கணக்கில் டொலர்களைக் கொட்டிய போதும் “வானொலி மர்ட்டி” தோல்வி கண்டுள்ளது.

அரபு மொழியில் ஒளிபரப்பும் “அல்ஜசீரா” தொலைக்காட்சி நிறுவனம் விரைவில் ஆங்கில ஒளிபரப்பை ஆரம்பிக்கவுள்ளது. தென் அமெரிக்காவின் “ரெலிசர்” தொலைக்காட்சி நிறுவனமும் “அல்ஜசிரா” நிறுவனமும் மூலோபாய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவுள்ளன என்ற செய்தி புஷ் நிர்வாகத்திற்கு பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந்த இருநிறுவனமும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தால். இந்த ஒளிபரப்பானது முழு உலகிலும் பார்வையாளர்களைக் கொண்டிருக்க வாய்ப்பு ஏற்படும்.

வெனிசூலாவில் உள்ள அமெரிக்க சார்பு அரசியல் கட்சிகளுக்கு 2006-2007ம் ஆண்டுகளில் நிதிவழங்கவென ஒரு கோடிஎண்பது இலட்சம் டொலர்களை அமெரிக்ககாங்கிரஸ் ஒதுக்கியுள்ளது. அடுத்தவருடம் வெனிசூலாவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி சாவேஸ்லின் செல்வாக்கு தற்போது எழுபது வீதமாகவுள்ளதாக அபிப்பிராய வாக்கு கணிப்பு கூறுகிறது.

“ரெலிசர்” இருபத்தி நான்கு மணி நேர செய்திகளைக் கொண்டிருக்கும். இது அமெரிக்க ஒளிபரப்பு வலையமைப்பான சீஎன் என் (CNN) நிறுவனத்துடன் போட்டிபோடவுள்ளது.

இந்த தொலைக்காட்சி நிறுவனம் இருபத்தைந்து இலட்சம் டொலர்கள் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெனிசூலா 51 வீதப் பங்குகளையும், ஆர்ஜன்டீனா 20 வீதப்பங்குகளையும் 19 விதப்பங்குகளை உறுகுவேயும் கொண்டுள்ளன. பிரேசிலும் இந்த ‘ரெலிசர்’ திட்டத்திற்கு அதன் தொலைக்காட்சியினூ டாக ஒத்துழைப்பு வழங் கவுள்ளது. பிரேசில் பெருமளவு ஸ்பானிய ஒளிபரப்புகளைச் செய்கிறது.

பொல்வியா, கொலம்பியா, ஈகுடோர், பெரு ஆகிய நான்கு நாட்டுக் கூட்டானது இந்தப் புதிய தொலைக்காட்சி ஒளிபரப்பை வரவேற்றுள்ளது.

உலகமயமாதலிலுக்கு எதிரான மக்களின் போராட்டங்களுக்கு இந்தப்புதிய தொலைக் காட்சியின் தோற்றம் புதிய உத்வேகத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# ஐ. நா. வுக்கு- 60 வயது

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஸ்தாபித்து 60 வருடங்கள் பூர்த்தியடைவதையிட்டு உலகத் தலைவர்கள் கூட்டமொன்று செப்டம்பர் 14ம் 16ம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. தற்போது இந்த உலக ஸ்தாபனம் அமெரிக்காவின் கைப்பொம்மையாக மாறியுள்ளமை அனைவரும் அறிந்ததே. சோவியத் யூனியனின் சரிவுக்குப் பின் அதைத் தொடர்ந்து சீனா நிறம் மாறியதைத் தொடர்ந்து ஐ. நா அமெரிக்காவின் நிறுவனமாகியுள்ளது. இந்தியாவின் முன்னாள் நீதியரசரும் முற்போக்கு வாதியுமான கிருஷ்ண ஐயரின் கூற்று மிகச் சரியாகவேயுள்ளது (UN is not for us, it is for U. S.) “ஐ.நா என்பது எங்களுடையதல்ல. அது ஐக்கிய அமெரிக்காவுடையது”

அமெரிக்கா அவ்வப்போது ஐ. நாவை மிரட்டி தனது நலன்களைப் பாதுகாத்து வந்துள்ளது. ஐ. நாவுக்கு அமெரிக்கா வருடந்தோறும் 44 கோடி டொலர்கள் கொடுக்க வேண்டும். அதில் அரைவாசித் தொகையான 22 கோடி டொலா களை தடுத்து வைப்பதற்கு அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை தீர்மானம் நிறை வேற்றியுள்ளது. 46 விடயங்களை அல்லது நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே இந்த தடுத்து வைக்கப்பட்ட நிதி விடுவிக்கப்படும்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் தலைமையகம் நியூயோக்கில் அமைந்துள்ளது. தலைமையக கட்டிடம் 39 மாடிகளைக் கொண்டது. இந்த 39 மாடிக ளில் 10 மாடிகளை அகற்றினாலும் ஐ. நாவுக்குப் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாதென ஜனாதிபதி புஷ், ஐ.நா வுக்கான புதிய பிரதிநிதியாக நிய மித்த ஜோன் போல்ரன் திருவாய் மலர்ந்துள்ளார். இந்த சர்ச்சைக்குரிய ஜோன் போல்ரன் நியமனம் என்பது “விடுமுறை

## உலகப் பார்வை

கால நியமனமென” வர்ணிக்கப்பட்டுள்ளது. ஜோன் போல்ரன் ஒரு வலது சாரி- மிகவும் பழமைவாதி. ஈரான், வடகொரியா விடயத்தில் மிகவும் தீவிரப் போக்குடையவர். அவரை ஐ. நாவுக்கு அமெரிக்க பிரதிநிதியாக நியமிப்பதற்குப் பெரும் எதிர்ப்பிருந்தது. ஜனாதிபதி புஷ் தனக்குள்ள பிரத்தியேக அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்க காங்கிரஸ் “விடுமுறையில்” இருந்த சமயம் இந்த நியமனத்தை மேற் கொண்டார். இதே போன்று மூன்று முக்கிய வேறு நியமனங்களையும் அவர் மேற்கொண்டுள்ளார். மேன் முறையீட்டு நீதிமன்றம், பாதுகாப்புத் திணைக்களம், இராஜாங்க திணைக்களம் ஆகியவற்றிற்கான நியமனங்களும் “விடுமுறை” நியமனங்களே. இது தான் அமெரிக்க ஜனநாயகம்.

இந்த ஜோன் போல்ரன் நியமனம் பற்றி நியூயோக் ரைம்ஸ் பத்திரிகையின் தலையங்க எழுத்தாளர் நையாண்டியாக குறிப்பிடுகையில் “இந்த ஜோன் போல்ரன் நியூயோக்கில் இருக்கும் வரை இராஜதந்திர ரீதியில் வேறு இடங்களில் நாசகார வேலையெதையும் அவர் செய்யமாட்டார் என்று திருப்தி அடையலாம்” என்றாரே பார்க்கலாம்.

ஐ.நா. ஸ்தாபனம் நியூயோக்கில் அமைந்திருப்பதால் ஐ.நா விற்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் போது அமெரிக்கா விற்கு எதிரான கருத்துடையவர்களுக்கு விசா வழங்காமல் விடப்பட்ட சம்பவங்களும் உண்டு. 1988ல் பாலஸ்தீனத் தலைவர் யசிர் அரபாத் ஐ. நா.பொதுச் சபையில் உரையாற்றுவதிலிருந்து அமெரிக்க அரசினால் தடுக்கப்பட்டார்.

## அமெரிக்க-இந்திய....

9ம் பக்க தொடர்ச்சி

பலி கடா வாக்கும் அடிமைச்சாசனத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறது. மன்மோகன் சிங் கும்பல்.

இந்தியாவிற்குப் போலி சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்தே “அணி சேராமை எங்களது வெளியுறவுக் கொள்ளை” என வாய்ச்சவடால் அடித்து வருவது இந்தியாவின் வாடிக்கையாக இருந்து வருகிறது. ஆனால் இப்பொழுதோ இந்த வாய்ச்சவடால்களைக் கூட வெளிப்படையாக மூட்டை கட்டி வைத்துவிட்டு அமெரிக்காவின் நாடு பிடிக்கும் ஆக்கிரமிப்பு போர்களில் இந்திய இராணுவத்தைக் கூலிப்படையாக அனுப்பும் உத்தரவாதத் தோடு இராணுவ ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. “மேற்காசியாவில் ஈராக்கிற்கு அடுத்து ஈரானில் ஜனாநாயகத்தைக் கொண்டு வருவது கிழக்காசியாவில அணு ஆயுத பலம் கொண்ட வட கொரியாவை மிரட்டிப் பணிய வைப்பது மத்திய ஆசியாவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய் வளத்தை தானே கபளீகரம் செய்வது அவை எல்லாவ ற்றுக்கும் மேலாக சீனாவைத் துள்ள விடாமல் கட்டிப் போடுவது” என அமெரிக்கா, ஆசியாவைத் தனது மேலாதிக்கப் பிடிக்குள் வைத்துக் கொள்ளப் பல திட்டங்களை வைத் திருக்கிறது. இதற்கெல்லாம் இந்திய இராணுவம் கூலிப்படையாகப் பயன்படுத்தப்படும். “பதற்றம் நிறைந்த மத்திய ஆசியா, தெண்கிழக்காசியா, பாரசீக வளைகுடா பகுதிகளுக்கு அமெரிக்க போர் சென்றடைவதற்கு, இந்தியாவின் நவீன இராணுவக் கட்டுமானங்கள் பயன்படும்” என்கிறார் அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த அதிகாரி.

“சீனாவின் அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்கு, அமெரிக்க இராணுவத்திற்கு 2020- ஆம் ஆண்டு வாக்கில் ஒரு நண்பன் தேவைப்படும். இதற்கு இந்தியாவின் இராணுவ வலிமை பயன்படும் என்பதை நர் மறுக்க முடியாது” என்கிறது ஐ. ஏ.டி.ஏ.சி அமைப்பு 2020-இல் இந்தியா, அமெரிக்காவின் கைக்கூலி நாடாக மாறிவிடும் என்பதைதான் வல்லரசாகிவிடும் எனப் பூசி மெழுகுகின்றார்கள் போலும் தாதவுக்குக் கீழ்வேலை பார்ப்பவனும் தாதா தானே!

அமெரிக்காவில் கையெழுத்தாகியுள்ள இந்த இரண்டு ஒப்பந்தங்களும் திடீரென்று உருவானவையல்ல பா. ஜ.க.ஆட்சியின் பொழுது வெளியுறவுத் துறை மந்திரியாகவும் இராணுவ அமைச்சராகவும் இருந்த ஐஸ்வந்த் சிங்குக்கும் டால்போர்ட் என்ற அமெரிக்க அதிகாரிக்கும் இடையே இரகசியமாக நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகள் தான் இப்பொழுது அணு சக்தி ஒப்பந்தமாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்ப பா.ஜ.க தொடங்கி வைத்ததை காங்கிரசு முடித்து வைத்திருக்கிறது.

இந்த இரண்டு ஒப்பந்தங்களும் கையெழுத்தாவது குறித்து நாடாளுமன்றத்தில் கூடத் தெரிவிக்காமல் மிகவும் இரகசியமாகவே பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. குறிப்பாக இராணுவ அமைச்சராக இருக்கும் பிரணாப்முகர்ஜி கலந்தாய்வு ஒன்றில் பங்கு பெறுவதற்காக அமெரிக்காவுக்குச் செல்வதாகக் கூறிவட்டு இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டுத் திரும்பினார். இனி, நாடாளுமன்றம் இந்த இரண்டு ஒப்பந்தங்களையும் அங்கீகரிக்கும் ரப்பர் ஸ்டாம்பு சேவையைச் செய்ய வேண்டியது தான் பாக்கி!

முதலாளித்துவ அறிஞர்களால் புனிதமாகக் கருதப்படும் நாடாளுமன்றத்தையே மதிக்காத காங்கிரசிடம் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை மதித்து நடக்குமாறு போலி கம்யூனிஸ்டுகள் கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க.வுக்கு மாற்று என காங்கிரசைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் போலி கம்யூனிற்டுகளிடம் இந்தச் செக்கு மாட்டுத் தனத்தைத் தவிரவேறெதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, அமெரிக்க அடிமைத்தனத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது. போலி கம்யூனிஸ்டுகளின் தயவோடு- என்பதே நடப்பு உண்மை!

## தண்ணீர் என்பது

8ம் பக்க தொடர்ச்சி

### பண்பாட்டின் ஈரமே உலர்ந்து விடும்

தாகம் கொண்டவர்கள் தண்ணீர் கேட்பதும் கேட்டவுடன் தண்ணீர் வழங்கி, தாகம் தீர்க்கக் கிடைத்த வாய்ப்புக்காக மகிழ்வதும் மக்கள் பண்பாடு. இன்றோ, நா வறண்டு தவித்தாலும் பாட்டில் தண்ணீர் வைத்திருப்பவரிடம் கேட்கத் தயங்குகிறோம். கட்டிடத் தொழிலாளர்களும் சாலைப் பணியாளர்களும் அருகிலுள்ள வீடுகளில் ‘ஒரு செம்பு த்ண்ணி’ கேட்பதும், வீட்டுப் பெண்கள் தயங்காமல் தருவதும் நாமறிந்த பண்பாடு. இன்றோ குடிநீரை விலை கொடுத்து வாங்கி வைத்திருப்போர் கொடுக்கத் தயங்குகிறார்கள். ‘இல்லை’ என்று சொல்லவும் கூசுகிறார்கள். ஆனால், நாளாக நமது பண்பாட்டின் ஈரம் உலர்ந்து விடும். ஆயிரம் குறைகளுக்கும் அப்பாற்பட்டு மனித உறவுகளில் எஞ்சியிருந்த மென்மை இறுகிவிடும். மனிதாபிமான இழை அறுந்துவிடும். ‘இல்லை’ என்ற சொல் நம் வாயிலிருந்து தெறித்துவிழும்.

‘இல்லை’ என்ற இந்தச்சொல் தண்ணீருடன் முடிந்து விடாது. சக மனிதனுடன் சகஜமாகப் பழகும் பண்பாடு விலகி, இறுக்கமான தொரு அந்நியம் மனிதர்களுக்குள் புகுந்துவிடும். ஒரு வகையான மவுனமானவன் முறை உருவாகி மனித உறவுகளையும் நமது பண்பாட்டையும் நிரந்தரமாகக் காயப்படுத்திவிடும்.

எனவேதான், தண்ணீர் வியாபாரம் என்பது நமது பண்பாட்டிற்கு எதிரான பாதகம் என்கிறோம். அடிப்படையான மனித உரிமைக்கு எதிரான அநீதி என்கிறோம். இயற்கையின் நியதிக்கு எதிரான வன்கொடுமை என்கிறோம். உயிரினங்களைப் பூண்டோடு ஒழிக்கும் பயங்கரவாதம் என்கிறோம். எனவேதான் தண்ணீரை எவனுக்கும் தனிவுடமை ஆக்கக் கூடாது. தண்ணீரை வணிகச் சரக்காக்கக் கூடாது என்று ஓங்கி ஒலிக்கிறோம்.

**நன்றி:தண்ணீர்: தாகத்திற்கா லாபத்திற்கா? தமிழக நூலில் இருந்து.**

## உலகைக் காப்போம்.....

11ம் பக்க தொடர்ச்சி..........

பொதுமக்களும் இதர அம்சங்களோடு அமைந்திருந்த விடயங்கள் மலையக அரசியல் வாதிகளினதும் மக்களினதும் இடைவினைபற்றிய தெளிவாக்கமாக அமைந்திருந்தது. அதனுடன் இணைந்ததாக மலையக த்தில் “குடும்பக் கட்டுப்பாடு” என்ற பெயரில் திட்டமிட்டு நடைமுறைப்படு த்தப்படும் “இன ஒழிப்பு” செயன் முறை மலையகத்தின் எதிர் கால அரசியல் கள நிலையினை ஞாபகப்படுத்துவதாய் அமைந்திருந்தது.

இன்னோர் இடத்தில்,

“கொழுந்துக் கூடையாக
பரிணமித்த
மலையக மாணவியின்
புத்தகப்பை”

என்ற வரிகளோடு படைக்கப்பட்டிருந்த ஓவியம் மலையகத்தின் எதிர் கால கல்விக்கலாசாரம் பற்றி பேசுவதாய் அமைந்திருந்தது. அத்துடன் “மேல்கொத்மலை திட்டம்” பற்றிய அவலங்கள் தாங்கிய ஓவியங்களும் நமது மலையகக் கண்களுக்கு ஆயிரம் செய்திகளை சொல்வதாய் அமைந்திருந்தன.

இவ்வாறு இந்த ஓவியக்கண்காட்சியின் பரிமாணம் பல்துறை கருத்தியல் தளங்களைச் சார்ந்ததாக அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. படைத்தளித்த ஞ. கிங்ஸ்லி கோமஸ் அவர்கள் விழிப்பின் அவசியங்களை எடுத்துப் பேசியிருக்கிறார். ஆயிரம் கட்டுரைகளைவிட ஓர் ஓவியம் கருத்துமிக்கது என்பதை நிரூபித்திருக்கிறார்.

வெதமுல்லையூர்
க.விநாயகமூர்த்தி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்




# பத்மநாப ஐயரின் பக்கச்சார்பின்மையும் ராஜதுரையின் புளுகு மூட்டையும்

கனடாவில் ற்றொரான்ற்றோ பல்கலைக் கழகத்தில் ஒரு சிறிய மூலையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் தங்களுக்குப் பிடித்தவர்கட்கு விருது வழங்கிக் கௌரவித்து ஊரை ஏய்ப்பதாக நினைத்துத் தன்னைத் தானே ஏய்த்துக் கொண்டு வருகிறது. அது வழங்குகிற 'இயல்' விருது சுந்திரராமசாமிக்கும் பிறகு வெங்கட்சாமிநாதனுக்கும் கிடைத்தது. அது வெங்கட்சாமிநாதனுக்கு விருது வழங்கித் தன்னுடைய யோக்கியத்தைத் தோலுரித்துக் காட்டிய பிறகு, சுயமரியாதையுள்ள எந்த நல்ல இலக்கிய வாதியாவது அந்த விருதை மனம் விரும்பி வாங்க விரும்புவாரோ தெரியாது. அது ஒரு புறமிருக்க, ஈழத்து நூல்களை வெளியிடுவதில் மிகுந்த அக்கறை காட்டிய பத்நாப ஐயருக்கு அந்தக்கூட்டம் அதே விருதை வழங்கி அவருக்கு வெங்கட்சாமிநாதனுடன் சரியாசனம் வழங்கியுள்ளது. பலே கில்லாடிகள் தான். பாவம் பத்மநாப ஐயர். என்ன இருந்தாலும், நல்ல மனிதர்.

பத்மநாப ஐயருக்கு நூல் வெளியீட்டில் பெரும் அக்கறை இருந்தாலும் அந்த அக்கறை அறவே அரசியற் சார்பற்ற அக்கறையில்லை. வாசிப்பை அவர் ஊக்குவித்தாலும் அவரது ஊக்குவிப்பு 'நடுநிலை'யான ஊக்குவிப்பென்று சொல்ல முடியாது. இடதுசாரிக் கட்சி எதனுடனும் வெளிவெளியாக அடையாளங் காணப்பட்ட எந்த எழுத்தாளருடனும் அவர் நெருக்கத்தை ஏற்படுத்தவில்லை. முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தேசியகலை இலக்கியப் பேரவை போன்ற அமைப்புக்கட்கு நெருக்கமாக இருந்ததாக அறிந்த எவரோடும் அவரது இலக்கிய உறவு எட்டத்திலேயே நின்றது. 'நவ மாக்ஸியவாதிகள்' என்ற வேடத்தில் மாக்ஸியத்தை எதிர்த்தவர்களுடன் அவருக்கு நட்பு இருந்தது. இடதுசாரி அரசியற் கட்சி சாராதவர்கள் என்று தெரிந்த காரணத்தால் மட்டுமே நுஃமான், சிவசேகரம், கனகரத்னா போன்ற இடதுசாரிப் போக்கான எழுத்தாளர்களுடன் அவர் உறவு வைத்திருந்தார்.

கைலாசபதியும் சிவத்தம்பியும் தமது பிரதான எதிரிகள் என்று முடிவுகட்டிய ஒரு குழுவினர் நடத்திய 'அலை'யில் பத்நாப ஐயர் ஒரு முக்கிய பங்காளி. கைலாசபதியும் சிவத்தம்பியும் ஈழத் தமிழ் நூல் வெளியீட்டில் அடாவடித்தனம் பண்ணி நல்ல படைப்பாளிகள் தலை தூக்க முடியாமல் தடுத்தார்கள் என்ற பிரச்சாரத்தை பத்மநாப ஐயரும் மூன்று ஆண்டுகட்கு முன்னம் ஒரு நேர்காணலில் வெளியிட்டார். அவரது குற்றச்சாட்டை நிறுவும் படி புதிய பூமியில் சவால் விடப்பட்டது. அதன் பின்பு பத்மநாப ஐயர் அந்த விஷயத்தைப்பற்றி வாயே திறக்கவில்லை. அது அந்தளவுக்கேனும் யோக்கியம். கைலாசபதியையும் சிவத்தம்பியையும் பற்றிப் பத்மநாப ஐயர் முன்வைத்த



குற்றச் சாட்டுக்களில் முக்கியமானது தங்கள் வட்டத்துக்குட்பட்டவர்களையே அவர்கள் ஊக்குவித்தார்கள் என்பதுதான். இடதுசாரி எழுத்தாளர்களைக் கைலாசபதி ஊக்குவித்தார் என்பது உண்மை. பிற்போக்காளர்களாகக் கண்டவர்களை விமர்சித்தார் என்பதும் உண்மை. ஆனால் அவர் ஊக்குவித்தவர்கள் எல்லாருமே இடதுசாரிகளில்லை. நீர்வைப் பொன்னையன், அகஸ்தியர் போன்ற இடதுசாரிகள் பலருடைய நூல் எதற்குமே கைலாசபதியோ சிவத்தம்பியோ முன்னுரை எழுதவில்லை.

பல்கலைக்கழக அறிஞர்கள் தம்மை மெச்சவேண்டும் என்று ஏங்குகிற ஒரு எழுத்தாளர் பட்டாளமே இங்கு இருக்கிறது. எதிர்பார்த்த இடத்திலிருந்து மலர்க்கிரீடம் வராமற் போனால் அவர்களால் தாங்க இயலாது. இந்த வியாதியை யாரும் மாற்ற முடியாது. கைலாசபதி எதிர்ப்புக் கழகங்களில் இப்படிப்பட்டவர்கள் பலரைக் காணலாம். அப்படிப்பட்டவர்களுக்கு முன்பு பூரணி, அலை (பாவம் இப்போது ஞானம்) போன்றவை புகலிடமாவதும் அதிசயமில்லை.

தமிழகத்தில் உள்ள இலக்கியவாதிகட்கு ஈழத்து எழுத்துப் பற்றிய அக்கறை குறைவு, அல்லாது போனால் வைத்தது தான். தமிழகத்தின் தூய இலக்கியவாதக் கோட்பாட்டாளர்கட்கு எதிராக அவர் நிமிர்ந்து நின்றார். தமிழகத்தின் இடதுசாரித் திறனாய்வுத் துறையின் எழுச்சிக்கு அவர் ஆற்றிய பங்கு முக்கியமானது. அன்றைய தமிழகச் சிற்றேடுகள் போல அற்பத்தனங்கட்கும் தனிப்பட்ட குரோதத்தின் வெளிப்பாட்டுக்குமான களம் ஒன்றைக் காணுவது கடினம். அவற்றுட் சிலவற்றுடன் யேசுராச, பத்மநாப ஐயர் ஆகியோர் உறவு இருந்தது. தமிழகத்தின் சிற்றேடுகளின் அரசியலிருந்து கைலாசபதி எட்ட நின்றார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இலங்கையில் இன ஒடுக்கல் எழுச்சி பெற்ற பின்பு உணர்ச்சி அடிப்படையில் தனித் தமிழ் ஈழக் கோரிக்கை பற்றிய அக்கறை தமிழகப் 'புத்தி ஜீவி' வட்டங்களில் உருவானது. அந்த வட்டங்களுள் இலங்கைத் தமிழ் இடதுசாரிகள் பற்றிய பகைமையான எண்ணங்களை விதைப்பது கஷ்டமான வேலையாக இருக்கவில்லை.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை பற்றி அரைகுறையாக விளங்கிக் கொண்டும் இலங்கையின் கம்யூனிஸ்ற் கட்சியின் பிளவை சி. பி எம் – சி. பி. ஐ பிளவுடன் ஒப்பிட்டும் குழம்பிக் கொண்டவர்கள் பலர் இன்னமும் அதே நிலைப்பாட்டில் தான் இருக்கிறார்கள். இடதுசாரிகள் பிரசாவுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்கள் என்று எழுதிய இடதுசாரி அறிஞர் இருக்கிறார். ஈழத்து தலித்தியம் பெரியாரியம் பற்றி எழுதுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாருக்குமே இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை முறையாக விசாரித்து அறிய மனம் வராது. இரண்டாங்கை மூன்றாங்கையாகத் தங்களுக்கு விருப்பமான தகவல்களை வடிகட்டி உள்வாங்கி இடைவெளிகளைத் தங்கள் மனம் போன படி நிரப்பிக் கொள்வார்கள்.

இதற்கு ஒரு உதாரணம், எஸ். வி. ராஜதுரை என்பார் முன்னாள் நக்ஸல் பாரி ஆதரவாளரும் இந்நாள் பெரியாரியவாதியுமான பத்மநாப ஐயர் பற்றி மாக்ஸிய எதிர்ப்பையே மூச்சாகக் கொண்ட 'காலம்' என்கிற வருடத்துக்கு முக்கால் முறை வரும் கனேடிய சஞ்சிகையின் சிறப்பிதழில் எழுதிய புளுகு தான். பத்மநாப ஐயரது அரசியற் சார்பற்ற தமிழ் வெளியீட்டுத் துறை, நூல்விநியோக ஈடுபாடு என்பன பற்றி மெச்சியுள்ள ராஜதுரை, கைலாசபதியுடனும் சிவத்தம்பியுடனும் பத்நாப ஐயர் நெருங்காத காரணம் அவர்கள் சிங்களப் பேரினவாதத்துடன் கணக்குத் தீர்த்துக் கொள்ளாதது தான் என்று உளறிக்கொட்டியுள்ளார்.

தனிப்பட்ட முறையில் தங்களுக்குப் பிடிக்காதவர்கள் மீது அற்பவிடயங்கட்கெல்லாம் பயங்கரமாகப் பாய்வதும் இடமறித்து பாராட்ட விரும்புகிறவர்களது பாரதூரமான பிழைகளுக் கெல்லாம் நியாயங் கண்டுபிடிப்பதும் ராஜதுரைக்குப் பழக்கப்பட்டுப் போன நாடகங்களாக இருக்கலாம். ஆனால் கூத்து முடிந்த பிறகு வேஷம் எப்போதோ கலையத்தானே போகிறது.

–சிவா–

# கொள்ளை போகும் தண்ணீர்

## நூல் மதிப்புரை




மேற்படி தலைப்பில் மக்கள் கலை இலக்கியக்கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர்– இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய தமிழக அமைப்புக்கள் ஒரு சிறு பிரசுரத்தை வெளியிட்டுள்ளன. தண்ணீர் என்பது உலகின் அடிப்படையான மூலவளம், அது உயிரினங்களின் அத்தியாவசியத் தேவை என்பதை முன்னிறுத்தித் தண்ணீரை வணிகப்பண்டமாக்கும் முதலாளியக் கொடுமையையும் அதன் விளைவாக நிலத்தடி நீர் எப்படிக் கொள்ளைபோகிறது என்பதையும் அதனையொட்டிக் குடிப்பதற்கும் விவசாயத்திற்குமான நீர்வளம் குறைவதுடன் நீர் நச்சுத் தன்மையடைவதையும் விளக்குகிறது. அதுமல்லாமல். இந்தியாவினதும் தமிழகத்தினதும் ஆறுகளிலிருந்து வணிக நிறுவனங்கள் குடிநீரை எடுப்பதால் நீரின் அளவு குறைகிறது போகக் கழிவு நீர் ஆற்றில் கலப்பதால் ஆறுகள அசுத்தமடைவது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. அதே வேளை ஆற்றில் மணல் எடுத்தல் உயர்மாடிக்கட்டிடங்களை எழுப்புதல் போன்றவை நீர் வளத்திற்கு உருவாக்கும் பிரச்சனைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சனையின் சர்வதேசப் பரிமாணம் முக்கியமானது. நீரைச்சிக்கனமாகப் பாவிப்பது முதல் கழிவுநீரைத் தூய்மைப்படுத்தி மீளப் பயன்படுத்துவது போன்ற ஆலோசனைகளை மக்களுக்கு முன் வைக்கும் அரசாங்கங்கள் நாட்டின் நீர் வளத்தை நேரடியாக கொள்ளை யடிப்பதற்கு கொக்காகோலா, பெப்ஸி போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சலுகைகளை வழங்கி வருகிறது. இன்று மத்திய மாநில அரசாங்கங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் முகவர்களாகவே இயங்கிவருகின்றன என்பதைக் குடிநீர் வியாபாரத்தில் அரசாங்கங்களின் நடத்தை தெளிவாக்கியுள்ளது.

அதே வேளை, உலகவங்கி முதலான நிறுவனங்களின் மறு கொலனியாக்க முயற்சிகள் உலக மக்களின் கடும் எதிர்ப்பை எதிர் நோக்குகின்றன. கடன் உதவி என்ற பேரில் மூன்றாமுலக நாடு களை வற்றச் சுரண்டுவதற்கும் மேலாகத் தண்ணீரைத் தனியார்மய மாக்குவதைக் கடன் வழங்கலுக்கு முன் நிபந்தனையாக உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் விதிக்கின்றன. இது நேரடியாகவே மக்கள் நலன்களைப் பாதித்ததன் விளைவாக பொலிவியாவிலும் பிலிப்பின்சிலும் நடந்த போராட்டங்களும் அவற்றின் வெற்றியும் தென்னாபிரிக்காவின் உலகமயமாக்கல் கொள்கை காரணமாகத் தண்ணீர் தனியார் மயமாக்கப்பட்டதை அடுத்து வெடித்த போராட்டமும் பற்றிய குறிப்புக்கள் நமது சூழலில் முக்கியமானவை.

இந்தியா முழுவதும், தமிழகத்திலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தண்ணீரைத் தனியார் மயமாக்குகிற சதி முன்னைய வணிகமும் கட்டணங்களும் தொடர்பான பொது உடன்படிக்கையின் (GATT) தொடர்ச்சியாக வணிகத் தொடர்பான சேவைகள் பற்றிய பொது உடன்படிக்கை (GATS) என்பது சில ஆண்டுகள் முன் புகுத்தப்பட்டது. வேலைகள் நடக்கின்றன. இவை பற்றிய பல பயனுள்ள விவரங்கள் தரப்பட்டுள்ளன.

அதற்கு மனப்பூர்வமாக இணக்கம் தெரிவித்து ஒப்பமிட்டதன் மூலம் இந்தியா தனது சந்தையை முற்றாகவே அந்நிய மூலதன ஊடுருவலுக்கும் ஆதிக்கத்துக்கும் திறந்து விட்டுள்ளது. இந்த உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு மாக்ஸிய– லெனினிய வாதிகள் மட்டுமே போராடி வருகின்றனர். பாராளுமன்ற இடதுசாரிகள் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற தோரணையில் நடந்து கொள்கிறார்கள்.

இச் சிறு பிரசுரம் கொக்கா கோலா அல்லது கோக் என்ற பானத்தின் கேடுகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. கோக் பற்றிச் சொன்னவை பெப்ஸிக்கும் பொருந்தும்.

இந்தியாவில் நடப்பது இலங்கையிலும் நடக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதில் ஜே.வி.பியும் தன் பங்கைச் செலுத்திய பிறகே ஆட்சியிலிருந்து விலகியது.

எனவே இந்த நூலை வாசித்து அதிலுள்ள முக்கியமான தகவல்களை எல்லாரும் அறியச் செய்வது இலங்கையில் தண்ணீரைத் தனியார்மயமாக்குவதற்கு எதிரான போராட்டத்துக்கு உதவுவதுடன் மட்டுமன்றி. இலங்கையிலும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு பிளாஸ்ற்றிக் போத்தல்களிலும் பெரிய ஹோட்டல்களின் நீச்சல் குளங்களிலும் அலங்காரத் தொட்டிகளிலும் அடைக்கப்படுவதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கவும் உதவும்.

பிற்குறிப்பு: இலங்கையிலும் தண்ணீரைத் தனியார் மயமாக்குவதற்கான அழுத்தங்களை உலகவங்கி கொடுத்து வருகிறது. அதற்கான சட்டவரைபுகள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கான திரைமறைவு நடவடிக்கைகள் இடம்பெற்றும் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# 'உலகைக் காப்போம'"Protect the world"

## ஓவியக் கண்காட்சி பற்றி

எப்படியெப்படியெல்லாம் எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் பன்முகமாய் வாழ்வு விரிகிறது! பிரபஞ்சத்தின் ஆழ்ந்த அதிசயங்களாய் என்றென்றும் நித்தியமாய் சாஸ்வதமாய் இந்த இயங்கியல் தொடர்கிறது. இது ஒருபுறமிருக்க இன்றைய மனித வாழ்வியல் நகர்வுகள் எங்கே எதை நோக்கி கிளம்பியுள்ளன என்ற வினா மனித வர்க்கத்தின் முன் எழுகிறது.

யதார்த்தத்திற்குள் ஆத்மார்த்தம் தொலைந்த நிலையில் இன்றைய யதார்த்த வாழ்வு அன்றாடம் அவலங்களையே அறுவடை செய்வதாக அமைந்துள்ளது. மானுட உணர்வுகள் மொழிபெயர்க்கப்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. மொழிகள் யாவும் மானுடப் பொதுமையின் பரிமாணங்களை முழுமையாய் வெளிப்படுத்த முடியாத இயலாமையைக் கொண்டிருப்பது பற்றிய மீளாய்வு தற்போது தேவையாகியுள்ளது.

இந்நிலையில், இம்முறை வசந்தகாலத்தின் போது நுவரெலியா பசுமை நகரம் களியாட்டத்தில் சூடேறிக் கொண்டிருந்த வேளையில் ஏப்பிரல் 13, 14, 15 ஆகிய திகதிகளில், களியாட்ட களேபரத்திற்குள்ளும் நுவரேலியா பொதுநூலகக் கூடத்தில் "Protect the world" "(உலகைக் காப்போம்)" என்ற தலைப்பில் அருமையான ஓர் ஓவியக்கண்காட்சி ஆழ்ந்த மௌனத்தில் பேசிக்கொண்டிருந்தது பற்றி குறிப்பிட வேண்டியுள்ளது.

இந்த ஓவியக்கண்காட்சியை படைத்து ஏற்பாடு செய்திருந்தவர் பற்றி



தேடியபோது– மாநகர சபையில் களஞ்சியப் பொறுப்பாளராகப் பதவி வகிக்கும் திரு. கிங்ஸ்லி கோமஸ் என்ற தகவல் வந்தது. அமைதியாக மண்டபத்தின் ஒரு மூலையில் நின்றிருந்த அவரை அறிமுகப்படுத்திக் கொண்டபடி ஓவியங்கள் மீது நோட்டமிட்டபோது, பல தகவல்கள் வெளிவந்தன. வெறுமனே வீசக்கூடிய கழிவுப் பொருட்களை மட்டும் உபயோகித்து ஓவியங்கள் படைக்கப்பட்டிருந்தன.

நவீன உலகம் எதிர்நோக்கியிருக்கின்ற யதார்த்தப் பிரச்சனைகளை வெளிப்படுத்துவனவாய் அனைத்து ஓவியங்களும் படைக்கப்பட்டிருந்தன. தீப்பந்தங்கள் ஏந்திய மரங்கள் பற்றிய ஓவியம் – இயற்கையை அழிக்காதே! இயற்கை உன்னை அழிந்துவிடும் என்று எச்சரிக்கும் செய்தியை தெரிவித்தபடி இருந்தது.

"இலங்கை நாட்டின் வளங்களை ஏகாதிபத்திய நாடுகள் பெரிய குழாய் வழியாக உறிஞ்சியெடுத்து பின்பு சொட்டுச் சொட்டாய் மீண்டும் இலங்கைக்கு வழங்கும்" ஓவியம் இன்றைய மூன்றாம் உலக நாடுகள் அபிவிருத்தி, கடன், நன்கொடை என்ற பெயர்களில் சுரண்டப்படுவதை அருமையாக விளக்கியது.

மற்றொரு ஓவியத்தில் வெருளிகளும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்




REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று12 செப்ரம்பர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 83

## புதிய ஜனநாய கட்சியின் வன்மையான கண்டனம்

முன்நாள் வெளிவிவகார அமைச்சர் படுகொலையுடன் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தில் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்ட அவசரகாலச்சட்டத்தை புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வன்மையாகக் கண்டித்து ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும் சுடர் ஒளி பத்திரிகைப் பணிமனைகள் அதன் ஊடகவியலாளர், ஊழியர்களின் மீதான தாக்குதல்களையும் பு.ஜ.கட்சி வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது

# பேரினவாத அரசியல் பாதாளத்திற்குள் அமிழ்ந்து வரும் ஜே.வி.பி



ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் (1994 இல்) கூறி அரசியல் அரங்கிற்கு மீண்ட ஜே.வி.பி இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்கவிற்கு ஆதரவளிக்கிறது. இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணக்கூடாது என்பதும் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி சமத்துவம் என்பன உறுதி செய்யப்படக்கூடாது என்பதும் மஹிந்த ராஜபக்சவை ஆதரிப்பதற்கான ஜே.வி.பி நிபந்தனைகளாகும்.

அதே நிபந்தணைகளையே ஹெல உறுமயவும் விதித்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் எவரும் நாட்டை அழிவிற்குட்படுத்திய பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எதனையும் எடுக்கக கூடாது என்பதே அவர்களின் நிலைப்பாடு.

ஐ.தே.கட்சி, சு.கட்சி என்பன தமிழ் மக்களின் உரிமையை உறுதி செய்வதற்கு ஏற்ற தீர்வுகளை முன்வைக்கப்போவதில்லை. ஆனால் அவ்வப்போது சில நடவடிக்கைகளை எடுக்க அவை நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளன. அத்தகைய நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு சில நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தடையாகவே ஜே.வி.பி ஹெல உறுமய என்பன செயல்பட்டு வருகின்றன.

1971,1988 ஆண்டுகளில் இளைஞர்களின் கிளர்ச்சிகளை செய்து உண்மையான சமூகமாற்றத்திற்கு உரிய புரட்சியை தூரத்திற்கு தள்ளி வைத்து பிற்போக்களர்களுக்கு உதவியது ஜே.வி.பியையே சாரும். பின்னர் பாராளுமன்ற அரசியல் பாதையை தெரிவு செய்து ஐ.ம.சு.மு அரசாங்கத்தில் அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டு ஜே.வி.பி இலங்கையின் அனைத்து மக்களின் ஐக்கியத்திற்கும் தடையாகப் பேரினவாத அரசியலையும், இனவெறித் வேஷத்தையும் சிவப்பு சட்டைகளை போட்டுக் கொண்டே மேலும் வளர்த்து வந்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கவும் பாதிக்கப்புகளுக்கு மீளமைப்பு செய்வதற்கும் என ஏற்படுத்தப்பட்ட பொதுக்கட்டமைப்பை தடுத்து நிறுத்துவதில் ஹெல உறுமயவைப் போல ஜே.வி.பியும் முன்னணியில் நின்று செயற்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதன வழியில் தீர்வு காணப்பதற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருந்து வருகிறது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, இனச் சமத்துவம் என்பவற்றுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது

ஜே.வி.பி ஒரு மாச்சிச கட்சியோ, இடதுசாரி கட்சியோ அல்ல. மாக்சிய விரோதிகளும், இடதுசாரி விரோதிகளும் ஜே.வி.பியை மாக்சிய, இடதுசாரி சக்தி எனக்கூறி பொதுவாக மாக்சிய சக்திகளுக்கும், இடதுசாரி சக்திகளுக்கும் எதிராக செயற்படுகின்றன. ஜே.வி.பி ஒரு பேரினவாத தேசியக்கட்சி என்பதனால் தான் நாட்டில் எரியும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

தனியார் மயத்துடனும், ஏகாதிபத்திய உலகமயமாதலுடனும், இந்திய மேலாதிக்க நிகழ்ச்சி நிரலுடனும் ஜே.வி.பி சமரசம் செய்து கொண்டுள்ளது. அது இன்று இந்திய பிராந்திய மேலாதிக்கத்தின் செல்லப்பிள்ளையாக மடியில் இருந்து விளையாடுகிறது. அதன் காரணமாக இலங்கைக்குப் பாதகமாக அமைந்த இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம் பற்றியோ அல்லது இலங்கைக்கு பொருளாதார நஷ்டத்தையும் வடபுலத்திற்கு அழிவையும் கொண்டு வரும் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தைப் பற்றியோ வாய் திறக்காது இருந்து வருகிறது. பேரினவாத நிலைப்பாடும் இந்திய அரவணைப்பு கொள்கையும் கொண்ட ஜே.வி.பி அரசியல் சீரழிவுமிக்க பாதாளத்திற்குள் வீழ்ந்து வருகின்றது என்பதே நிதர்சனமாகும்.

## ஜனாதிபதி வேட்பாளர்.......

1ம் பக்க தொடர்ச்சி...

இப்பொழுது நேரடியாகவும் மறைமுகமாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் ஒருவரும் இந்திய மேலாதிக்கத்திடம் மற்றவருமாக புனித நீர் தெளிக்கப்பட்டு ஆசீர்வாதத்துடனேயே ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கி நிற்கின்றீர்கள்.

இந் நிலையில் கனவான்களே! நீங்கள் கூறிவரும் நாடு, அபிவிருத்தி, சுபீட்சம், இனப்பிரச்சினைத்தீர்வு, சமாதானம், வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, கல்வி சுகாதார மேம்பாடு சமூக நலன்கள் பற்றிய கதைகளை இன்னும் நாம் நம்ப வேண்டுமா? சரி நீங்கள் கூறுவதை சற்று காது கொடுத்து நாங்கள் கேட்க வேண்டும் என விரும்பினால் கீழ்வரும் கேள்விகளுக்கு உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பூசி மெழுகாமல் வார்த்தை ஜாலங்கள் புரியாமல் அங்கொன்று இங்கொன்று எனத் தொட்டுக் கூறாமல் நேர்மை என்ற பதத்திற்கு அமைய உரிய பதில்களைத் தருவீர்களா?

* நாட்டின் பிரதான பிரச்சினையாகி நிற்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வுக்கு தெளிவான வரைபினை முன் வைப்பீர்களா?
- சட்டரீதியில் முடக்கம் பெற்று அரசியல் ரீதியாக எதிர்ப்பை சந்தித்து நிற்கும் சுனாமிப் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவீர்களா?
- உள்நோக்கங்களோ இழுத்தடிப்புகளோ இன்றி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தும் முடிவை கால அட்டவணையுடன் முன்னெடுப்பீர்களா?
- வேகமாக உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவும் அரசாங்க தனியார்துறை ஊழியர்கள் தொழிலாளர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் உரிய சம்பள உயர்வு வழங்கவும் விவசாயிகளின் உற்பத்தி விற்பனை நலன்களுக்கும் உத்தரவாதம் வழங்குவீர்களா?
- தாராளமயம் தனியார்மயம் உலகமயம் என்பனவற்றால் ஏற்பட்டு வரும் பாதிப்புகளையும் நாசங்களையும் தடுத்து நிறுத்த திட்டமிட்ட வழிமுறைகளை வெளிப்படுத்துவீர்களா?
- பல்தேசியக் கம்பனிகளினதும் அரசு சார்பற்ற நிறுவனங்களினதும் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தி சமூக கல்வி சுகாதார மற்றும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு முற்றுப புள்ளி வைக்கும் தெளிவான கருத்துக்களையும் திட்டங்களையும் முன் வைப்பீர்களா?
- அமெரிக்க- இந்திய ஆதிக்கப் போட்டிக்கு களம் அமைத்துக் கொடுக்கும் சகல செயற்பாட்டையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கு உத்தரவாதமளிப்பீர்களா?

எனவே ஜனாதிபதி வேட்பாளர்களாக நிலவுடமை முதலாளித்துவ வழிவந்த கனவான்களான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்காவோ மேற்குறித்த கேள்விகளுக்கு பொய்கள் புளுகுகள் ஏமாற்றுக்கள் அற்ற பதில்களைநேர்மையாகத் தருவீர்களானால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பங்கு கொண்டு வாக்களிப்பதில் குறைந்த பட்ச பயனாவது உண்டு என மக்களுக்கு எம்மால் கூற முடியும். அல்லாது விடின் ஜனாதிபதித் தேர்தல் என்பது முற்றுமுழுதான பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க அதிகாரத்திற்கான தேர்தலே அன்றி நாட்டிற்கோ மக்களிற்கோ தேசிய இனங்களுக்கோ கடுகளவும் பயனற்ற ஒரு தேர்தல் என்ற எமது நிலைப்பாட்டை அழுத்திக் கூறவே செய்வோம். இத் தேர்தல் ஏமாற்றை நிராகரிக்கும் படியே மக்களைக் கோருவோம்.

## கதிர்காமர் யாருக்கு........

9ம் பக்க தொடர்ச்சி......

ஏகாதிபத்திய வாதிகளை அறிந்த எவரும் ஏற்க மாட்டார்கள். விடுதலைப் புலிகளை அவர்கள் தங்களது நலன் கருதியே தடைசெய்தனர். அதே வேளை, அதற்கு இலங்கையின் பேரினவாதிகள் தமக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பதையும் உறுதி செய்து கொண்டார்கள். எனவே கதிர்காமர் ஏகாதிபத்தியம் செய்ய விரும்பியதையோ அல்லது செய்வதன் மூலம் தமக்கு நன்மை தேடக்கூடியதையோ செய்ய ஒரு வசதியாக அமைந்தார். அவருடைய தமிழ்ப் பேர் விடுதலைப் புலி எதிர்ப்புக்கு ஒரு நம்பகத் தன்மையை வழங்கியது என்றாலும் அந்த விதமான நம்பகத்தன்மையை வழங்கக் கூடியவர்கள் அவருக்கு முன்னும் இருந்தார்கள். பின்னும் இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளைக் கடுமையாகப் பாதித்த அண்மைய நிகழ்வுகள் கிழக்கில் நடந்த தமிழ்- முஸ்லிம் மோதல்களும் கருணா தலைமையிலான குழு ஒன்றின் பிரிவும் அதன் விளைவான மோதலும் எனலாம். இவற்றுக்குக் காரணமாயிருந்த சக்திகள் பிராந்திய மேலாதிக்கமும் ஏகாதிபத்தியமுமே.

கதிர்காமர் ஏகாதிபத்தியத்துக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கும் உடந்தையாக நடந்து கொண்டார் என்பது உண்மை. எனினும் அவர் சிங்கள மக்களுக்கு என்ன செய்தார் என்பது நம்முடைய கவனத்துக்குரியது. இந்த மண்ணும் மக்களின் உழைப்பும் அந்நியருக்குப் பறிபோவது பற்றி அவருக்கு என்ன அக்கறை இருந்தது? சேது சமுத்திரப் பிரச்சனை பற்றி அவர் இந்தியாவிடம் எதிர்ப்புத் தெரிவித்தாரா? மூலதனம் தென்னிலங்கையில் ஊடுருவி மக்களின் வாழ்வை அழிப்பது பற்றி என்ன செய்தார்? அமெரிக்க ஆதிக்கத்தை அவர் எங்கே எதிர்த்தார்? இவற்றுக்கும் அப்பால் சாதாரண உழைக்கும் சிங்கள மக்களுக்கு கதிர்காமர் என்னத்தைச் செய்தார். கதிர்காமரின் இறுதிக்காலத்தில் அவர் இந்திய மேலாதிக்கத்திற்குச் சிறிது நெருக்கமானார். இதற்கான காரணம் இலங்கையின் அரசியலில் அவர் சார்ந்த முதலாளி வர்க்கக் குழுவை விட அதிகமாக யூஎன்.பியை அமெரிக்கா விரும்பியதும் இந்திய ஆதிக்க வாதிகள் ஜே. வி. பி மூலமும் ஸ்ரீ.ல.சு. கட்சி மூலமும் தமது நலன்களை வற்புறுத்த விரும்பியதுதான். எனினும் இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கு தென்னாசியப் பிராந்திய மேலாதிக்கம் தொடர்பான போட்டி இருந்தாலும், அவற்றுக்கிடையிலான போட்டி பகைமையான முரண்பாடாக இன்னமும் வளரவில்லை என்பதை நாம் மறக்கலாகாது.

இந்த நாட்டை இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கும் அடிமைப்படுத்துவது பற்றி இலங்கையின் ஆளும் அதிகார வர்க்கத்தினருக்குச் சிறிது கூச்சமும் இல்லை. அவர்களிடையே உள்ள முரண்பாடெல்லாம் எந்த ஆதிக்கம் பெரிதாக இருக்க வேண்டும் என்பது பற்றியது மட்டுமே. இலங்கையை அமெரிக்கா மேலாதிக்கம் செய்தாலும் நேரடியாக ஆதிக்கம் செய்தாலும் இந்தியா மூலம் இந்த நாட்டு மக்களுக்கு என்ன நன்மை? இந்தியாவோ வேறு எந்த நாடோ இந்த நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவது மக்களுக்குத் தீங்கானது என்பதை எவரும் மறுக்க முடியாது. கதிர்காமரை துரோகி என்று சொல்பவர்கள் தமிழ் மக்களை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு தான் பேசுகிறார்கள். அவர் மட்டுமல்ல, அவர் சார்ந்த முழு வர்க்கமுமே இந்த நாட்டுக்கும் அதன் உழைக்கும் சகல மக்களுக்கும் நூறாண்டு சுட்கு மேலாகத் துரோகமிழைத்தே வந்துள்ளனர்.

## மேல் கொத்மலை....

1ம் பக்க தொடர்ச்சி...

அதன்படி கடந்தமாதம் 25 ஆம் திகதி பாராளுமன்றக் கட்டிடத்தில் மின்சக்தி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்பேச்சுவார்த்தையில் மே.கொ.எ.ம. இயக்கத்தின் அமைப்பாளர் இ. தம்பையா இலங்கை ஜனநாயக தொழிலாளர் முன்னணியின் உப தலைவர் க. கனகராஜ் , ம.இ.ம தலைவர் சுதாகரன் ம.ம.மு சார்பில் தலவாக்கொல்லை நகரசபையின் உபதலைவர் பாரதிதாசன் ஆகியோர் மேல் கொத்மலைத்திட்டத்தை எதிர்ப்பவர்களின் சார்பில் கலந்து கொண்டனர். அவர்கள் மேல் கொத்மலைத்திட்டத்தை முற்றாக கைவிட வேண்டும் என்பதையே வலியுறுத்தினர். அதனை கைவிட முடியாது என்று அமைச்சர் எடுத்துக் கூறியபோது மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் அதனை கைவிடச்செய்யவைப்பதாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

அமைச்சரின் அதிகாரிகள் அத்திட்டம் பற்றி விளக்கமளிக்க முற்றபட்ட போது அதை பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் நிராகரித்தனர்.

அமைச்சரால் ஏற்பாடு செய்யப்பட்ட தேனீர், மதியபோஷனம் போன்றவற்றிலும் போச்சுவார்த்தைக்கு சென்றவர்கள் பங்கெடுக்கவில்லை. பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் அத்திட்டத்தை முற்றாக கைவிடவேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கும் அறிக்கை ஒன்றை அமைச்சரிடம் கையளித்தனர். அவ்வறிக்கைக்கு ஏற்ப அத்திட்டத்தில் இன்னும் மாற்றங்களை செய்ய முடியுமா என்று பரிசீலிப்பதாக அமைச்சர் கூறினார். மாற்றங்களுக்கான பரிசீலனையை விட முற்றாக நிறுத்த வேண்டும் என்பதையே பேச்சுவார்த்தைக்கு சென்றவர்கள் வலியுறுத்தினர்.

எனினும் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான வேலைகளை அரசாங்கம் செய்வதால் மே. கொ. எ. ம இயக்க செயற்குழு கூடி எதிர்கால எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றி ஆலோசித்ததை அடுத்தே ஒரு மாத கால எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதென தீர்மானித்தது.

அதன்படி செம்டெம்பர் மாதம் முழுவதும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. வீடுகள், பொது இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்க விடுவது சுவரொட்டி இயக்கம் எதிர்ப்பு கூட்டங்கள் நடத்துவது மாணவர் ஆசிரியர் பகிஷ்கரிப்பு, பெருந்தோட்ட தொழிலாளர் வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள் உட்பட பல எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.